'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.



Follow us

தமிழன்
THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 47 சோபகிருது வருடம், ஆவணி மாதம் 08ஆம் திகதி வெள்ளிக்கிழமை (25.08.2023) ஹிஜ்ரி 1445, ஸபர் - 08, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

## அடிப்படையற்ற குற்றச்சாட்டுகள்

### பணியாளர்கள் தொடர்பில் சபாநாயகர் அறிவிப்பு

சபாமண்டபத்தில் சபையின் அலுவல்களை முன்னெடுத்துச் செல்லும்போதும், சில சந்தர்ப்பங்களில் சபா மண்டபத்துக்கு வெளியேயும் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த சில பாராளுமன்ற உறுப்பினர்களினால் பாராளுமன்ற பணியாளர்கள், செயலாளர் குழு மற்றும் அதன் பணியாளர்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்படும் அடிப்படையற்ற குற்றச்சாட்டுகள் அதியுயர் சபையின்...

02 பக்கம்

# தமிழர் நிலைப்பாடு சரியானதே!

## யாழ்ப்பாணத்தில் கருத்து வெளியிட்டார் அமெரிக்கத் தூதுவர் ஜூலி



யாழ்.செய்தியாளர்

''நீங்கள் எதிர்பார்க்கும் புதிய அரசியலமைப்பு இப்போதைக்கு வரும் சாத்தியமில்லாத நிலையில், 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தக் கோரும் உங்களது நகர்வு சரியானது'' என தமிழ்க் கட்சிகளிடம் நேரில் தெரிவித்தார் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்.

யாழ்ப்பாணத்தில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை நேற்றுமுன்தினம் (23) சந்தித்து பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொக்குவில் தனியார் விருந்தினர் விடுதியில் இந்த சந்திப்பு நடந்தது. தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவர் த.சித்தார்த்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன், இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

ஒரு வருடத்தின் பின்னர் யாழ்ப்பாணம் வந்துள்ள அமெரிக்கத்தூதுவர், வடக்கை மையப்படுத்திய அரசியல் விவகாரங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டினார்.

இந்த சந்திப்பின்போது, ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகள், அவரது தேர்தல் வெற்றி வாய்ப்புகள் குறித்து, தமிழ்க் கட்சியின் அபிப்பிராயத்தை அமெரிக்கத் தூதுவர் அறிந்து கொண்டார்.

வடக்கின் காணி அபகரிப்பு, பௌத்த மத ஆக்கிரமிப்பு பற்றியும் கேட்டறிந்தார்.

02 பக்கம்



## சரத் வீரசேகரவை கண்டித்து சட்டத்தரணிகள் போராட்டம்

### முல்லைத்தீவில் இன்று

புகஜிந்தன்




பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர கடந்த 22ஆம் திகதி முல்லைத்தீவு நீதிபதி தொடர்பாக அவதூறு பரப்பும் வகையிலும் நீதித்துறை சுதந்திரத்தை கேள்விக்குட்படுத் தும் வகையிலும் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையை கண்டித்தும் எதிர்ப்புத் தெரிவித்தும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக் கப்படவுள்ளது.

முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கம், இன்று (25)...

02 பக்கம்

## திருமலை விகாரை விவகாரத்தில் ஆளுநர் தீர்மானத்தை ஏற்கோம்

### பாராளுமன்றத்தில் அமைச்சர் விதுர



திருகோணமலை, பொரலுகந்த ரஜமஹா விகாரையின் மகாநாயக்கர் அம்பிட்டிய சீலவன்ச திஸ்ஸ தேரரை விகாரைக்குள் பிரவேசிக்க விடாமல் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மேற்கொண்ட நடவடிக்கை நியாயமற்றது என புத்தசாசன மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அத்துரலியே ரத்ன தேரர் சபையில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், தேரரை ஆலயத்துக்குள் பிரவேசிப்பதைத் தடுக்கும் கிழக்கு மாகாண ஆளுநரின்...

02 பக்கம்

## இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் அடுத்த மாதம் இலங்கை வருகை



இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் அடுத்த மாத தொடக்கத்தில் இலங்கைக்கு வருகைதந்து திருகோணமலைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

அவர் செப்டெம்பர் 02 அல்லது 03ஆம் திகதி நாட்டுக்கு வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விஜயத்தின்போது அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இலங்கையும் இந்தியாவும் தரைப்பாலம் மற்றும் தேசிய மின் கட்டமைப்புகளின் இணைப்பு உள்ளிட்ட இணைப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்த இரு நாட்டு உயர்மட்டத்தில்...

02 பக்கம்

## இலங்கை அனுப்பிய ரொக்கெட் செலவென்ன?

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பாராளுமன்றத்தில் கேள்வி



இந்தியா 2008, 2019 மற்றும் 2023 ஆகிய வருடங்களில் முறையே சந்திரயான் 1, 2 மற்றும் 3 என மூன்று தடவைகள் முயற்சிகளை மேற்கொண்டு இறுதியாக எப்படியோ நிலவை அடைந்துள்ளது.

எனினும், இந்த 03 செயல்முறைகளுக்கும் 263 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மட்டுமே செலவிடப்பட்டுள்ளன.

2012ஆம் ஆண்டு நமது நாட்டிலிருந்து அனுப்பப்பட்டதாகக் கூறப்படும் சுப்ரீம் சாட் 1 செயற்கைக்கோளுக்கு 320 மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டுள்ளன.

இது தொடர்பான அறிக்கை ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (24) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

02 பக்கம்

## சந்திரயான் வெற்றிக்கு ரணிலும் வாழ்த்து



சந்திரயான் - 3 விண்கலத்தை வெற்றிகரமாக சந்திரனின் தென் துருவத்தில் தரையிறக்கியதன் மூலம் இந்தியா அடைந்துள்ள தனித்துவமான சாதனைக்காக இந்தியப் பிரதமர் உள்ளிட்ட நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு விசேட வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியா பெற்றுள்ள இந்த மாபெரும் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி தொடர்பில் அண்டை சகோதர நாடாக இலங்கையும் பெருமிதம் கொள்வதாக மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பிரதமருக்கு அனுப்பியுள்ள முழுமையான வாழ்த்துச்...

02 பக்கம்

## சந்திர மண்டலத்தை பாரதம் தொடும்போது இங்கே தரைக்கு கீழே தொல்பொருள் தேடல்

### மனோ கணேசன் எம்.பி. தெரிவிப்பு



சந்திரனில் தடம்பதித்த நான்காவது நாடாகவும் நிலவின் தென்முனையில் விண்கலத்தை இறக்கிய முதலாவது நாடாகவும் பாரதம் சரித்திரம் படைத்துள்ளது. இந்திய மக்களுக்கும் அரசுக்கும் குறிப்பாக இந்திய இஸ்ரோ நிறுவனத்தின் "மூன்-ப்ரொஜெக்ட்" வேலைத்திட்ட பணிப்பாளர் வீரமுத்துவேல் தலைமையிலான விஞ்ஞான தொழில்நுட்ப அணிக்கும் மனமார்ந்த வாழ்த்துகள்.

இந்த சாதனையை எண்ணி, தென்னாசிய நாட்டவராகவும் இந்திய வம்சாவளி தமிழராகவும் பெருமையடைகிறேன். ஆனால், வானத்தில் ஏறி சந்திர மண்டல வாசலை பாரதம்...

02 பக்கம்

## இலங்கையின் தற்போதைய நிலையை ஐ.நாவுக்கு கொண்டு செல்ல வேண்டும்

### சி.வி.கே.சிவஞானம் யாழில் தெரிவிப்பு

புகஜிந்தன்

அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கையின் தற்போதைய நிலையை ஐ.நாவுக்கு கொண்டு செல்ல வேண்டும் என வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் (23) தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் சிலரை சந்தித்து கலந்துரையாடினார்.

குறித்த சந்திப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து...

02 பக்கம்






ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிக்க உருவாக்கப்படவுள்ள புதிய அரசியல் கூட்டணியின் தலைமைத்துவத்தை யார் பொறுப்பேற்பது என்பதில் சர்ச்சை ஏற்பட்டுள்ளதாம்.

இது விடயத்தில் அனுர பிரியதர்ஷன யாப்பா, நிமல் லான்சா ஆகியோருக்கிடையில் கடும் போட்டி உருவாகியுள்ளதாம்.

## செயலாளராக பதவிவகிக்க திஸ்ஸவுக்கு தடையில்லை



லங்கா சமசமாஜக் கட்சியின் செயலாளராக பேராசிரியர் திஸ்ஸ விதாரண செயற்படத் தடைவிதிக்கக்கோரிய வழக்கை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

கட்சியின் செயலாளராக பதவியேற்றதாக கூறப்படும் டபிள்யூ. அபேசேன, திஸ்ஸ விதாரண செயலாளராக பதவி வகிக்க தடைவிதிக்க கோரியிருந்தார்.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம், திஸ்ஸ விதாரண செயலாளராக பதவிவகிக்க இடைக்கால தடைவிதித்து ஜூலை 17ஆம் திகதி உத்தரவு பிறப்பித்தது.

தடை உத்தரவுக்கு எதிராக பேராசிரியர் திஸ்ஸ விதாரண முன்வைத்த காரணங்களை பரிசீலித்த கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான, தடை உத்தரவை கலைத்து இடைக்கால தடை உத்தரவை பிறப்பிக்க மறுத்தார்.

இதன்படி, கட்சியின் செயலாளராக பேராசிரியர் விதாரண தொடர்ந்தும் பதவி வகிக்க முடியும்.

## சந்திரயான்-3 விண்கலம் சாதனை: இந்தியாவுக்கு சபையில் வாழ்த்து







சந்திரயான் - 3 விண்கலம் நிலவுக்கு சென்றமைக்கு பாராளுமன்றத்தில் நேற்றுக்(24) காலை வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்ச ஆகியோரும் தமது வாழ்த்துகளை தெரிவித்தனர்.

''அண்டைநாடு என்ற வகையில் இந்தியாவின் இந்த சாதனையில் இலங்கையும் பெருமையடைவதாக'' சஜித் பிரேமதாச குறிப்பிட்டார்.

''எமது அண்டை நாடான இந்தியா சந்திரயான் -3 விண்கலத்தை வெற்றிகரமாக தரையிறக்கியுள்ளமையை பாராட்டுகிறேன்'' என சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

02 பக்கம்

### கமெண்ட் சுந்தர்...



நிலவுக்கே விண்கலம் அனுப்பிய உங்களால இந்த சாதாரண 13ஆவது திருத்த பிரச்சினைய தீர்த்துவைக்க முடியாதோ என்று யாராவது இந்தியாட்ட கேட்பார்களா என்று பார்ப்பம்..

# இனமுறுகல் ஏற்படும் வாய்ப்பில்லை: சிலர் அதனை ஏற்படுத்த முயற்சி!

## பிரமித்த பண்டார தென்னகோன் சபையில் தெரிவிப்பு

நாட்டில் மீண்டும் இனவாத முரண்பாடுகள் ஏற்படும் வகையிலான சூழல் உருவாகியுள்ளதாக சர்வதேச புலனாய்வுப் பிரிவிலிருந்து எந்த தகவலும் கிடைக்கவில்லை என்றும் ஆனால் ஒருசில பிரதேசங்களில் ஒருசில குழுக்கள் அரசியல் நோக்கங்களுக்காக இனவாத பிரச்சினைகளை தீவிரப்படுத்த கடும் முயற்சி எடுத்து வருவதாக தேசிய புலனாய்வுப் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் சபையில் நேற்று (24) அறிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்றுவரும் ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தேசிய பாதுகாப்பு தொடர்பில், இலங்கையில் மீண்டும் இனவாத மோதல்கள் இடம்பெறும் வாய்ப்புகள் இருப்பதாக சர்வதேச புலனாய்வுப் பிரிவு தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளதாக இன்று(நேற்று) காலையில் சில சமூக வலைத்தளங்களிலும் இந்த செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன. எதிர்க்கட்சி தலைவரும் இதுதொடர்பில் சபையில் கேள்வி எழுப்பியிருந்தார்.

அவ்வாறு, எந்தவொரு வெளிநாட்டு புலனாய்வு பிரிவிடமிருந்தோ அல்லது நிறுவனத்திடமிருந்தோ தேசிய பாதுகாப்பு தொடர்பிலும் இனவாத முரண்பாடுகள் தொடர்பிலும் எமக்கு எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லை. மிகவும் பொறுப்புடன் இதனை கூறுகிறேன்.

அதேபோன்று, முகப்புத்தகம் போன்றவற்றில் வெளியிடப்படும் கட்டுக் கதைகளுக்கும் எந்நேரமும் எம்மால் பதிலளித்துக்கொண்டும் இருக்க முடியாது. அதனால், இதுதொடர்பில் முதலில் பாராளுமன்றத்துக்கு கருத்து தெரிவிப்பேன். ஆனாலும், தற்போது எமது நாட்டில் ஒருசில இடங்களில் ஒருசில குழுக்கள் அரசியல் நோக்கங்களுக்காக நாட்டில் இனவாத பிரச்சினையை உருவாக்க பல்வேறு முயற்சிகளை எடுத்து வருவதாக எமது புலனாய்வுப் பிரிவு தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

அந்த குழுக்கள் தொடர்பில் பாதுகாப்பு பிரிவும் அரசும் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

முல்லைத்தீவைச் சேர்ந்த அண்டனி ஜெகநாதன் பீட்டர் இளஞ்செழியன் என்பவர், குருந்தி விகாரை தொடர்பில் விசேட அவதானம் செலுத்திவருபவர். அவர் ஒரு கத்தோலிக்கர். இந்த விடயத்தில் அவருக்கு ஏன் இவ்வளவு அக்கறை என்பது பிரச்சினைக்குரிய விடயமாகும். ஆனால், இந்த விடயத்தில் பிரச்சினையை உருவாக்க முயற்சிக்கிறார்கள் என்பது தெளிவாக தெரிகிறது.

மேலும், குருந்தி தொல்லியல் காணியினூடாக பௌத்தத்தின் எதிர்காலமோ அல்லது இந்து சமயத்தின் எதிர்காலமோ தீர்மானிக்கப்படப்போவதில்லை.

30 வருடகால யுத்தத்தை கடந்தும் இன்னும் நாம் பாடம் கற்றுக்கொள்ளவில்லை. இன்னும் இனவாத பிரச்சினையை உருவாக்க முயற்சிப்பவர்களுக்கு எங்களின் கவலையை தெரிவித்துக்கொள்கிறோம்.

எது எவ்வாறாயினும், அவ்வாறான இனவாதப் பிரச்சினையை உருவாக்க புலனாய்வுப் பிரிவும் பாதுகாப்புப் பிரிவும் அரசாங்கமும் இடமளிக்காது என்றார்.

# போலி ஸ்ரிக்கருடன் கூடிய சுமார் 6000 மதுபான போத்தல்கள் மதுவரித் திணைக்களத்தால் மீட்பு

2023.08.10ஆம் திகதி நடைபெற்ற வழிவகைகள் பற்றிய குழுவில் வழங்கப்பட்ட பணிப்புரையின் பின்னர் நாடு முழுவதிலும் நடத்திய சுற்றிவளைப்புகளில் போலியான ஸ்ரிக்கர்களுடன் கூடிய சுமார் 6000 மதுபானப் போத்தல்களை இலங்கை மதுவரித் திணைக்கள அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டிருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையில் அண்மையில் (22) கூடிய வழிவகைகள் பற்றிய குழுவில் தெரியவந்தது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட மதுபானங்களை உற்பத்தி செய்த நிறுவனங்களின் பெயர் பட்டியல், அந்த மதுபானப் போத்தல்களை விற்பனை செய்த விற்பனை நிலையங்கள் மற்றும் தவறிழைத்தவர்களுக்கு எதிராக மதுவரித் திணைக்களத்தினால் எடுக்கப்படவுள்ள சட்ட நடவடிக்கைகள் உள்ளிட்ட அறிக்கையை 31.08.2023ஆம் திகதிக்கு முன்னர் குழுவில் சமர்ப்பிக்குமாறும் வலியுறுத்தப்பட்டது.

போலியான ஸ்ரிக்கர்களுடனான மதுபானங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் அனுமதிப்பத்திரங்களை மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, இரத்துச் செய்வதன் ஊடாக இவ்வாறான மோசடி செயற்பாடுகளை நிறுத்த முடியும் என்றும் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

மதுவரித் திணைக்களத்தின் சில செயற்பாடுகளால் அரசாங்கத்துக்குக் கிடைக்கக் கூடிய வருமானங்கள் இழக்கப்படுவதாக இலங்கை மதுபான அனுமதிப்பத்திர உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் குழுவில் தெரிவித்தனர். இது விடயம் தொடர்பில் திணைக்களத்தினால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் அவற்றுக்கான காலக்கெடு குறித்த அறிவுறுத்தல்கள் ஏற்கனவே மதுவரித் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டிருப்பதாகக் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

செயற்கைக் கள் தயாரிப்பின் ஊடாக அரசாங்கத்துக்கு ஏற்படும் வருமான இழப்புத் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது. இயற்கை கள்ளையும் செயற்கைக் கள்ளையும் பிரித்து அறிவதற்கான தொழில்நுட்ப வசதிகள் இலங்கையில் இருப்பதாகச் சுட்டிக்காட்டிய குழுவின் தலைவர், செயற்கைக் கள் தயாரிப்பைக் கண்டுபிடிப்பதற்காகத் திணைக்களம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்த அறிக்கையொன்றையும் 2023.08.31ஆம் திகதிக்கு முன்னர் குழுவுக்கு வழங்குமாறும் தெரிவித்தார்.

உற்பத்தி செய்யப்படும் மதுபானத்தின் அளவு மற்றும் அது தொடர்பில் செலுத்தப்பட வேண்டிய வரியின் அளவு என்பவற்றை மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் கண்காணிக்கக் கூடிய வகையில் டாஷ் போர்ட் (dash board) ஒன்றைத் தயாரிக்குமாறும் மதுவரிக் கட்டளைச் சட்டத்துக்கு அமைய, மதுபான உற்பத்தி நிறுவனங்கள் சில்லறை விற்பனையில் ஈடுபட முடியாது என்றபோதிலும், அவ்வாறு சில்லறை விற்பனையில் ஈடுபட்டுள்ள மதுபான உற்பத்தியாளர்களின் பெயர்ப் பட்டியலை 2023.08.31ஆம் திகதிக்கு முன்னர் குழுவுக்கு



வழங்குமாறும் குழுவின் தலைவர், மதுவரித் திணைக்களத்துக்கு அறிவுறுத்தினார்.

மதுவரித் திணைக்களத்துக்குச் செலுத்த வேண்டிய நிலுவை வரிகளின் தொகையை கணக்கிடுவதற்கும் நிலுவை வரியைச் செலுத்தாத நிறுவனங்களின் அனுமதிப் பத்திரத்தை தன்னிச்சையாக இரத்துச் செய்யும் முறைமையொன்றை உருவாக்குமாறும் ஒன்லைன் மூலம் மேற்கொள்ளப்படும் மதுபான விற்பனையைத் தற்காலிகமாக நிறுத்தி, இதனைக் கண்காணிப்பதற்கு திட்டமொன்றைத் தயாரிக்குமாறும் வழிவகைகள் பற்றிய குழு, மதுவரித் திணைக்களத்துக்குப் பரிந்துரைத்தது.

அதேநேரம், மதுபானப் போத்தல்களில் ஒட்டப்படும் பாதுகாப்பு ஸ்ரிக்கர்கள் போலியானவையா அல்லது அசலானவையா என்பதை அறிந்துகொள்வதற்கான உரிமை வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதையும் குழுவின் தலைவர் மீண்டும் வலியுறுத்தினார்.

இதில் இராஜாங்க அமைச்சர்களான லசந்த அலகியவண்ண, சிசிர ஜயகொடி, பாராளுமன்ற உறுப்பினர்களான வசந்த யாப்பா பண்டார, நாலக்க கோட்டேகொட, எஸ்.எம்.எம்.முஷாரப் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தமிழர் நிலைப்பாடு சரியானதே!...

குருந்தூர் மலையில் பௌத்த பிக்குகள் தலைமையில் நடக்கும் அட்டகாசத்தை பற்றியும் கேட்டறிந்தார். கடந்த 18ஆம் திகதி நீதிமன்ற தலையீடு காரணமாகவே பொங்க முடிந்ததை தமிழ்த்தரப்பு சுட்டிக்காட்டியது.

அன்றைய தினம் வடக்கு டி.ஐ.ஜியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு சில அறிவுறுத்தல்களை வழங்கியதாக வடக்கு ஆளுநரும் தன்னிடம் கூறியிருந்ததாக அமெரிக்கத் தூதுவர் குறிப்பிட்டார்.

வடக்கில் யாராவது பௌத்தர்கள் இருக்கிறார்களா என அமெரிக்கத் தூதுவர் இங்கு கேட்டார். அப்படி யாரும் இல்லையென்பதையும் தற்போது இராணுவத்திடம் சம்பளம் பெறும் ஒருவர், நிவாரணம் வழங்குவதாக ஏழை மக்களை ஏமாற்றி, தமிழர்களுக்கு எதிராக பல்வேறு கூத்தாடினாலும் அதை சமூகம் கண்டுகொள்ளவில்லையென்பதையும் சுட்டிக்காட்டினர்.

தேர்தலில் ஜே.வி.பியின் வெற்றி வாய்ப்பு எப்படியிருக்கும் என்பதையும் அமெரிக்கத் தூதுவர் கேட்டறிந்தார். காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுவிப்பு விவகாரங்களின் தற்போதைய நிலை பற்றியும் கேட்டறிந்தார். மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் உள்ள சிக்கல், புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உள்ளிட்ட விடயங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. தமிழ் இளைஞர்கள் பெருந்தொகையாக நாட்டை விட்டு வெளியேறுவது பற்றியும் கேட்டறிந்தார். இதனால் ஏற்படும் சாதக, பாதகங்கள் பற்றியும் தூதுவர் விரிவாக கேட்டறிந்தார்.

## அடிப்படையற்ற...

கௌரவத்துக்குப் பொருத்தமற்றவை அல்லது ஏற்புடையவை அல்ல என சபையின் கவனத்துக்குக் கொண்டு வருவதாக சபாநாயகரின் அறிவிப்பை அறிவித்த பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ நேற்று (24) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

குறிப்பாக, சபை அலுவல்களை முன்னெடுத்துச் செல்லும்போது பாராளுமன்ற பாரம்பரியங்கள் மற்றும் நடைமுறைகளுக்கு அமைய இந்தப் பணிகளை சுயாதீனமாக மற்றும் பக்கச்சார்பற்ற முறையில் நிறைவேற்றுவதற்கு சபாநாயகர் அல்லது சபைக்குத் தலைமைதாங்கும் உறுப்பினருக்கு ஆலோசனை வழங்கும் அல்லது உதவும் அதிகாரிகள் என்ற ரீதியில் அரசியலமைப்புக்கமைய, அரசியலமைப்பின் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்ற செயலாளர் குழுவுக்கு, சுயாதீனமாக அல்லது பக்கச்சார்பற்ற முறையில் செயற்படுவதைத் தடுப்பதற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இவ்வாறான நடவடிக்கைகள் அமையலாம் என்பதால், இதுபோன்று பாராளுமன்ற செயலாளர் குழுவில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் அதனுடன் இணைந்த பணியாளர்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல்கள், அடிப்படை அற்ற குற்றச்சாட்டுகளை மேற்கொள்வதிலிருந்து தவிர்ந்துக்கொள்ளுமாறும் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்வதாக அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இந்தியப் பாதுகாப்பு...

ஒப்புக்கொண்டுள்ள சூழலில் இந்த விஜயம் நடைபெறுவதால் முக்கியத்துவம் பெறுகிறது.

தவிர, சீன ஆராய்ச்சிக் கப்பலான 'ஷி யான் 6' வருவதற்கு முன்னதாகவே இந்திய அமைச்சரின் வருகை திட்டமிடப்பட்டுள்ளது. இது குறித்து இந்தியா ஏற்கனவே கவலை தெரிவித்துள்ளது. எனினும், சீனக் கப்பலின் வருகைக்கு இலங்கை இன்னும் அனுமதி வழங்கவில்லை.

## சரத் வீரசேகரவை...

காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரை நீதிமன்ற நடவடிக்கைகளை புறக்கணித்து அடையாள கண்டன போராட்டத்தை நடத்த ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

இந்த அடையாள புறக்கணிப்பு போராட்டத்துக்கு ஆதரவளிக்கும் வகையில் ஏனைய கிளைச் சங்கங்களும் தத்தமது நீதிமன்றங்களில் குறித்த அடையாள கண்டன போராட்டத்தினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## சந்திரயான் வெற்றிக்கு...

செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

“நரேந்திர மோடி அவர்களுக்கு, சந்திராயன் - 3 விண்கலத்தை சந்திரனின் தென் துருவத்தில் முதன்முறையாக வெற்றிகரமாக தரையிறக்கி இந்தியாவின் தனித்துவமான சாதனைக்காக உங்களுக்கும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ குழுவினருக்கும் இந்திய மக்களுக்கும் எனதும் அனைத்து இலங்கைமக்களினதும் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். அண்டை சகோதர நாடுகளான இந்தியாவும் இலங்கையும் தனித்துவமான நீண்ட கால நட்பைக் கொண்டுள்ளன. தெற்காசிய குடும்ப உறுப்பினர்கள் என்ற வகையில், இந்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த சாதனையை நாங்கள் பெருமையு டன் கொண்டாடுகிறோம். அனைத்து மனித குலத்துக்காகவும் செய்யப்ப டும் இந்த அர்ப்பணிப்பு, உங்களது உன்னத குணத்தை உலகுக்கு பிரதிபலிக்கும் சந்தர்ப்பமாக குறிப்பிடலாம். இது சந்தேகத்துக்கிடமின்றி எதிர்கால சந்ததியினரை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் தொடர்ச்சியான முன்னேற்றத்தை அடைய ஊக்குவிக்கும்.

சூரியக் குடும்பத்தில் உள்ள ஏனைய கிரகங்களை ஆராய்வதற்கான உங்கள் எதிர்கால இலக்கை அடைவதற்கு உங்களுக்கும் அனைத்து விஞ்ஞானிகளுக்கும் நல்வாழ்த்துத் தெரிவிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறேன்.

## இலங்கை அனுப்பிய...

இந்தியாவில் 03 முறை முயற்சித்தும் செலவழித்த பணத்தை விட நம் நாட்டிலிருந்து அனுப்பப்பட்டதாக கூறப்படும் செயற்கைக் கோளுக்கான செலவு அதிகம் என்றும் இதற்காக செலவிடப்பட்ட 320 மில்லியன் டொலர்களுக்கு என்ன ஆனது என்பது குறித்த அறிக்கையை உடனடியாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் நிலவில் இறங்குவது எப்படி போனாலும், நாட்டை வங்குரோத்தாக்குவதற்கு இதுவும் காரணமே என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு மேலும் தெரிவித்தார்.

## திருமலை விகாரை...

தீர்மானத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது என தெரிவித்தார். அமைச்சர் மேலும் கூறியதாவது,

இவ்விவகாரம் தொடர்பாக இரண்டு நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் உள்ளதால், அது தொடர்பான விவரங்களை வெளியிடும் நிலை இல்லை.

இந்த விவகாரம் தொடர்பாக இரண்டு நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் உள்ளதால், பொறுப்புள்ள பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் விவரங்களைக் கூறுவதைத் தவிர்க்கிறேன்.

மேலும், அண்மைக்காலத்தில் பெருமளவிலான தொல்பொருள் இடங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

சில தளங்கள் புதையல் வேட்டைக்காரர்களால் அழிக்கப்பட்டுள்ளன, மற்றவை ஒழுங்கமைக் கப்பட்ட குழுக்களால் அழிக்கப்பட்டுள்ளன.

நாகச்சோலை காப்புக்காடு உட்பட வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள சில விகாரைகள் தொடர்பாக பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. அங்கு ஆராம வளாகம் இருந்தமை கண்டறியப் பட்டுள்ளது. குருந்தி விகாரை தொடர்பாகவும் தேரர் தெரிவித்தார்.

போரினால் இடம்பெயர்ந்த தமிழர்களுக்கு காணி பகிர்ந்தளிப்பதை எவரும் எதிர்க்கவில்லை, ஆனால் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தொல்பொருள் இடங்களைப் பாதுகாப்பதும் முக்கியமானது.

எவ்வாறாயினும், பிரச்சினைகளை சுமுகமாக தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் - என அமைச்சர் உறுதியளித்தார்.

### கிழக்கு ஆளுநரின் அதிகார துஷ்பிரயோகம் - அத்துரலியே ரத்ன தேரர் சபையில் கண்டனம்

திருகோணமலை, பட்டினமும் சூழலும் பிரதேச சபைக்குட்பட்ட 60 பேர்ச்சஸ் காணி, பௌத்த மடமொன்றை அமைப்பதற்காக சட்ட அனுமதி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இருக்கையில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் சம்பந்தப்பட்ட பிரதேச சபையும் அந்த காணிக்குள் பிரவேசிப்பதற்கு தடைவிதிக்க உத்தரவு பிறப்பித்துள்ளனர். இவ்வாறு உத்தரவை பிறப்பிக்கும் அதிகாரம் ஆளுநருக்கு இல்லை. இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் நேரடியாக கவனம் செலுத்த வேண்டும் என எங்கள் மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் நேற்று (24) சபையில் கோரிக்கை முன்வைத்தார்.

சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு சிறப்புரிமை கேள்வியை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவரின் உரை வருமாறு,

திருகோணமலை, பட்டினமும் சூழலும் பிரதேச சபைக்குட்பட்ட தொல்பொருள் ஆதாரம் கொண்ட நிலப்பரப்பாகும். இந்த நிலப்பரப்பில் 60 பேர்ச்சஸ் காணியில் மடமொன்றை அமைப்பதற்கான ஆவணங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. இறுதியான உத்தியோகபூர்வ கடிதமும் சில வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டுள்ளது.

வெல்கம்வெஹர விகாரையிலிருந்து இந்த இடத்துக்கு 04கிலோ மீற்றர் தூரமே இருக்கிறது. அந்த விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சீலவன்ச திஸ்ஸ தேரருக்கு இந்த காணி வழங்கப்பட்டுள்ளது. சட்டரீதியாக இந்த நிலப்பரப்பை சுத்தம் செய்து அங்கு குடியேற சென்றபோது தமிழர்கள் சிலர் அங்கு பதாதைகளை ஏந்தி எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இதுதொடர்பில், இதுவரையில் அந்த பிரதேசத்தில் சாதாரண பொதுமக்களின் எதிர்ப்பு எதுவும் ஏற்படட்டதில்லை. எனவே, இந்த சம்பவத்தை அடிப்படையாக கொண்டு புதிதாக நியமிக்கப்பட்ட கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், அம்பிட்டிய சீலவங்ச திஸ்ஸ தேரருக்கு இந்த பகுதிக்கு பிரவேசிப்பதை தவிர்ப்பதற்கு தடை உத்தரவொன்றை பெற்றுக்கொடுக்குமாறு பட்டினமும் சூழலும் நகரசபை செயலாளரிடம் கோரியுள்ளார்.

இந்நிலையில், ஆளுநரின் கோரிக்கைக்கமைய அந்த நிலப்பரப்புக்குள் பிரவேசிக்க நகரசபை தடை விதித்துள்ளது. ஆனால், அவ்வாறு தன்னிச்சையாக தடை உத்தரவை பிறப்பிக்க ஆளுநருக்கோ, பிரதேச சபைக்கோ அதிகாரம் இல்லை. அரசாங்கமே தலையிட்டிருக்க வேண்டும்.

சட்டபூர்வமாக வழங்கப்பட்ட காணியொன்றுக்கு பிரவேசிக்க தடைவிதிப்பது சட்டவிரோத செயற்பாடாகும். இந்த மாகாணத்தில் இதுவரையில் தமிழ் மக்களாலோ அல்லது அங்குள்ள தமிழ் அரசியல்வாதிகளினாலோ இதுபோன்ற எதிர்ப்புகள் எழுந்ததில்லை. உயர்மட்ட சூழ்ச்சி செய்யக்கூடிய நபரொருவர் இந்த பிரச்சினையை திட்டமிட்ட வகையில் உருவாக்கியுள்ளார் என்பது உறுதியாகின்றது.

இதேவேளை, மகாவம்சம் மற்றும் வரலாற்று நூல்களில் குருந்தூர் மலை பற்றி பேசப்பட்டுள்ளது. ஆரம்பக்கட்ட பௌத்த ஆதாரங்கள் இந்த விகாரையிலேயே இருக்கின்றன. இந்த விகாரைக்கு பல்வேறு சிறப்பம்சங்களும் இருக்கின்றன.

அவ்வாறிருக்கையில், அங்கு கடமையாற்றி வரும் கலிகமுவே சந்தபோதி தேரருக்கு அந்த பிரதேசத்துக்கு செல்லவும் அங்கு தங்கியிருக்கவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதற்காக பொருள் பௌத்த சமய விவகாரங்கள் திணைக்களத்துக்கு வழங்கியுள்ளபோதிலும் எதற்காக இதுபோன்ற செயற்பாடுகள் இடம்பெறுகின்றன என்பது புரியவில்லை.

தமிழ் மக்களின் விவசாயத்துக்காக சட்ட ரீதியாக காணிகளை பெற்றுக்கொடுப்பதற்கு நாங்கள் எந்த எதிர்ப்பையும் வெளியிட போவதில்லை. அதேபோன்று, வனஜீவராசிகளுக்கு சொந்தமான காணிகளையும் தொல்லியல் ஆதாரங்கள் கொண்ட காணிகளையும் பாதுகாக்கவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். இனவாத கப்பமின்றி விவசாயத் திணைக்களமே விவசாயிகளுக்கு அந்தக் காணிகளை பெற்றுக்கொடுக்கவேண்டும். அவ்வாறிருக்கையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது அரசியல் நோக்கங்களுக்காக வனஜீவராசிகள் காணிகளையும் தொல்லியல் காணிகளையும் பகிர்ந்தளிக்கும் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்தவேண்டும்.

நீதியான முறையில் காணிகளை பெற்றுக்கொடுப்பதற்காக சகல தரப்பும் பிரதிநிதித்துவமாகும் வகையில் காணி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படவேண்டும். இனவாதத்தை சீர்தூக்கி மீண்டும் நாட்டில் போர் நிலையை உருவாக்கும் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்தவேண்டும். இது தமிழ், சிங்கள மக்களின் பொறுப்பாகும். குறுகிய நோக்கத்துக்காக செயற்பட்டால் வெளிநாட்டு அதிகார சக்திகளின் தேவைக்காக எமது நாடு இயங்குவதை தடுக்க முடியாது. இனவாதமின்றி நடுநிலையாக செயற்பட வேண்டும் என்பதே எனது கோரிக்கையாகும் என்றார்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board
புதன்கிழமை 2023.08.23
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5215 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,020,376.00
ஆங்கில எழுத்து X — வெற்றி இலக்கங்கள் 8 9 9 3 5 9

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3457 — சீட்டிழுப்பு திகதி 2023.08.23 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 60,294,870.80
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 17 20 25 55 — விசேட எழுத்து L — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 59935

லக்கி 7 — திகதி 23.08.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0041
வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 9 2 9 4 6 0
L7 இலக்கம் 1 0 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,070,364.40

தன நிதானய — தேதி 2023/08/23 — சீட்டிழுப்பு இலக்கம் 1245 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 106,427,587.20
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 02 05 10 53 — விஷேட ஆங்கில எழுத்து G
Double Chance இலக்கம் 18112

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் — சீட்டிழுப்பு திகதி 2023-08-23 — 524 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,935,049.20
வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 11 40 46 58 — விசேட இலக்கினம் மேஷம்

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1563 — 23/08/2023 — Double Chance 66516 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 405,172,324.00
ஆங்கில எழுத்து F — சுப்பர் இலக்கம் 13 — வெற்றி இலக்கங்கள் 07 62 64 67
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

## சந்திரயான்-3 விண்கலம்...

தொடர்ந்து, “இந்தியாவில் எவ்வகையான முரண்பாடுகள் இருந்தாலும் ஓரணியில் அவர்கள் செயற்படுவதே இவ்வாறான சாதனைகளுக்கு அடிப்படையாக இருப்பதாக” விமல் வீரவங்ச இதன்போது தெரிவித்தார்.

சந்திரயான்-3 விண்கலத்தை வெற்றிகரமாக சந்திரனில் தரையிறக்கிய இந்திய அரசாங்கத்துக்கு வாழ்த்து தெரிவிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

“சந்திரயான்-3 விண்கலத்தை இந்தியா வெற்றிகரமாக தரையிறக்கியுள்ளது. ஜூலை 14ஆம் திகதி விண்ணில் ஏவப்பட்ட சந்திரயான்-3, தனது பயணத்தை முடித்துக்கொண்டு நிலவின் தென் துருவத்தை அடைந்துள்ளது. இதுவரை இவ்வாறு வெற்றிகரமாக விண்கலத்தை சந்திரனின் தென் துருவத்தில் தரையிறக்கிய ஒரே நாடு இந்தியா என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தியாவின் சந்திராயன்-3 விண்கலம் மூலம் கொண்டுச் செல்லப்பட்ட விக்ரம் லேண்டர் சந்திரனில் தரையிறங்கியுள்ளது.

இதன்படி, சந்திரனின் தென்துருவத்தில் விண்கலத்தை இறக்கிய முதலாவது நாடாக இந்தியா வரலாறு படைத்துள்ளது. அங்கு ரோவர் ஊடாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தெற்காசியாவில் உள்ள நாடு இவ்வாறான பணியை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக இந்திய அரசாங்கத்துக்கும் இந்திய மக்களுக்கும் நாங்கள் எங்களின் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறோம்” என்றார்.

இதேவேளை, சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த குறிப்பிடுகையில்,

“இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் சிறந்த விஞ்ஞானி, 2020க்குள் என அவருக்கு ஒரு இலக்கு இருந்தது. அவரின் கனவுதான் இன்று நிஜமாகி இருக்கிறது. எனவே, எந்த வேலைத்திட்டத்துக்கும் இலக்கு இருக்கவேண்டும் என்பது இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்” என்றார்.

## இலங்கையின் தற்போதைய...

தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்கத் தூதுவருடன் இரண்டு விடயங்கள் பேசப்பட்டன. பாராளுமன்றத்துக்கு இந்த விடயங்களை பாரப்படுத்த வேண்டிய தேவையில்லை, அரசியலமைப்பில் இருக்கின்ற விடயங்களை ஜனாதிபதி அமுல்படுத்த முடியும்.

ஆனால் அவரே 13ஆவது திருத்தத்தை நான் அமுல்படுத்துவேன் என்று சொல்லுகிறார். அப்படி இல்லை என்று எதிர்ப்பவர்கள் மாகாண சபை முறைமையை இல்லாது செய்யச் சொல்லுகின்றார்கள். இதை பார்க்கும்போது அவரே மறைமுகமாக இதனை சொல்லி இருக்கின்றார் என தெரிகிறது.

வரி விதிப்பை பொறுத்தவரை கோட்டபாயவுக்கும் தவறான ஆலோசனை வழங்கப்பட்டு தான் பொருளாதாரப் பிரச்சினை நாட்டுக்கு வந்தது. தற்போது இவர்களும் கல்விமான்கள், வைத்தியர்கள் போன்றோருக்கு புதிதாக வரி விதிப்பதன் மூலம் அவர்கள் வெளிநாடு போகின்ற போது அது மக்களையே பாதிக்கப்போகிறது.

ஆனபடியால் அமெரிக்கா போன்ற நாடுகள் இந்த விடயங்களை இனி ஐக்கிய நாடுகள் மட்டத்துக்கு கொண்டு செல்ல வேண்டும் எனத் தெரிவித்தார்.

## சந்திர மண்டலத்தை...

தொடும் போது, நாம் தரைக்கு கீழே தொல்பொருளை தேடுகிறோம் என்ற உண்மையை உணர்ந்து வருந்துகிறேன் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

மனோ எம்.பி. மேலும் கூறியுள்ளதாவது,

பாரதம் தந்த 13ஏ மாகாணசபையும் இன்று குருந்தூர் மலையில் ஏறி விழுந்து நிற்கிறது. அது காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் என்று இழுபறிபடுகிறது. சரித்திரத்தில் இருந்து பாடம் படிப்பதற்கு பதிலாக, எல்லா பிரச்சினைகளுக்கும் சரித்திரத்துக்குள் நுழைந்து பதில் தேடும் தோற்றுப்போன நாட்டவராக நாம் இன்று இருக்கிறோம்.

தொல்பொருள் அகழாய்வு பிரதேசம், மதங்களுக்கும், மத நிகழ்வுகளுக்கும் இடம் தராத பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக இருக்க வேண்டும். அது தொடர்பான எல்லா வரலாறு உண்மைகளையும் ஆவனப்படுத்தி ஆர்வலர்களுக்கு எடுத்து கூறும் அரச நிறுவனமாக இருக்க வேண்டும் என்ற முற்போக்கான சிந்தனையறிவு எமக்கு இல்லை. ஆகவே, ஒருநாள், மாலைதீவும் இப்படி “மூன்-ரொக்கட்” அனுப்பும் வரை நாம் இப்படி தொல்பொருளாராட்சியில் தேடி மோதிக்கொண்டே இருப்போம்.

# பல்கலைக்கழகக் கட்டமைப்பு வீழ்ச்சி செயலணியமைத்து அறிக்கை சமர்ப்பிக்குக

## கல்வி அமைச்சின் செயலாளருக்கு கோப் குழு பணிப்பு





இந்நாட்டில் பல்கலைக்கழகக் கட்டமைப்பு வீழ்ச்சியடையும் அபாயம் ஏற்பட்டுள்ள பின்னணியில் இரண்டு வாரங்களுக்குள் செயலணியொன்றை நியமித்து இது தொடர்பான அறிக்கையை வழங்குமாறு கல்வியமைச்சின் செயலாளருக்கு அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு அறிவித்துள்ளது.

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்) பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தலைமையில் கடந்த 22 ஆம் திகதி கூடியது.அதன்போதே மேற்கண்ட உத்தரவு விடுக்கப்பட்டது.

இதன்போது 2023 மார்ச் 24 ஆம் திகதி நடைபெற்ற கோப் குழுக் கூட்டத்தில் விடுக்கப்பட்ட பரிந்துரையின்படி, அனைத்து அரச பல்கலைக்கழக கட்டமைப்பையும் நவீனமயமாக்குவதற்காக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தால் தயாரிக்கப்பட்ட தேசிய மூலோபாயத் திட்டம் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

கல்வியமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் எம். பத்மலால் உள்ளிட்டோர் இக்கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக நிர்வாகம் தொடர்பில் கௌரவமான பெயரைக் கொண்டிருப்பதனால் அரச பல்கலைக்கழக கட்டமைப்பை நவீனமயமாக்குவதற்கான தேசிய மூலோபாயத் திட்டத்தைத் தயாரிக்கும் பொறுப்பு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திடம் வழங்கப்பட்டது எனவும் இது பாராளுமன்றத்தால் அந்தப் பல்கலைக்கழகத்துக்குக் கிடைத்த கௌரவமாகக் கருதப்பட வேண்டுமெனவும் குழுவின் தலைவர் தெரிவித்தார். அத்துடன், இதற்காக அர்ப்பணித்த கல்வியமைச்சு, ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் உள்ளிட்ட நிர்வாகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் சிரேஷ்ட பேராசிரியர் திசா பண்டார உள்ளிட்ட குழுவினருக்கு விசேட நன்றிகளைத் தெரிவிப்பதாகவும் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு பல்கலைக்கழகத்துக்கும் தனித்துவமான சூழ்நிலைகள் இருப்பதால், அந்த அனைத்து விடயங்களிலும் கவனம் செலுத்துவதன் மூலம் இந்த வரைபின் பிரகாரம் செயற்பட முடியும் என சிரேஷ்ட பேராசிரியர் திசா பண்டார சுட்டிக்காட்டினார்.

இந்நாட்டில் பல்கலைக்கழகக் கட்டமைப்பு வீழ்ச்சியடையும் அபாயம் ஏற்பட்டுள்ள பின்னணியில், இரண்டு வாரங்களுக்குள் செயலணியொன்றை நியமித்து இது தொடர்பான அறிக்கையை வழங்குமாறு கல்வியமைச்சின் செயலாளருக்கு குழு அறிவித்தது.

அனைத்து பல்கலைக்கழகக் கட்டமைப்பையும் வீழ்த்துவதற்கு ஒருசில சிறிய மாணவர் குழுவுக்கு இடமளிக்கக் கூடாது என்றும் கோப் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார். அத்துடன், பல்கலைக்கழகங்களின் தரத்தைப் பேண வேண்டிய பொறுப்பு மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் உள்ளதாக கோப் குழுத் தலைவர் தெரிவித்தார்.

அத்துடன், இந்நாட்டிலுள்ள சுமார் 50% பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சிப் பல்கலைக்கழகங்களாக மாற வேண்டும் என்றும் பேராசிரியர் ரஞ்சித் பண்டார சுட்டிக்காட்டினார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் 12,992 இருக்க வேண்டியிருந்தாலும், தற்போது 6,548 விரிவுரையாளர்களே பணிபுரிந்து வருவதாக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார். அத்துடன், கல்விசாரா பணியாளர்களிலும் இந்த நிலைமையைக் காணக்கூடியதாக உள்ளதால் இதனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார். அத்துடன், இந்நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலையில் விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது சிக்கலாக மாறியுள்ளதாகவும் குறைந்தபட்சம் 1,000 விரிவுரையாளர்களை இணைத்துக்கொள்ள வேண்டும் எனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர்களான ஜகத் புஷ்பகுமார, சாந்த பண்டார, பாராளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, இரான் விக்கிரமரத்ன, உபுல் மஹேந்திர ராஜபக்ஷ, மதுர விதானகே மற்றும் சரித ஹேரத் ஆகியோர் இந்தக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# இந்திய உதவியுடன் திருகோணமலை பொருளாதார மையமாக அபிவிருத்தி

## ஜனாதிபதி ரணில்



1980களில் மகாவலி அபிவிருத்தித் திட்டம் செயற்படுத்தப்பட்டது போன்று கிழக்கு அபிவிருத்தித் திட்டமும் துரிதப்படுத்தப்பட்டு நாட்டின் பொருளாதாரத்துக்கு புத்துயிரளிக்கும் சூழல் ஒன்று உருவாக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



இந்தியாவின் உதவியுடன் திருகோணமலையை வலுசக்தி, போக்குவரத்து, துறை முகம், கப்பற்றுறை, விமானம் , கைத்தொழில் மற்றும் சுற்றுலா மையமாக அபிவிருத்தி செய்யும் இலக்குடன் கூடிய வேலைத்திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

திருகோணமலை விமானப்படை தளத்தில் நேற்று (24) இடம்பெற்ற திருகோணமலை அபிவிருத்தி தொடர்பான விசேட கூட்டத்தில் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மாவட்டத்தில் உள்ள அரச காணிகள் மற்றும் மகாவலி காணிகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பில் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், 2019-2023 காலப்பகுதியில் அந்தக் காணிகளை வழங்குதல் குறித்து அறிக்கையொன்றை தமக்கு வழங்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவித்தார்.

அபிவிருத்திச் செயன்முறையில் காணிகள் முதன்மையான காரணியாகும் எனவும் அதில் சரியான முகாமைத்துவத்துடன் பேணப்படாவிட்டால், எதிர்பார்க்கும் அபிவிருத்தி இலக்குகளை அடைய முடியாது எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது தெரிவித்தார்.

அத்துடன், போட்டிபோட்டுக்கொண்டு மத வழிபாட்டுத் தலங்கள் அமைப்பதை நிறுத்துமாறும் எதிர்காலத்தில் திருகோணமலை மாவட்டத்தில் மத வழிபாட்டுத் தலங்களை நிர்மாணிக்கும்போது, ஆளுநர், மாவட்ட அரசியல் தலைவர்கள் மற்றும் அரச அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து முடிவெடுக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

கிழக்கு மாகாணத்தின் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தின் அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காகவே இன்று இந்தக் கூட்டம் கூட்டப்பட்டது. தற்போது திருகோணமலை மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பான திட்டத்தை சர்பானா ஜூரோன் நிறுவனம் தயாரித்துள்ளது. அந்தத் திட்டத்தை அடிப்படையாகக்கொண்டு திருகோணமலையை அபிவிருத்தி செய்வது தொடர்பில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. அதனை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும்.

அந்த அபிவிருத்தித் திட்டத்தின் பிரகாரம் வெருகல் முதல் பானம, குமன கடற்கரையை அபிவிருத்தி செய்வதற்கும் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக கடற்கரையை பயன்படுத்திக்கொள்ள இதன் மூலம் எதிபார்க்கப்படுகிறது.

அதே நேரத்தில், இந்தப் பகுதியில் நவீன விவசாயமொன்றை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தின் ஏனைய பிரதேசங்களும் இதில் உள்வாங்கப்பட வேண்டும். மேலும் மகாவலி அதிகாரசபை மற்றும் காணித் திணைக்களத்தையும் இதற்கு இணைத்துக்கொள்ள வேண்டும்.

திருகோணமலை மாவட்டத்தின் கடற்றொழில், விவசாயம் மற்றும் சுற்றுலாத் துறைகளில் ஏற்படும் இந்த புதிய முன்னேற்றத்துடன் திருகோணமலை நகரத்தை ஒரு முக்கிய வர்த்தக நகரமாக மாற்ற வேண்டும். திருகோணமலைக்குப் பின்னர் மட்டக்களப்புக்கும் அம்பாறைக்கும் இந்த அபிவிருத்தியைக் கொண்டு செல்வதே எமது நோக்கமாகும்.

குறிப்பாக காணிப் பிரச்சினைகளைத் தீர்த்து நாம் இந்தச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இதன்போது, மகாவலி காணிகள் குறித்து விசேட கவனம் செலுத்தி, அவற்றை எவ்வாறு அபிவிருத்தி செய்யலாம் என்பது குறித்தும் கண்டறியப்பட வேண்டும்.

அத்துடன் திருகோணமலை அபிவிருத்தித் திட்டத்தின் அமுலாக்கத்தில், மகாவலி திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் 1985 திட்டத்தின் பிரகாரம் இருக்கக்கூடிய காணிகளை பெற்றுக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் கிழக்கு மாகாணத்தில் சில காணிகள் அமைச்சரவையின் அனுமதியின்றி வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

பல்வேறு மத வழிபாட்டுத் தலங்களுக்கும் அதிகளவான காணிகள் வழங்கப்பட்டுள்ளதாக கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது. எனவே, போட்டிபோட்டுக் கொண்டு மத வழிபாட்டுத் தலங்கள் நிர்மாணிப்பதை நிறுத்த வேண்டும். அதன்போது மாகாணத்தின் அரசியல் தலைவர்கள் மற்றும் மதத் தலைவர்களுடன் கலந்துரையாடி சரியான முடிவை எட்டுவது மிகவும் முக்கியமானது என்பதைக் கூற வேண்டும்.

1985 ஆம் ஆண்டு, மகாவலி அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டபோது, எடின்பரோ பிரபு இங்கு வருகை தந்து வழங்கிய காணிகள், தற்போது வன ஜீவராசிகள் அமைச்சினால் காடுகளாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கையில் வனப்பரப்பு 32 வீதமாக பேணப்பட வேண்டும். அந்த நிலையில் ஏனைய காணிகள் நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்தப்பட வேண்டும்.இன்று சிங்கப்பூர் மற்றும் துபாய் போன்ற நாடுகள் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக அதிகளவு காணிகளைப் பயன்படுத்தியுள்ளன. அண்மையில் நான் சிங்கப்பூர் சென்றிருந்த போது அந்நாட்டு அரசாங்கம் இலங்கையிடம் அரிசியைக் கோரியது. கடந்த ஆண்டு நாம் அவர்களிடம் அரிசியைக் கேட்டதுபோன்று, இந்த ஆண்டு எங்களிடம் அவர்கள் அரிசி கேட்கிறார்கள். எனவே, நாட்டில் நவீன விவசாயத்தை உருவாக்கி, விவசாய உற்பத்திகள் மூலம் உலகப் பொருளாதாரத்தை வெல்வதற்கு நாம் செயற்பட வேண்டும்.திருகோணமலை அபிவிருத்தித் திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் இந்த அபிவிருத்தி இலக்குகளை எட்டுவதற்கு நாம் முயற்சிப்போம். அதற்கு அரச அதிகாரிகள் உட்பட அனைவரும் அர்ப்பணிப்புடன் செயல்படுவார்கள் என நான் எதிர்பார்க்கிறேன்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் கபில அத்துகோரள உள்ளிட்ட மாகாண மக்கள் பிரதிநிதிகள்,ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, விமானப்படை தளபதி வைஸ் எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ மற்றும் மாகாண அரச அதிகாரிகள் இக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆவணி மாதம் 08 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

மேஷம்: உடல், மனம் சோம்பிக் காணப்படும், அவசர முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம்.

ரிஷபம்: விவாகப் பேச்சுகளால் மனதில் மகிழ்ச்சி பிறக்கும்.கடல் தாண்டிய பயணத்தால் நன்மை உண்டு.

மிதுனம்: நீண்ட நாள் நோயிலிருந்து விடுதலை. சத்துருக்களால் தன லாபங்கள் உண்டு.

கடகம்: தொழில் ரீதியான நட்டங்கள் ஏற்படும். குழந்தைகளால் செலவுகள் ஏற்படும்.

சிம்மம்: யாரையும் நம்புவதா இல்லையா என்று முடிவெடுக்க முடியாது தவிப்பீர்கள். எதிர்ப்பாராத விபத்துகள் ஏற்படலாம்.

கன்னி: உங்களுக்கான நகை. உடைகளை வாங்குவீர்கள். துணிவோடு நடைபோடுவீர்கள்.

துலாம்: கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாது திண்டாடுவீர்கள். மனத் தைரியம் குன்றி சோம்பலுடன் காணப்படும்.

விருச்சிகம்: மனத் தைரியத்தடன் அனைத்து சவால்களையும் முறியடிப்பீர்கள். குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும்.

தனுசு: குடும்ப உறவுகளுடன் கவனமாக நடந்து கொள்ளுங்கள், தேவையற்றவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டாம்.

மகரம்: உங்கள் காதலியுடன் உல்லாசப் பணங்களை மேற்கொள்வீர்கள். தொழில், வியாபார லாபம் உண்டு.

கும்பம்: நீங்கள் எதிர்ப்பார்த்த தொழில் அமையும், குடும்பத்தாருடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

மீனம்: கடின உழைப்பால் உடல் அசதி, ஏதோ பயத்தினால் மனம் தடுமாறிக் கொண்டிருக்கும்.

**திதி** : நவமி பி.இ.2.02 வரை பின் தசமி

**நட்சத்திரம்** : அனுஷம் மு.ப.9.14 வரை பின் கேட்டை

**யோகம்** : மரண யோகம் முழுவதும்

**வார சூலை** : மேற்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது

**நல்லநேரம்** : மு.ப. 6.07 – 7.07 மணி வரை

**ராகுகாலம்** : 10.37 – 12.07 மணி வரை

**எமகண்டம்** : 3.07 - 4.37 மணி வரை

குளிகை : 7.37 – 9.07 மணி வரை

**சந்திராஷ்டமம்** : மேஷ ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்

**தனஅதிஷ்டம்** : புனர்பூசம், விசாகம், பூரட்டாதி பூசம், அனுஷம், உத்தரட்டாதி (பிறந்தவர்களுக்கு)

**விஷேட தினம்** : வரலட்சுமி விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

*சம்மாந்துறை செய்தியாளர்*



சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் கல்லூரிக்கு முன்பாக உள்ள பஸ் தரிப்பு நிலையத்தின் கூரையின் மேல் ஏறி பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் அதிபருக்கு எதிராகவும் நேற்று(24) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 20 மாணவர்கள் வரை கலந்துகொண்ட குறித்த ஆர்ப்பாட்டத்தின்போது வெளிமாவட்டங்களிலிருந்தும் தூரப் பிரதேசங்களிலிருந்தும் வருகை தந்து கல்விகற்கும் மாணவர்களுக்கு போதிய விடுதி வசதிகள் இல்லையெனவும் மாணவிகள் வெளியிடங்களில் வாடகைக்கு தங்கியிருப்பதாகவும் தெரிவித்தே குறித்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

மாணவர்களுக்கு தங்குவதற்குரிய விடுதி இருக்கின்றபோதிலும் அதில் பல்வேறு குறைபாடுகள் உள்ளதாகத் தெரிவிக்கும் குறித்த மாணவர்கள் போதிய பாதுகாப்பு வசதிகள் மற்றும் கட்டில்கள் இல்லையெனவும் தாம் நிலத்திலேயே நித்திரை கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர். மேலும் இவர்களுக்கென குளியலறை மற்றும் மலசல கூட வசதிகூட கிடையாதென்றும் அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும், கல்லூரிக்கு வேன் ஒன்று இருந்தும் சுகவீனமடையும் மாணவர்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு அவ்வாகனம் பயன்படுத்தப்படுவதில்லை. சுகவீனமடையும் மாணவர்கள் சொந்தச் செலவிலேயே முச்சக்கர வண்டிகளில் வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

மேலும், ஐயாயிரம் ரூபா பணம் அறவிடப்படுவதாகத் தெரிவிக்கும் மாணவர்கள் இந்தப் பணத்தைக் கொண்டு எந்தவொரு வசதிகளும் செய்து தரப்படவில்லையென்றும் அந்தப் பணத்துக்கு என்ன நடந்ததென்றுகூடத் தெரியவில்லை என்றும் தெரிவிக்கின்றனர். மேற்படி குறைபாடுகளை கல்லூரி அதிபர் கவனத்திற்கொள்வதில்லை எனவும் குற்றஞ்சாட்டுகின்றனர். எனவே, எங்களின் இப்பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம் என்றனர்.

இதேவேளை, மாணவர்களின் குற்றச்சாட்டுகள் தொடர்பில் சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் எஸ்.தியாகராஜாவை சந்தித்து குறித்த மாணவர்களின் ஆர்ப்பாட்டம் தொடர்பில் கேட்டபோது, மாணவர்கள் எந்தவொரு முன் அறிவித்தலுமின்றி கோரிக்கைகளை முன் வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் தங்களின் கோரிக்கைகளை எழுத்து மூலமாக அறிவிக்கும் பட்சத்தில் அதற்குரிய நடவடிக்கைகளை எமது மேலதிகாரிகளோடு தொடர்புகொண்டு முன்னெடுக்க முடியும். மாணவர்களுக்கான விடுதியில் அனைத்து வசதிகளும் உள்ளன என்றார்.

# வாகன விபத்து ஐவர் காயம்

பொலன்னறுவையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த சிறிய சொகுசு வான் ஒன்று தம்புள்ளை - குருநாகல் பிரதான வீதியில் கால்வாயில் நேற்று(24) வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் நான்கு பேர் காயமடைந்து தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கலேவெல பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் ஐந்து வயது சிறுமியும் அடங்குவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் பொலன்னறுவை, தம்பல பிரதேசத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்தனர். இதன்போது சாரதிக்கு ஏற்பட்ட தூக்கத்தினால் வீதியின் கால்வாய்க்குள் பாய்ந்து விபத்துக்குள்ளாகியது.

# உதைபந்தாட்டப் போட்டியில் அஜ்மீர் தேசிய பாடசாலை வெற்றி



*இக்பால் அலி*

மாத்தளை மாவட்டத்துக்குட்பட்ட ஒன்பது பாடசாலைகளுக்கிடையே 16 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையில் இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் அஜ்மீர் தேசிய பாடசாலை வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. முதல் இரு சுற்றுகளிலும் கிரீன்வுட் கல்லூரி மற்றும் வீர மோகன் கல்லூரி ஆகிய இரு அணிகளுக்கும் எதிராக முறையே 3:1 , 5:0 என்ற கோல்கள் அடிப்படையில் அஜ்மீர் தேசிய பாடசாலை வெற்றியீட்டி அரை இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

இந்நிலையில், மாத்தளை விஜய கல்லூரி அணியை 5:0 என்ற அடிப்படையில் வெற்றி ஈட்டிய அஜ்மீர் தேசிய பாடசாலை அணி இறுதிப் போட்டியில் மாத்தளை ஸாஹிரா கல்லூரியுடன் மோதி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டி வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது .

# நவீன தொழில்நுட்பங்களை கிராமங்களுக்கு கொண்டுசென்றால் பிரச்சினைகள் ஏற்படுகின்றன

## உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் சுரேன் படகொட தெரிவிப்பு

விவசாயத்துக்கு நவீன தொழில்நுட்பமோ அல்லது வேலைத்திட்டங்களோ எவ்வளவு அறிமுகப்படுத்தப்பட்டாலும் அவற்றைக் கிராம மட்டத்தில் கொண்டுசெல்லும்போது பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்று உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் கலாநிதி சுரேன் படகொட தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலொன்றில் கலந்துகொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிராமத்தின் விகாரைகள், பாடசாலைகள், கிராமசேவகர்கள், சமுர்த்தி மற்றும் விவசாய அதிகாரிகளை இணைத்துக்கொண்டு மேற்படி தொழில்நுட்பங்களை துரிதமாக கிராமங்களுக்குள் கொண்டு செல்ல வேண்டும். அதற்கான ஒத்துழைப்புகளை வழங்குமாறு விவசாய அமைப்புகளின் தலைவர்களிடத்தில் ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

எவ்வித பயிற்சிகளும் இல்லாத குடும்பங்களைத் தெரிவுசெய்து ஏதேனுமொரு பொருளாதார முறைமைக்குள் அவர்களை உள்வாங்குமாறு ஜனாதிபதி அறிவுரை வழங்கியுள்ளார். அதற்கமைய சுற்றுலாத்துறையை இலக்கு வைத்து மேற்படி குடும்பங்களின் பொருளாதாரத்தை வலுவூட்டத் திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

கால்நடை அபிவிருத்திச் சபையின் தலைவர் பேராசிரியர் எச்.டபிள்யூ. சிறில், விவசாயத் திணைக்களத்தின் விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தின் பணிப்பாளர் கலாநிதி ரொஹான் விஜேகோன் உள்ளிட்டவர்களும் விவசாய நவீனமயப்படுத்தல் தொடர்பான கருத்துகளை இதன்போது முன்வைத்தனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 ஒகஸ்ட் 25ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# இந்தியாவின் மகத்தான சாதனை!

இந்தியாவின் சந்திரயான் - 3 'விக்ரம்' தரையிறங்கிக் கலம், ஒகஸ்ட் 23 அன்று நிலவில் பத்திரமாகத் தரையிறங்கியது. அதன் வயிற்றில் இருக்கும் 'பிரக்யான்' உலாவிக் கலம் வெளிவந்து ஒளிப்படங்களை எடுத்து அனுப்ப உள்ளது. சோவியத் ஒன்றியம்/ ரஷ்யா, அமெரிக்கா, சீனாவுக்கு அடுத்தபடியாக நான்காவது நாடாக இந்தியா நிலவில் கால் பதித்துள்ளது.

ஜூலை 14 அன்று ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி மையத்தில் இருந்து 'எல்.வி.எம்-3' என்னும் கனரக ஏவுகலனில் கிளம்பியது சந்திரயான்-3 விண்கலம். அதன் உச்சியில் ஒரு உந்து விசைக்கலன் (2,148 கிலோ), அதன் மேல் 'இந்திய விண்வெளித் தந்தை' எனப் போற்றப்பட்ட டாக்டர் விக்ரம் சாராபாய் பெயர் தாங்கிய 'விக்ரம்' தரையிறங்கி (1,752 கிலோ), அதன் பெட்டகத்தினுள் 'பிரக்ஞான்' நிலா ஊர்தி (26 கிலோ) ஆகிய சுமைகளுடன் நிலாப்பயணம் தொடங்கியது.

பூமிக்கு அண்டையில் ஏறத்தாழ மூன்றே முக்கால் இலட்சம் கிலோமீற்றர் தொலைவில் 'இன்னொரு உலகம்' என்று சொல்லத்தக்க நிலையில் சந்திரனை நோக்கி, 1959 செப்டெம்பர் 12 அன்று சோவியத் யூனியனால் ஏவப்பட்ட 'லூனா-2' விண்கலம், கிளம்பி 34 மணிநேரத்துக்குள் சந்திரனுக்கு நேரடி பாதையில் சென்று, அங்கு மோதி விழுந்தது. ஆயினும், ஒரு வகையில் அது, நிலவைத் தொட்ட முதல் விண்கலம் ஆகும்.

சோவியத் யூனியனால் ஏவப்பட்ட 'லூனா-9' விண்கலம், 1966 பெப்ரவரி 03 அன்று கொஞ்சம் துரிதமான பாதையில் 03 நாள் 7 மணி நேரம் பயணம் செய்து, முதல் முறையாக, மென்மையாக நிலவில் தரையிறங்கியது.

அமெரிக்காவைப் பொறுத்தவரை,1964 ஜூலை 28 அன்று செலுத்தப்பட்ட 'ரேஞ்சர்-7' விண்கலம் மூன்றாம் நாளில் சந்திரனை அடைந்தது. முதல் முறையாக சந்திரனின் மேற்பரப்புப் படங்களை எடுத்து அனுப்பியது. இறுதியில் அதுவும் நிலாத்தரையில் மோதி விழுந்து விட்டது.

அடுத்த சில ஆண்டுகளில் 1969 ஜூலை 20 அன்று தொடங்கிய அமெரிக்க எப்பொலோ-11 முதல் 06 மனித நிலாப் பயணங்கள் வரலாற்றில் மாபெரும் முத்திரை பதித்தன. அப்போலோ, வெறும் நான்கு நாள், 06 மணி நேரம், 45 நிமிடத்தில் நிலவில் தரையிறங்கியது.

நிலவுக்கு மனிதர்களை அனுப்புவதைக் காட்டிலும் தானியங்கி விண்கருவிகளைச் செலுத்தி ஆராய்ச்சி செய்வதில் ரஷ்யா முனைப்பு காட்டியது. 'லூனா-16' (24-9-1970), 'லூனா-20' (25-2-1972) ஆகிய ரஷ்ய விண்கலங்கள் சந்திரனில் 'வளக்கடல்' அருகில் அப்போலியஸ் மேட்டுப்பகுதியில் இருந்து இரண்டு முறை நிலவின் மண் மாதிரிகளை கொண்டு வந்துள்ளன.

மூன்றாவது முறையாக, 1976 ஒகஸ்ட் 09 அன்று செலுத்தப்பட்ட 'லூனா-24' விண்கலன் சந்திரனில் 'நெருக்கடிகளின் கடல்' என்னும் பகுதியில் இருந்து உள்ளங்கை அளவு (ஏறத்தாழ 170 கிராம்) சந்திர மண் மாதிரியை 1976 ஒகஸ்ட் 22 அன்று பூமிக்கு எடுத்து வந்தது.

நிலவின் தென்துருவப் பகுதியில் 2,500 கி.மீ. குறுக்களவும் 6-8 கி.மீ. ஆழமும் கொண்ட பள்ளத்தில் பனிப்படலங்களும் நிலாமண்ணில் ஹீலியம் 03 என்னும் அணுக்கரு விசைப் பொறிகளுக்கான எரிபொருளும் தங்குதடையற்ற சூரிய மின்சார நிலையத்துக்கான வாய்ப்பும் உள்ளதால் ஏறத்தாழ கால் நூற்றாண்டுக்குப் பிறகு உலக நாடுகளின் பார்வை மீண்டும் நிலாவில் படிந்தது.

ஜப்பான் செலுத்திய 'ஹிதென்' என்ற விண்ணூர்தி 1993 நவம்பர் 11 அன்று நிலவில் 'ஃபர்னிலியஸஸ்' என்னும் இடத்தில் தரையிறங்கியது. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில், ஐரோப்பாவின் 'ஸ்மார்ட்' (27-9-2003), ஜப்பானின் 'செலீனி' (14-9-2007), சீனாவின் 'சாங்கே-1' (24-10-2007), இந்தியாவின் சந்திரயான்-1 (22-10-2008) ஆகிய நாடுகளின் முதல் நிலவுப் பயண முயற்சிகள் வெற்றிகரமாக நடந்தேறின.

அந்த வகையில், நிலவை நெருங்கிச் சுற்றிவந்த ஆறாவது நாடாக இந்தியா சாதனை படைத்தது. இந்தியாவின் சந்திரயான்-1 பயணத்தில் இந்திய மூவர்ணக்கொடி பொறித்த 'நிலா மோது கலன்' 2008 நவம்பர் 14 நிலவில் மோதி விழச் செய்யப்பட்டது. அது தண்ணீர் மூலக்கூறுகள் தென்படும் ஷேக்கிள்டன் பள்ளத்தின் அருகில் விழுந்தது.

இதற்கிடையில், 2018 டிசம்பர் 07 அன்று, சீனாவும் 'சாங்கே-4' ஏவுகலனில் 'யூது-2' (சீன மொழியில் முயல்) என்னும் தரையிறங்கியை நிலவுக்கு அனுப்பியது. 26 நாட்களுக்குப் பிறகு 3-1-2019 முதல் முறையாக, நிலவின் முதுகுப்புறத்தில் தரையிறங்கிய 'யூது-2', கடந்த நான்கு ஆண்டுகளில் ஏறத்தாழ 1-2 கிலோமீற்றர் தொலைவுக்கு நிலவின் தரையில் ஊர்ந்து சென்று ஆராய்ந்து வருகிறது.

ஆரவாரம் இல்லாமல் 2019 பெப்ரவரி 22 அன்று இஸ்ரேலின் முதல் நிலவுப் பயணமான 'பெரேஷீட்' (இஸ்ரேலில் 'ஆதியாகமம்') விண்கலம், பூமியையும் நிலவையும் பலமுறை சுற்றி வந்து 47 நாட்களுக்குப் பிறகு, அதன் சந்திர சுற்றுப்பாதையை அடைந்தது. ஆயினும், 11 ஏப்ரல் 2019 அன்று தரையிறங்கும்போது, அதன் திசைகாட்டிகளான நிலைச்சுற்றிக் கருவிகள் செயலிழந்ததால், 'பெரேஷீட்', சந்திரனில் மோதி, தகவல் தொடர்பு அறுந்து போனது.

உள்ளபடியே இது நிலவில் தரையிறங்கத் தனியார் நிறுவனம் மேற்கொண்ட முதல் முயற்சி என்றும் கொள்ளலாம். காரணம், பெரேஷீட், 'ஸ்பேஸ் எக்ஸ்' என்னும் அமெரிக்கத் தனியார் நிறுவனம் தயாரித்த 'ஃபால்கன் 9 பிளாக் 5' என்னும் ஏவுகலனால் செலுத்தப்பட்டது என்பது முக்கியத் தகவல்.

எது எப்படியாயினும், சந்திரயான்-3 புவியை விட்டுக் கிளம்பி, நான்கு வாரங்களுக்குப் பிறகு, 2023 ஒகஸ்ட் 11 அன்று, ரஷ்யாவின் 'ரோஸ்காஸ்மாஸ்' விண்வெளி முகமையின் 'லூனா-25' ஆகிய 'லூனா-குளோப்-லேண்டர்' விண்கலனை, 'ஃப்ரீகாட்' என்னும் நவீன இறுதி உந்து கட்டப்பொறி பொருத்தப்பட்ட 'சோயுஸ் 2.1பி' என்னும் ஏவுகலனால் வாஸ்டாக்னி ஏவுதளத்தில் இருந்து செலுத்தியது.

அது, நிலவில் ஒகஸ்ட் 21 அன்று தரையிறங்கத் திட்டமிடப்பட்டிருந்த நிலையில், ஒகஸ்ட் 19 அன்று, அதில் ஒரு 'அசாதாரண சூழ்நிலை' ஏற்பட்டது. அதன் சிறிய உந்துபொறி, புவிக்கட்டுப்பாட்டு மையத்திலிருந்து வந்த தொலைக்கட்டளையை ஏற்று, வேகத்தைக் குறைக்க இயலாமல் 'லூனா-25' நிலவின் தரையில் முன்கூட்டியே வந்து விழுந்துவிட்டது.

சந்திரயான்-3, நிலவை அடைய 40 நாட்கள் எடுத்துக்கொண்டாலும் இந்தப் பயணத்தின் முதன்மை நோக்கம் என்பது வித்தியாசமான சூழலில் நிலவின் தென் துருவப் பகுதியில் கால்பதிக்கும் உலகின் முதல் நாடு இந்தியா என்ற பெருமையில், நிலவில் சுமூகமாகத் தரையிறங்கி, அங்கிங்காக ஊர்ந்துசென்று, ஆராய்ச்சி செய்யும் தொழில்நுட்பத் திறன்களை நிரூபிக்க வேண்டும் என்பதுதான். அது இந்திய விஞ்ஞானிகள் நினைத்தபடியே நடந்துகொண்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் நிலவில் இந்தியா மேற்கொள்ளப்போகும் ஆய்வுகள் அனைத்துமே இரண்டு வாரங்களுக்கு மட்டும்தான். ஏனென்றால், இரண்டு வாரம் முடிந்ததும் நிலவில் இரவு தொடங்கிவிடும். இரவு நேரத்தில் அங்கு மைனஸ் 200 பாகை செல்ஷியஸ் வரைக்குமே வெப்பநிலை குறையும். அந்த உறைபனிக் குளிரில் லேண்டர், ரோவர் இரண்டுமே இயங்க முடியாது.

அவை இயங்குவதற்குத் தேவையான சூரிய ஒளி அடுத்த இரண்டு வாரங்களுக்குக் கிடைக்காது. அது மட்டுமின்றி, இரவு நீடிக்கும் அந்த இரண்டு வாரங்களிலும் நிலவும் உறைபனிக் குளிர் அவற்றின் பாகங்களில் விரிசல்கள் விழச் செய்யலாம். இதனால் அவை விரைவிலேயே இறந்துவிடும். உறைபனிக் குளிரில் இந்தக் கருவிகளால் இயங்க முடியாது என்பதையும் தாண்டி, அவற்றின் கட்டமைப்பிலேயே சேதங்கள் ஏற்படக்கூடும். உலோகங்களால் உறைபனிக் குளிர் வெப்பநிலையைத் தாங்க முடியாது.

அதிலும், 200 பாகை செல்ஷியஸ் வரைக்கும் செல்லும்போது, அத்தகைய வெப்பநிலையில் அவை சேதமடையக்கூடும். இதனால், லேண்டர், ரோவரின் பாகங்கள் செயலிழக்க வாய்ப்புள்ளது.

ஆக, அடுத்த இரண்டு வாரங்களில் ரோவரும் லேண்டரும் அனுப்பவுள்ள தரவுகள்தான் உலகளவில் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தை ஒரு புதிய பரிமாணத்துக்குக் கொண்டு செல்லப்போகின்றன. தெற்காசியாவும் ஏன் இலங்கையும் இந்தியாவின் இந்த சாதனை குறித்து பெருமைப்படலாம். அந்த விஞ்ஞானத்தின் வளர்ச்சியை உதாரணத்துக்கு கொண்டு முன்னேற முயற்சிக்கலாம். வெற்றி தள்ளிப் போகலாம்... ஆனால், முயற்சி வீண் போகாது. சந்திரயான் - 3 சொல்லியிருக்கும் செய்தி இது.




# கொழும்பு அறிவுத்திருக்கோயில் திறப்பு விழா

எல்லாம் அறியும் அறிவு தனைவிட்டு
எல்லாம் அறிந்தும் இலாபமங் கில்லை
எல்லாம் அறிந்த அறிவினை நானென்னில்
எல்லாம் அறிந்த இறையென லாமே.
-திருமூலர்

மெய்யறிவு பெறாது பிற அறிவெல்லாம் பெற்றிருந்தாலும் அதனால் ஒரு பயனும் இல்லை என்கிறார் அறிஞர் திருமூலர்.

இதே போன்று 'சித்த வேதம்' எனும் நூலில் சுவாமி சிவானந்த பரமஹம்சர் "தன்னை உணராத படிப்பு எதுவாயினும் பொருளற்றதே; தன்னை உணர, தன்னைத்தான் படிக்க வேண்டும்" என்கிறார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அவதரித்த மகாகவி பாரதியார் (1882-1921) அறிவே தெய்வம் என்று வேதங்களும் சுருதிகளும் கூறியதை கேட்டதில்லையா என சமுதாயத்தை வினவினார். 20ஆம் நூற்றாண்டில் அவதரித்த, அறிஞர் திருமூலரை மானசீக குருவாக ஏற்றுக்கொண்ட, வேதாத்திரி மகரிஷி (1911-2006) 1973ஆம் ஆண்டில் இறையைப் பற்றிய தெளிவான விளக்கங்களைக் கூறினாலும், 'சுயமாய்ச் சிந்தித்தே தெளிவாய்' என்கிறார். 1992ஆம் ஆண்டில் உறுதியாக "அஞ்சுவதேன் துணிந்துரைப்போம் அறிவே தெய்வம்" என்கிறார்.

அறிவே தெய்வம் என்று அவ்வாறு உறுதியாக கூறுவதற்கான காரணம், மகரிஷி கூறுகின்ற தெய்வம் பற்றிய விளக்கம் விஞ்ஞான அடிப்படையிலும் அறிவுப்பூர்வமாகவும் மனித அறிவுக்கு ஏற்புடையதாகவும் பொருத்தமானதாகவும் (Logically& science of reasoning) இருப்பதே.

அறிவே தெய்வம் என உறுதியாகக் கூறினாலும் மகரிஷி வழக்கமாகக் கூறும் ஆலோசனை 'நான் கூறுவது தகவல் மட்டுமே. அதனை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அதன் பிறகு அதற்கேற்றவாறு உங்களை மாற்றிக் கொள்ளுங்கள் 'Information, Confirmation, Transformation' என்பது அவர் அறிவே தெய்வம் என உறுதியாகக் கூறியதற்கும் பொருந்தும். அவர் கூறுவதை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் நம்மை உறுதிப்படுத்திக்கொள்ளவே, சுயமாய்ச் சிந்தித்தே தெளிவாய் என்கிறார்.

அறிவே தெய்வம் என்று உறுதியாகக் கூறிய மகரிஷி மேலும் கூறுவதாவது:

"நான் எனினும் நீ எனினும் நிறையறிவில் ஒன்றே;
நல்லுயிரில் வினைப்பதிவில் முன்பின்னாய்
உள்ளோம்"... என்பது.

வினைப்பதிவில் நாம் முன்பின்னாக இருந்தாலும் மகரிஷி நமக்கு அளிக்கும் உறுதியினை நாம் அனைவரும் கவனத்தில்கொள்ள வேண்டும். நம்மைப் பார்த்து "உத்தம நண்பர்காள் உங்கட்கும் உரியது இறைவனைக் காண்பது (அறிவின் முழுமைப்பேறு)" என்றும் கூறுகிறார். இறைவனைக் காண்பது என்பது அறிவால் அறிவாகிய இறையை உணர்வதாகும்.

'அறிவே தெய்வம்' என்பதை உறுதி செய்துகொள்வதில் மனித குலத்துக்கு இருக்கின்ற ஐயத்தை இயற்கை (இறை), நீக்கித் தெளிவுபடுத்துவதற்காக இணைகோடுகளாகவே இருந்து வந்த விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் இணைய வேண்டும் என்கின்ற தேவையை உலகப்புகழ் விஞ்ஞானி ஐன்ஸ்டீன் (1879-1955) வாயிலாக "Science without Religion is lame, Religion without Science is blind'' என்கின்ற எண்ணத்தை எழுப்பி, ஐன்ஸ்டீன், பாரதியார் இருவருக்கும் பின்னவரான வேதாத்திரி மகரிஷியின் வாயிலாக அறிவுக்கான அறிவுப்பூர்வமான உறுதியான இறுதியான விளக்கம் அளித்து "அஞ்சுவதேன் துணிந்துரைப்போம்! அறிவே தெய்வம்" எனவும் உரைக்க வைத்தது இறை. இதுவன்றோ இயற்கையின் (இறை) திருவிளையாடல்.

இத்திருவிளையாடல், மேற்குறித்த மூவரும் சமகாலத்தில் வாழ்ந்ததால் மெய்ப்பொருள் விளக்கம் ஒருவரிடமிருந்து அடுத்தடுத்து மற்றவர்களிடம் விரிவாகித் தெளிவாகியது எனலாம். இந்நிகழ்வு இறைக்கு எவ்வாறு சாத்தியமாகியது? இறை அறிவாக இருப்பதனால்தான் சாத்தியமாகியது. இயற்கையின் ஆதிநிலை (Primordial State of the Universe) அறிவாக இருந்ததால்தான் சாத்தியமாகியது. வார்த்தைகளால் கூற முடியாத சிறப்பு வாய்ந்த இத்தகைய அரூபமான அறிவாகிய இறையை மனிதன் தன் அறிவால் நேரிடையாகவே வழிபட பிரத்தியேகக் கோயில் (Exclusive Temple of Consciousness) அவசியம் தானே!

எனவே இயற்கை (அறிவு, இறை) 1984இல் தனக்கென ஒரு கோயிலை நிறுவ வேதாத்திரி மகரிஷியை திருக்கருவியாக ஏற்படுத்திக்கொண்டது. அதுதான் ஆழியாறிலுள்ள உலகின் முதல் அறிவுத்திருக்கோயிலாகும். அதனைத் தொடர்ந்து, மகரிஷியின் (இயற்கையின் - இறையின்) எண்ணம் ஈடேறும் வகையில் உலகெங்கிலும் ஆங்காங்கே அறிவுத்திருக்கோயில்கள் உருவாகி வருகின்றன. இயற்கையே - அறிவே - இறையே உருவாக்கிய அறிவுத்திருக்கோயில்கள் வரிசையில் ஒன்று இப்போது கொழும்பில் திறக்கப்பட இருக்கும் அறிவுத்திருக்கோயில் என்று அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். மனிதன் துன்பமில்லாமல் வாழ்வதற்கு திருவள்ளுவர் கூறும் 'பொய்தீர் ஒழுக்க நெறி நிற்றல்' அவசியமாகின்றது. மனிதன் மனிதனாக வாழ்வதற்கான ஒழுக்கவியல் கல்வி அவசியமாகின்றது. எனவே ஒழுக்கவியல் கல்வியைப் போதிக்க உருவாக்கப்பட்ட புனித இடங்களே(Special Institutions imparting Disciplinary& Education) அறிவுத் திருக்கோயில்கள்.

மக்களில் எழுத்தறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை (literacy rate) 100 விழுக்காட்டினை எட்ட வேண்டும் என்கின்ற நோக்கத்துடன் கல்வித்துறை, ஆவன செய்து வருவதுபோல், மனித அறிவின் முழுமைப்பேறுக்கு ஒழுக்கவியல் - மாண்பியல் கல்வியை கற்பிக்கும் திருவேதாத்திரியமும் மனிதகுலம் மெய்விளக்கத் தெளிவு பெறுவதற்கு ஏதுவாக வினைப்பதிவில் முன்பின்னாய் உள்ளதை சரி செய்து மனிதகுலத்தின் வினைப்பதிவுகளை (En masse) நல்வினைப் பதிவுகளாக உயர்த்த, அறிவுத்திருக்கோயில்களை ஏற்படுத்தி, பேறுகளில் சிறந்ததான, உன்னதமான, புனிதமான குணநலப்பேற்றினை அடையும் வழிகளைக் கூறுகின்றது. குணநலப்பேறு என்பதில் பேறு என்பது என்ன? பெறுவது பேறு. மனிதன் வாழ்நாளில் பலவற்றைப் பெறுகிறான். பெறுவது பேறு என்றாலும் பெறுவதெல்லாமே பேறுகள் ஆகா. ஆனால் அவற்றில் ஒருசில மட்டுமே பேறு எனக் கருதப்படுகின்றன. பெறுவதில் அரிய ஒன்றுதான் பேறாகக் கருதப்படுகின்றது.

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்கிறார் ஔவைத்தாய். ஆகவே, அரிதான மனிதப்பிறவியின் நோக்கம் பேறுகளில் அரிதான மெய்விளக்கப்பேற்றினைப் பெற்று மனிதன் வாழும்போதுதான் மற்றெல்லா உயிர்களைக் காட்டிலும் (ஓரறிவிலிருந்து ஐந்தறிவு வரை) மனிதப்பிறவியை அரிய பிறவியாகக் கருத முடியும். மற்ற உயிர்களுக்குக் கிடைக்காத பேறு மனிதன் மெய்விளக்கம் பெறுவது. மெய்விளக்கம் பெறுவதில் பூரணத்துவம் எய்துவதற்கு, மனிதன், குணநலப்பேற்றைப் பெற்று அறிவின் முழுமையில் வெற்றியடைய வேண்டும்.

'குணநலப்பேறு' என்கின்ற சொல்லைக் கேட்பதே காதுகளுக்கு இனிமையாக உள்ளதால், தற்சோதனைப் பயிற்சிகளால் குணநலப்பேற்றையே பெற்றுவிட்டால் எப்போதுமே ஆனந்தம்தான். சிந்தனையையே மூச்சாகக் கொண்ட வேதாத்திரி மகரிஷி, "சிந்தனையின் பயனாக அறுகுணச் சீரமைப்பு என்ற ஒரு பெரிய உலக நலக் கருத்து உருவாகியது; அக்கருத்தே தற்சோதனை எனும் உளப்பயிற்சி முறையாக உருவானதற்கு காரணம்" என்கிறார். குணநலப்பேறு மூன்று சொற்களைக் கொண்டதால், அம் மூன்று சொற்களையும் பிரித்து தனித்தனியாக பொருள் கொண்டால் மகரிஷி கூறும் குணநலப்பேற்றின் மகத்துவம் விளங்கிவிடும்.

மனித அறிவு, அறியாமை, அலட்சியம், உணர்ச்சிவயம் ஆகிய மூவகை ஏழ்மையில் சிக்கித் தவிக்கின்றது. இம்மூன்று ஏழ்மைகளாலேயே மனிதன் துன்புறுகின்றான். உணர்ச்சி நிலையால் ஏற்படுகின்ற பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால் கவர்ச்சி, உயர்வு-தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் ஆகிய அறுகுணங்களை சீரமைக்கவே மனவளக்கலை எனும் அருமருந்தை வேதாத்திரி மகரிஷியின் வாயிலாக இயற்கை (இறை) மனிதகுலத்துக்கு அளித்துள்ளது.

மனவளக்கலை எனும் அருமருந்தால் அறுகுணங்கள் சீரமைக்கப்படும்போது அதன் விளைவுகளான நிறைமனம், சகிப்புத்தன்மை, ஈகை, கற்பு, சமநோக்கு, மன்னிப்பு ஆகிய மனித மாண்பினை உயர்த்தும் நற்பண்புகள் மனிதனிடம் மேலோங்கி விலங்கினப்பண்புகள் எழா வண்ணம் எப்போதும் அயரா விழிப்புணர்வு மனிதனை ஆளுமை செய்யும். எனவே மனிதனின் தரம் உயரும். ஆதிமனிதனிடத்திலிருந்து கருத்தொடராக வந்துள்ளவன்தான் தற்போதைய மனிதனும். இதற்கிடையில் எங்கேயும் தொடர் விட்டுப்போகவில்லை. ஆகவே விலங்கினப்பண்பு மனிதர்களிடம் மறைந்தோ அல்லது மேலோங்கியோ உள்ளது. இதுவரை பல்லாயிரம் பிறவிகளாக மனிதனுக்கு விலங்கினப்பண்பை செயலற்றதாக்கும் பயிற்சி கிட்டவில்லை. இப்போது திருவேதாத்திரியத்தின் தோற்றத்தால் விலங்கினப்பண்பை செயலற்றதாக்கும் அறுகுணசீரமைப்பு பயிற்சி கிட்டுவதால் விலங்கினப்பண்புகள் எழாநிலையில் விழிப்புடன் மனிதன் மனிதனாக வாழ்வான். இது கிடைத்தற்கரிய பேறுதானே! ஆகையால் அறுகுணச்சீரமைப்பின் வாயிலாக மனிதன் குணநலப்பேற்றினை பெற்று அறிவின் முழுமைப்பேற்றில் வாழ்வாங்கு வாழ்வான்.

மனிதகுலம் உய்வதற்குத் தேவையான அறிவுத்திருக்கோயில்களை உருவாக்கும் புனிதப்பணியில் இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை அன்பர்களை ஈடுபடுத்தி, உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணிக்கச் செய்து, இயற்கையே (இறையே-அறிவே) தனக்கென ஏற்படுத்திக் கொண்ட அறிவுத்திருக்கோயில்கள் வரிசையில், இலங்கை மனவளக்கலை மன்ற அறிவுத்திருக்கோயில் நிறுவப்பட்டு திறப்பு விழா கொண்டாடுவது அறிந்து மிக்க மகிழ்ச்சி. நிர்வாகிகள் மற்றும் மன்ற அன்பர்களின் அறிவுத்தொண்டு பாராட்டுதற்குரியது. எனது உளங்கனிந்த பாராட்டுகள். நிர்வாகிகள், மன்ற அன்பர்கள் மற்றும் அவர்களது அன்புக்குடும்ப அன்பர்கள் அனைவரும் உடல்நலம், நீளாயுள், நிறை செல்வம், உயர்புகழ், மெய்ஞ்ஞானம் ஓங்கி வாழ இறையருளும் குருவருளும் துணைசெய்யட்டும்.

கொழும்பு அறிவுத்திருக்கோயிலுக்கு பல்லாயிரம் அன்பர்கள் வந்து அறிவை அறியும் அறிவின் முழுமைப் பேற்றினை அடைந்து வாழ்வாங்கு வாழ வாழ்த்துகள்.

கொழும்பு அறிவுத்திருக்கோயில் வாழ்க வளமுடன்.
வளர்க கொழும்பு அறிவுத்திருக்கோயில்.
வாழ்க திருவேதாத்திரியம்! வளர்க திருவேதாத்திரியம்!!

**மு.நி. பேரா. Dr. N.A. பெருமாள்**
Vice President, The World Community Service Centre,
Director General, WCSC-VISION for Wisdom,
Temple of Consciousness, Aliyar.

## இன்றைய நாளில்...

- 1609 – இத்தாலிய வானியலாளர் கலிலியோ கலிலி தனது முதலாவது தொலைநோக்கியை வெனிசில் அறிமுகப்படுத்தினார்.
- 1630 – இலங்கையில் ரந்தெனிவலைச் சண்டையில் போர்த்துக்கீசப் படையினர் கண்டி இராச்சியப் படையினரால் தோற்கடிக்கப்பட்டனர்.
- 1732 – யாழ்ப்பாணத்தின் டச்சுத் தளபதியாக கோல்ட்டெரசு வூல்ட்டெரஸ் நியமிக்கப்பட்டார்.
- 1795 – திருகோணமலையை பிரித்தானியர் டச்சுக்களிடம் இருந்து மீண்டும் கைப்பற்றினர்.
- 1803 – யாழ்ப்பாணம் பனங்காமப்பற்று மன்னன் பண்டாரவன்னியன் கண்டியர்களின் உதவியுடன் முல்லைத்தீவைத் தாக்கிக் கைப்பற்றினான். விடத்தல் தீவைக் கைப்பற்ற எடுத்த முயற்சி மேஜர் வின்சென்ட் என்பவனால் முறியடிக்கப்பட்டது.
- 1875 – ஆங்கிலேயக் கால்வாயை நீந்திக் கடந்த முதல் மனிதர் என்ற சாதனையை மெத்தியூ வெப் பெற்றார்.
- 1981 – வொயேஜர் 2 விண்கலம் சனிக்கு மிகக்கிட்டவாகச் சென்றது.
- 1989 – வொயேஜர் 2 விண்கலம் நெப்டியூனுக்குக் கிட்டவாகச் சென்றது.
- 2012 – வொயேஜர் 1 விண்கலம் விண்மீனிடைவெளிக்குச் சென்ற முதலாவது மனிதரால் உருவாக்கப்பட்ட விண்பொருள் என்ற சாதனையை நிலைநாட்டியது.

## நக்கல் நமசிவாயம்

இந்தியா நிலவுக்கு போய் ஆராய்ச்சி நடத்துது... இங்க இராவணன் தமிழரா, சிங்களவரா என்ற நடந்துகொண்டிருக்குது... தொல்பொருள் ஆராய்ச்சி என்ற ஒரு போட்டி வச்சால் ஸ்ரீ லங்கா நம்பர் வன் ஆ வரும் பாருங்கோ..!



# வெளிச்சத்துக்கு வந்தது கொலையுண்ட பெண்ணின் மர்மம்: 5 மாதங்களின் பின்னர் கணவன் கைது!

கண்டி நிருபர்

ஐந்து மாதங்களுக்கு முன்னர் கொலைசெய்யப்பட்ட அலவத்துகொட, எல்லேகடை பகுதியைச் சேர்ந்த 26 வயது பெண்ணின் கொலை தொடர்பாக அவரது கணவன் கைது செய்யப்பட்டுள்ளதாக அலவத்துகொட பொலிஸார் தெரிவித்தனர்.

திருமணமான மேற்படி பெண்ணின் கொலை தொடர்பாக இருந்த மர்மம் தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. கடந்த மார்ச் 10ஆம் திகதி மேற்படி பெண் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டு நெல் வயல் ஒன்றில் சேற்றில் புதையுண்ட நிலையில் சடலம் கண்டு பிடிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் பல்வேறு கோணங்களிலும் விசாரணைகளை மேற்கொண்ட அலவத்துகொட பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பெண்ணின் கணவரை சந்தேகத்தில் கைதுசெய்துள்ளனர். தனுகா மதுவந்தி என்ற 26 வயதுடைய பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவார்.

இக்கொலை தொடர்பில் ஏற்கனவே பொலிஸ் மோப்பநாயின் உதவியுடன் சந்தேகத்தின் பேரில் வேறொரு நபரும் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொலை செய்யப்பட்ட பெண்ணின் ஆடைகள் அகற்றப்பட்டு வயலில் உடல் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், அவர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டது. தடயவியல் அறிக்கைகளுக்கமைய, அவர் பலாத்காரம் செய்யப்படவில்லை என்று தெரியவந்துள்ளது. எனவே, விசாரணைகளை தவறாக வழிநடத்தும் வகையில் அவரது ஆடைகள் களையப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகித்தனர். இது போன்ற மேலும் பல சந்தேகங்கள் பொலிஸாருக்கு ஏற்பட்டிருந்தன.

# கண்டி எசல பெரஹெராவில் பிரபல கேடி மடக்கிப்பிடிப்பு

கண்டி நிருபர்

கண்டி எசல பெரஹெராவில் பெண்மணி ஒருவரின் கைப்பையை திருடிய திருடன் பிடிபட்டான். பிரபல ஐ.ஆர்.சி.என இனம்காணப்பட்ட மேற்படி திருடன் ஏற்கனவே பிரபல சினிமா டைரக்டர் டெஸ்டர் ஜேம்ஸ் பீரிங்கின் மரண வீட்டில் 'ரன்மொனரு' விருது (தங்க மயில்) ஒன்றைத் திருடியவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். 'கம்பெரலிய' என்ற பிரபல சிங்களத் திரைப்படத்தை நெறியாள்கை செய்தமைக்கு இந்தியாவில் வைத்து மேற்படி 'ரன்மொனரு' விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற முதலாவது பெரஹெராவின்போது மேற்படி முடிச்சு மாறியதால் பெண் ஒருவரது கைப்பை



திருடப்பட்டு அவர் எழுப்பிய அபயக்குரலை அடுத்து பொதுமக்களின் உதவியுடன் 71 வயதுடைய மேற்படி திருடன் பிடிபட்டான்.

இதுபற்றி பொலிஸார் தெரிவிக்கும்போது, சந்தேக நபர் குற்றவியல் தடுப்பு பொலிஸ் பிரிவில் பதிவாகியுள்ள ஒரு பிரபலகேடி எனத் தெரிவித்தனர்.

## ஆய்வுநூல் வெளியீடு

உக்குவளை செய்தியாளர்

அரச சாஹித்திய பரிசுபெற்ற சிறுகதை எழுத்தாளர் உக்குவளை அக்றம் எழுதிய "உக்குவளை ஒரு வரலாற்றுத் தடம்" எனும் ஆய்வு நூல் வெளியீடு 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாத்தளை கலை இலக்கியப் பேரவைச் செயலாளர் எம்.எம்.பீர்முகம்மது தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், உதவிக் கல்விப் பணிப்பாளர்களான ஜே.எம்.இக்பால், எஸ்.எம்.ராசிக், உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலை அதிபர் எம்.இக்பால், முன்னாள் யுனிசெவ் திட்டமிடல் அதிகாரி ஜே.ஏ.வாஹித் உட்பட எழுத்தாளர்கள், கலைஞர்கள், நலன்விரும்பிகள் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலை சர்வதேச பழைய மாணவர்கள் சங்கம் இந்நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.





வடகிழக்கு மற்றும் மலையகப் பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்பாக வெளிநாட்டுக் குழுவொன்று அண்மையில் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமாரை பணிமனையில் சந்தித்தது. இதில் அமைச்சின் திட்டமிடல் பிரிவின் மேலதிக செயலாளர், பொறியியலாளர் மகேஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதன்போதான படங்களை காணலாம்.

# நாட்டுப் பிரச்சினைகளை விளங்கி அரசியல் கொள்கைகளை மாற்றுவது மக்கள் பொறுப்பு

## இராஜாங்க அமைச்சர் ரோஹண தெரிவிப்பு



நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை விளங்கி அதற்கேற்றவகையில் அரசியல் கொள்கைகளை மாற்றிக் கொள்வது அனைவரதும் பொறுப்பாக உள்ளது என்று இளைஞர் விவகார விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோஹண திசாநாயக்க நேற்று முன்தினம் (23) தெரிவித்தார்.

மலையக செய்திகள் thamilanmalayagam@gmail.com

மாத்தளை மாவட்டத்தில் ரைத்தலாவல முதல் கனேகொடை என்ற இடம்வரை உள்ள பாதையை அபிவிருத்தி செய்து திறந்து வைக்கும் வைபவத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

உலக வங்கியின் நிதியுதவிமூலம் 500 மில்லியன் டொலர் உதவித் திட்டத்தின் கீழ் 82 கிலோ மீற்றர் பாதையை அமைக்க நிதி கிடைத்துள்ளது. அதன் கீழ் இந்த அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். நாடு இக்கட்டான நிலையில் இருந்தபோதும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஜனாதிபதியின் திட்டங்களே இதற்கு முக்கிய காரணமாகும். எனவே, அதனை விளங்கி கருத்திற்கொண்டு எமது தீர்மானங்களை நாம் மேற்கொள்ள வேண்டும் என்றார்.

# கடவுள் நம்பிக்கையைப் பாதுகாப்பதற்கு போராடவேண்டியவர்களாக இருக்கின்றோம்

## முன்னாள் எம்.பி. மாவை தெரிவிப்பு

பு.கஜிந்தன்

இன விடுதலைக்கான போராட்ட ஆரம்பத்திலிருந்து கடவுள் நம்பிக்கையைப் பாதுகாப்பதற்குப் போராடவேண்டிய நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம் - என தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (23) முல்லைத்தீவு, விசுவமடு பகுதியில் புலம்பெயர் தமிழ் அமைப்பான வி.பி.பவுண்டேஷன் அமைப்பின் ஏற்பாட்டில் 85 மாணவர்களுக்கான வங்கிக் கணக்குப் புத்தகங்கள் கையளிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்கள் இனத்தவர்கள், இந்த நாட்டில் மொழியுரிமை அற்றவர்களாக - மொழிக்கு சமத்துவம் இல்லாதவர்களாக - சிங்களம் ஆட்சிமொழியாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபோது - தமிழுக்கு




அந்த உரித்தில்லாதபோது சமத்துவத்துக்காக போராட்டங்கள் ஆரம்பித்தன. அதன் பின்னர் எங்கள் நிலம் சிங்கள குடியேற்றங்களினால் நிரப்பப்பட்டபோது, எங்கள் நிலம், தமிழ் நிலம் என்ற அந்தஸ்தை இழந்தபோது, அந்த நிலத்தில் நாங்கள் ஆளவேண்டும் என்ற போராட்டங்களுக்கு மத்தியில் அந்த நிலங்கள் பறிக்கப்பட்டபோது, அது சிங்கள மயமாக்கப்பட்டபோது, இராணுவ மயமாக்கப்பட்டபோது இந்த மண்ணில் எங்கள் போராட்டங்கள் ஆரம்பமாகின.

இன்று எங்கள் மொழி எங்கள் தேசம் அடக்கப்பட்டு எங்கள் இனம் அழிக்கப்படுகின்ற நிலை. இப்பொழுது எங்கள் மதம், மத ரீதியாக எண்ணிக்கையில் குறைந்து இன்று பௌத்தத்தின் அடக்குமுறையாகி எங்களின் மத நம்பிக்கைகள் அழிக்கப்படுகின்ற நிலையில் ஒவ்வொருநாளும் போராட்டங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன.

எங்கள் இன விடுதலை என்பது எங்கள் தேசத்தில் நாங்கள் ஆளவேண்டும் என்று போராட்டத்தை ஆரம்பித்த தந்தை செல்வநாயகத்தின் ஆரம்பத்திலிருந்து இப்பொழுது எங்கள் மதத்தை - கடவுள் நம்பிக்கையை பாதுகாப்பதற்கு நாங்கள் போராடவேண்டியவர்களாக இருக்கின்ற சூழ்நிலைக்கு வந்துள்ளோம்.

எங்கள் மண்ணில் நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. எங்கள் மக்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது. எங்கள் நிலங்களை எங்களால் பாதுகாக்க முடியவில்லை. இந்த நிலையில், 12 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெளிநாடுகளிலிருந்து எங்கள் இனம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக தங்கள் உழைப்பையும் அர்ப்பணிப்பையும் ஈட்டிவருகின்றார்கள்.

வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com

இங்குள்ள சிறுவர்கள் சுதந்திரம் பெற்றவர்களாக வாழவேண்டும் என்பதற்காக அவர்கள் வெளிநாடு சென்றாலும் அவர்கள் எண்ணங்கள் இந்த மக்களிடத்திலும் இந்த மண்ணிலும் தான் இருக்கின்றது.

எங்கள் எதிர்கால சந்ததிக்காக அவர்கள் தங்களை அர்ப்பணித்துக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை நிரூபிக்கும் சந்தர்ப்பமாக இந்த நிகழ்வு அமைந்துள்ளது – என்றார்.

# கடும் வறட்சி காரணமாக மடுவில் 3,244 பேர் பாதிப்பு



மன்னார் நகர் நிருபர்

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாக வறட்சியான காலநிலை நிலவி வருகின்றமையால் பொதுமக்கள் உட்பட கால்நடைகள் பாதிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, சில இடங்களில் குடிநீருக்கான தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் வறட்சி காரணமாக மடு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பல கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அதிலும் மடு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மல்லவராஜர் கட்டையடம்பன், மாதா கிராமம், பெரிய முறிப்பு, இரணை இலுப்பக்குளம், கீரி சுட்டான் போன்ற பகுதிகள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, வறட்சி காரணமாக குறித்த கிராமங்களில் 952 குடும்பங்களைச் சேர்ந்த 3,244 பேர் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைப்பிரிவு தகவல் வழங்கியுள்ளது.

இந்நிலையில், இவ்வறட்சியான காலநிலை தொடரும் பட்சத்தில் பாதிக்கப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரிக்கலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

# யாழில் முதலுதவி பயிற்சிப் பாசறை

யாழ்.செய்தியாளர்

பாடசாலை மாணவர்கள் மற்றும் இளையோருக்கான முதலுதவி பயிற்சிப் பாசறை ஒன்று நாளை சனிக்கிழமை மற்றும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்கள் நடைபெறவுள்ளன.

சிறகுகள் அமையத்தின் ஏற்பாட்டில் இலங்கை சென். ஜோன் அம்பியூலன்ஸ் சேவையினரை வளவாளர்களாகக்கொண்டு காலை 8.30 மணிமுதல் 2.00 மணிவரை யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள புனித ஜோன் அம்பியூலன்ஸ் சேவை பணிமனையில் இடம்பெறவுள்ளது.

பயிற்சியில் கலந்துகொள்பவர்களுக்கான சர்வதேச ரீதியிலான சான்றிதழ் கட்டணமாக பாடசாலை மாணவர்களுக்கு 300 ரூபாவும் ஏனையவர்களுக்கு 1,250 ரூபாவும் அறவிடப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 075 63 22 173 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாக தொடர்புகொள்ள முடியும். மேலும் பாடசாலை மாணவர்களை இந்நிகழ்வில் கலந்துகொள்ள ஊக்கப்படுத்துமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# மன்னார் மாவட்ட வைத்தியசாலைகளுக்கு மருத்துவப் பொருட்கள் கையளிப்பு

மன்னார் நகர் நிருபர்

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வைத்திய சாலை அபிவிருத்திச் சபை எனக் குறிப்பிடப்படும் தொண்டு அமைப்பின் அனுசரணையில் நேற்று முன்தினம் (23) புதன்கிழமை மதியம் மன்னார் மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் ஒருதொகுதி மருத்துவப் பொருட்கள் மற்றும் உபகரணப்பொருட்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

குறித்த அமைப்பின் தலைவர் சுபேதி தேரரால் சுமார் 40 மில்லியன் ரூபா பெறுமதி யான மருத்துவப் பொருட்கள் மற்றும் உபகரணப் பொருட்கள் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் இயங்கும் வைத்தியசாலைக ளுக்கு வழங்கும் வகையில் நேற்று முன்தினம் மன்னார் மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கையளிக்கப் பட்டுள்ளன.

இதற்கான நிதி பங்களிப்பு மற்றும் அனுசரணையை வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள்



மற்றும் இலங்கையைச் சேராதவர்கள் வழங்கியுள்ளனர். இந்த மருத்துவ உபகரணங்கள் நேரடியாக வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு தருவிக்கப் பட்டுள்ளன.

இந்நிலையில், குறித்த மருத்துவப் பொருட்கள் மற்றும் உபகரணப் பொருட்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபை எனக் குறிப்பிடப்படும் தொண்டு அமைப்பின் அனுசரணையில் குறித்த அமைப்பின் தலைவர் சுபேதி தேரரா மன்னார் மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் ஊடாக உரிய வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# விக்ரமை பிரிந்து வெற்றிகரமாக வெளியேவந்த பிரக்யான்:

## ஆய்வுப் பணிகள் ஆரம்பம்; இஸ்ரோ தகவல்



நிலவின் தென்துருவத்தை ஆய்வு செய்வதற்காக இஸ்ரோ விண்வெளி நிறுவனத்தால் அனுப்பப்பட்ட சந்திரயான் - 3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் நேற்றுமுன்தினம் (23) மாலை 6.02 மணியளவில் வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கியது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்நிகழ்வில் முக்கிய நிகழ்வாக பார்க்கப்பட்டது லேண்டரிலிருந்து ரோவர் வெளிவரும் நிகழ்வுதான்.

இந்நிலையில், விக்ரம் லேண்டரிலிருந்து பிரிந்து வெற்றிகரமாக பிரக்யான் ரோவர் வெளியே வந்து ஆய்வுப் பணியை தொடங்கியுள்ளது. நிலவில் தனிமங்களையும் தாதுக்களையும் கண்டறியும் வகையில் ரோவர் ஆய்வு நடத்தவுள்ளது.

இந்நிலையில், விக்ரம் லேண்டர் நிலவில் தரையிறங்கியபோது எடுக்கப்பட்ட நிலவின் முதல் மேற்பரப்பு படங்களை இஸ்ரோ வெளியிட்டுள்ளது.

நிலவின் தென் துருவத்தை ஆராய்ச்சி செய்வதற்காக கடந்த ஜூலை 14ஆம் திகதி ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிக்கோட்டாவிலுள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து சந்திரயான்-3 விண்கலம் எல்.எம்.வி-3, எம்-4 ரொக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட்டது.

லேண்டர் அனுப்பும் தகவல்களை இஸ்ரோ விஞ்ஞானிகள் தொடர்ந்து ஆராய்ந்து வந்தனர். லேண்டரை தரையிறக்கும் நிகழ்வுக்காக வழிமுறைகள் ஏற்கெனவே பதிவேற்றப்பட்டன. இந்த வழிமுறைகளை ஆரம்பித்து வைக்கும் பணி தரைக்கட்டுப்பாட்டு மையத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டது.



விக்ரம் அனுப்பிய நிலவின் முதல் மேற்பரப்பு படம்

இதையடுத்து, நேற்றுமுன்தினம் (23) சரியாக 5.44 மணிக்கு விக்ரம் லேண்டர் தரையிறக்கும் பணி தொடங்கியது. லேண்டர் நிலவிலிருந்து 30கி.மீ. உயரத்திலிருந்தபோது தரையிறக்கும் பணிகள் தொடங்கப்பட்டன. இதையடுத்து, சரியாக 6.02 மணிக்கு நிலவில் சந்திரயான் -3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் பத்திரமாக தரையிறங்கியது.

### நிலவில் அடுத்த 14 நாட்கள்

இருள் சூழ்ந்த தென் துருவத்தில் இனி சந்திரயான்-3 அடுத்தகட்ட சாதனை படைக்க எஞ்சியிருப்பது நிலவு நேரப்படி வெறும் 14 நாட்கள் தான். எளிதாக சொல்ல வேண்டுமானால், நிலவில் ஒருநாள் என்பது பூமியில் 28 நாட்கள். பூமி நேரப்படி நிலா தன்னைத்தானே ஒருமுறை சுற்றி வர 28 நாட்கள் ஆகும். சந்திரயான்-3 தரை இறங்கியுள்ள பகுதியில், பூமி நேரப்படி நிலவில் 14 நாட்கள் சூரிய வெளிச்சம் இருக்கும், 14 நாட்கள் இருள் சூழ்ந்திருக்கும்.

சந்திரயான்-3இன் 'விக்ரம்' லேண்டர் மற்றும் 'பிரக்யா' ரோவர் ஆகியவை சோலார் பேனல்கள் மூலம் மட்டுமே செயற்பட முடியும். அவை செயற்பட சூரிய வெளிச்சம் தேவை. எனவே, சூரிய வெளிச்சம் உள்ள 14 நாட்கள் மட்டுமே லேண்டர், ரோவரின் ஆயுட்காலமாக இருக்கும். இந்த 14 நாட்களில் லேண்டரும் ரோவரும் இணைந்து பல ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளன.

### லேண்டரின் முக்கிய 04 ஆய்வுக் கருவிகள்

லேண்டரில் மொத்தம் 04 ஆய்வுக் கருவிகள் இடம்பெற்றுள்ளன. அவை, ராம்பா (ரேடியோ அனாடமி ஒப் மூன் பவுண்ட் ஹைபர்சென்சிடிவ் அயனோஸ்பியர் அண்ட் அட்மாஸ்பியர்), சேஸ்ட் (சந்திராஸ் சர்பேஸ் தெர்மோ பிசிகல் எக்ஸ்பிரிமென்ட்), ஐ.எல்.எஸ்.ஏ. (இன்ஸ்ட்ரூமென்ட் பார் லூனார் செய்ஸ்மிக் ஆக்டிவிட்டி), எல்.ஆர்.ஏ. (லேசர் ரிடிரோரெப்ளக்டர் அர்ரே) ஆகியவை ஆகும்.

### என்ன செய்யப்போகிறது ராம்பா

இதில் ராம்பா நிலவின் மண் மாதிரிகளை எடுத்து ஆய்வு செய்யும். நிலவில் வளிமண்டலம் இல்லை என்பதால் பகலில் அதிக வெயிலும் இரவில் தாங்க முடியாத குளிரும் நிலவும். இத்தகைய நிலைக்கான காரணம் குறித்து ராம்பா கருவி ஆய்வு செய்யும். அதன் மூலம் நிலவின் வயதையும் கணிக்க முடியும். அடுத்ததாக சேஸ்ட் கருவி, நிலவில் உள்ள பாறை, கற்களின் ஸ்திரத்தன்மை குறித்து ஆய்வு செய்யும். அவை நிலவில் நிலவும் வெப்பத்தை தாங்கும் அளவுக்கு உள்ளதா அல்லது உடைந்து போகக் கூடியதா என்பதை கண்டுபிடிக்கும். இதன்மூலம் அதிக வெப்பத்தால் மண்ணில் ஏற்படும் விளைவுகளை அறிந்து கொள்ள முடியும்.

### ஐ.எல்.எஸ்.ஏ. கருவி

ஐ.எல்.எஸ்.ஏ. கருவி, நிலவின் மேற்பரப்பில் நிலவும் அதிர்வுகளை ஆய்வு செய்யும். பூமியை போலவே நிலவிலும் அதிர்வுகள் உள்ளதா என்பது குறித்து கண்டறியும். இத்தகைய ஆய்வுகள், நிலவில் கட்டமைப்புகளை உருவாக்குவதற்கான சாத்தியங்களை உறுதிப்படுத்தும். கடைசியாக எல்.ஆர்.ஏ. கருவி, நிலவின் சுழற்சியை ஆய்வு செய்யும். நிலவு பூமியை சுற்றி வரும் போது அதன் இயக்கம் குறித்தும், அதிர்வுகள் குறித்தும் ஆய்வு செய்யும். இதே போல விக்ரம் ரோவரில் 2 ஆய்வுக் கருவிகள் உள்ளன. அவை எல்.ஐ.பி.எஸ். (லேசர் இன்டக்ட் பிரேக்டவுன் ஸ்பெக்ட்ரோஸ்கோப்ஸ்), ஏ.பி.எக்ஸ்.எஸ். (ஆல்பா பார்டிகிள் எக்ஸ்ரே ஸ்பெக்ட்ரோமீட்டர்).

### எல்.ஐ.பி.எஸ்.

இதில் எல்.ஐ.பி.எஸ். என்பது நிலவின் மேற்பரப்பிலுள்ள கனிம மற்றும் வேதியியல் கலவைகளை ஆய்வு செய்யும். ஏ.பி.எக்ஸ்.எஸ். என்பது நிலவில் 10 செ.மீ. வரை துளையிட்டு, அங்குள்ள பாறை மற்றும் மண்ணிலுள்ள மெக்னீசியம், டைட்டானியம், காப்பர் உள்ளிட்ட கனிமங்களின் இருப்பு குறித்து ஆய்வு செய்யும். இவை நிலாவில் மனிதன் வாழக்கூடிய சாத்தியங்கள் இருக்கிறதா என்பதை அறிய முக்கியமானவை. எனவே அடுத்த 14 நாட்கள் சந்திரயான்-3 அனுப்பும் தரவுகள் உலகளவில் இந்திய விண்வெளி ஆய்வு மையத்தை புதிய உச்சத்துக்கு கொண்டு செல்லவுள்ளது.

### யூடியூப்பில் நேரலை; உலக சாதனை

சந்திரயான் -3 நிலவில் தரையிறங்கும் வரலாற்று நிகழ்வு நேற்றுமுன்தினம் (23) நேரலையில் ஒளிபரப்பானது. அதில் யூடியூப் தளத்தில் மட்டும் 80 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பார்வையிட்டுள்ளனர். அது உலக சாதனையாகவும் அமைந்துள்ளது.

இதற்கு முன்னர் யூடியூப் தளத்தில் நேரலையில் ஒளிபரப்பான வீடியோக்களில் 'உலகக் கிண்ண உதைப்பந்தாட்டப்போட்டி - 2022' தொடரின் பிரேஸில் மற்றும் குரோஷியா அணிகளுக்கிடையிலான போட்டி சுமார் 61 இலட்சம் பார்வையை அதிகபட்சமாக பெற்றிருந்தது. அதே தொடரில் பிரேஸில் மற்றும் தென்கொரியா அணிகளுக்கு இடையிலான போட்டி சுமார் 52 இலட்சம் பார்வையை பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

### நிலவை ஆய்வு செய்ய விண்கலம் அனுப்பும் ஜப்பான்

இந்தியா மற்றும் ரஷ்யாவுக்கு அடுத்தபடியாக நிலவை ஆய்வு செய்வதற்காக ஜப்பானும் விண்கலம் அனுப்பவிருக்கிறது. நிலவை ஆய்வு செய்ய SLIM எனும் விண்கலத்தை ஜப்பான் விண்ணில் செலுத்தவுள்ளது. இன்று 25ஆம் திகதி அதிகாலை 5.30 மணியளவில் SLIM விண்கலத்தை ஜப்பான் செலுத்தவுள்ளது.

# சூடானில் 500 குழந்தைகள் பட்டினிச் சாவு

சூடானில் கடந்த ஏப்ரல் 15ஆம் திகதி முதல் அந்நாட்டு இராணுவத்துக்கும் துணை இராணுவப் படைகளுக்கும் இடையே மோதல் நீடித்து வரும் நிலையில் அங்கு ஊட்டச்சத்து உணவு மையங்களை மூட உத்தரவிடப்பட்டது.

இதனால் அங்கு 31,000 குழந்தைகள் சரியான ஊட்டச்சத்து கிடைக்காமல் பாதித்துள்ளன. கரோட்டம் நகரிலுள்ள அரசு நடத்தும் அநாதை இல்லங்களில் வசிக்கும் 500 குழந்தைகள் பட்டினியால் பரிதாபமாக உயிரிழந்தனர்.

## உலகக் கிண்ண செஸ்:

# பிரக்ஞானந்தாவுக்கு இரண்டாவது இடம்



உலகக் கிண்ண செஸ் இறுதிப் போட்டியின் டை பிரேக்கரில் வெற்றி பெற்றதன் மூலம் சாம்பியன் பட்டம் வென்றார் மேக்னஸ் கார்ல்சன். இந்தியாவின் இளம் வீரர் பிரக்ஞானந்தா போராடி தோல்வியுற்று இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார்.

உலகக் கோப்பை செஸ் தொடர் அஜர்பைஜானிலுள்ள பாகு நகரில் நடைபெற்றது. இதன் இறுதிப் போட்டியில் முதல் நிலை வீரரான நோர்வேயின் மேக்னஸ் கார்ல்சனுடன், 18 வயதான இந்திய கிராண்ட் மாஸ்டரான பிரக்ஞானந்தா விளையாடினார். இந்நிலையில் நேர கட்டுப்பாட்டுடன் ரேபிட் வடிவில் நேற்று நடைபெற்ற டைபிரேக்கரில் வெற்றியாளரை தீர்மானிக்கும் இரண்டு ஆட்டம் நடைபெற்றது. இதில் முதல் ஆட்டத்தில் கார்ல்சன் வெற்றிபெற்றார். இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதலே பிரக்ஞானந்தா சவால் கொடுத்தார். இருந்தும் போராடிய அவரால் வெற்றி பெற முடியவில்லை.

# அரிசி கையிருப்பு பெரும்போக அறுவடை வரை போதுமானது

## அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய தேவையில்லை என்கிறார் அமைச்சர் மஹிந்த அமரவீர



தற்போது கையிருப்பில் உள்ள அரிசி, அடுத்த பெரும்போக அறுவடை வரை போதுமானதாக இருப்பதால், வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லை என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

ஜனாதிபதியின் தொழிற்சங்க உறவுகள் பிரிவின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் (23) ஜனாதிபதி செயலகத்தில் "விவசாயத்துறையின் நவீனமயமாக்கல் மற்றும் அதன் சவால்கள்" என்ற தலைப்பில் இடம்பெற்ற துறைசார் நிபுணர்களுடனான கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது,

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றபோது, விவசாயிகள் வீதியில் இறங்கி போராட்டம் நடத்திக் கொண்டிருந்தார்கள். விவசாயிகளை மீண்டும் விவசாய வயல் நிலத்துக்குக் கொண்டுவருவது பாரிய சவாலாக இருந்தது.

அந்த சமயம் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தபோதும் உரம் இருக்கவில்லை. தேவையில்லாமல் மக்களை பயமுறுத்துவதாக சிலர் குற்றம் சாட்டினாலும் சர்வதேச சமூகமும் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என்று அறிவித்திருந்தது.

எப்படியோ விவசாயியை மீண்டும் வயல் நிலங்களுக்கு அனுப்பினோம். அதன்படி, 10 வருடங்களின் பின்னர், சிறுபோகத்தில் 512,000 ஹெக்டேயரில் பயிர்ச் செய்கை செய்வதற்கான வாய்ப்பு எமக்கு கிடைத்தது. பின்னர் பெரும்போகத்தில் 08 இலட்சம் ஹெக்டேயரில் பயிர்ச்செய்கை செய்யப்பட்டது. அந்த ஆண்டில் 08 இலட்சம் மெற்றிக்தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. ஆனால் இந்த வருடமும் அரிசியை இறக்குமதி செய்ய நேர்ந்தால் பாரிய பிரச்சினையை சந்திக்க வேண்டியிருக்கும். ஏனெனில், தற்போது இந்தியா அரிசி ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ளது.

எவ்வாறாயினும், பெரும்போக அறுவடை வெற்றிகரமாக இடம்பெற்றதாலும் மூன்று வகையான உரங்களும் உரிய நேரத்தில் வழங்கப்படுவதாலும் நிதி நிவாரணம் வழங்கப்படுவதாலும் எதிர்வரும் பெரும் போக அறுவடை வரை எங்களிடம் போதுமான அரிசி கையிருப்பிலுள்ளது.

மேலும், தற்போது நிலவும் வறட்சியால் சுமார் 75 ஆயிரம் ஏக்கர் வயல் நிலம் பாதிப்படைந்துள்ளது. ஆனால், வறட்சி இல்லாத ஏனைய மாகாணங்களில் விளைச்சல் மிகவும் அதிகமாக உள்ளன. எனவே, வெளிநாடுகளில் இருந்து அரிசி கொண்டு வர வேண்டிய அவசியம் இல்லை.

தற்போது நெல் மற்றும் அரிசி விலைகள் அதிகரித்துள்ளன. அதை கட்டுப்படுத்த வேண்டும். விவசாய அமைச்சர் என்ற ரீதியில் நெல் விலை உயர்வை நல்லதொரு நிலையாக கருதுகின்றேன். எனினும், நுகர்வோரை அசௌகரியத்துக்குள்ளாக்குவதை அனுமதிக்க முடியாது.

எனவே, நெல் மற்றும் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்த பொருத்தமான பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும். எங்களிடம் உள்ள குறைந்தளவிலான நிலத்தில் அதிக அறுவடையைப் பெறுவதற்கு ஏற்ற வகையில் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்.

விவசாயிகளை முறையாக அறிவூட்டாமை தொடர்பான குறைபாடு அடையாளங் காணப்பட்டுள்ளது. பல்வேறு அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்ட விவசாயத் தலைவர்கள் விவசாயிகளை சரியாக அறிவூட்ட நடவடிக்கை எடுக்காமல் இருப்பதைக் காணமுடிகிறது. எனினும், அரசியலின்றி விவசாயிகள் மத்தியில் சரியான தகவல் எடுத்துச் செல்லப்பட்ட ஹம்பாந்தோட்டை மாவட்டம் இந்த வருடம் சிறந்த விளைச்சலைப் பெற்றுள்ளது.

சரியான விதை நெல் தொடர்பான தகவல்களை விவசாயிகள் மத்தியில் கொண்டு செல்லத் தவறும் பட்சத்தில் அந்தச் செயற்பாடுகள் வெற்றியளிக்காது. அதேபோல் புதிய தொழில்நுட்ப பயன்பாடு மற்றும் அதன் பலன்கள் தொடர்பான விடயங்களை விவசாயிகள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும். அவை சாத்தியமடையும் பட்சத்தில் எமது விளைச்சல் நிலங்களில் தன்னிறைவான விளைச்சலை பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக் கிட்டும்.

விளைச்சல் செயற்பாடுகள் தொடர்பில் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் இளைஞர்களுக்கு உதவும் வகையில் அவர்களுக்கு கடன் வசதிகளை பெற்றுக்கொடுக்க உள்ளதாகவும் இன்றளவில் விவசாயிகள் தங்களது பிள்ளைகளும் விவசாயிகளாவதை விரும்புவதில்லை. அந்த எண்ணக்கருவை நாம் மாற்றியமைக்க வேண்டும். அந்த அனைத்துச் செயற்பாடுகளிலும் வெற்றிகாண முடியும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

# மன்னார் முள்ளிக்கண்டல் பகுதியில் துப்பாக்கிச்சூடு - இருவர் உயிரிழப்பு

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார், அடம்பன், முள்ளிக்கண்டல் பகுதியில் நேற்று வியாழக்கிழமை (24) காலை மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் மீது இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் குறித்த இருவரும் உயிரிழந்துள்ளதாக தெரியவருகிறது.

மன்னார், நொச்சிக்குளம் பகுதியைச் சேர்ந்த ஜேசுதாசன் அருந்தவராஜா (வயது-43), மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சன்னார் கிராமத்தைச் சேர்ந்த கணபதி காளிமுத்து (வயது-56) ஆகிய இரு குடும்பஸ்தர்களே மேற்படி சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

குறித்த இருவரும் நேற்று (24) வியாழக்கிழமை காலை மோட்டார் சைக்கிளில் வயலுக்குச் சென்ற போது குறித்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம் பெற்றுள்ளது. கொலைக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை.



இதேவேளை, கடந்த வருடம் மன்னார் நொச்சிக்குளம் பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட நொச்சி குளத்தைச் சேர்ந்த ஒருவரும் குறித்த துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார்.

பலிக்கு பலி வாங்கும் நோக்குடன் இச்சம்பவம் இடம் பெற்றிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த இரட்டை கொலை தொடர்பாக அடம்பன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# 'தௌஹீத் பிரசாரப்பணி தோற்றமும் வீழ்ச்சியும்' நூல் வெளியீட்டு விழா

திக்குவெல்லை மௌலானா மௌலவி செய்யது இஸ்மாயில் இமாம் எழுதிய இலங்கையில் தௌஹீத் பிரசாரப்பணி தோற்றமும் வீழ்ச்சியும் நூல் வெளியீடு எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு திக்குவெல்லை மின்ஹாத் தேசிய பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

தென் மாகாண தமிழ் மொழி பாடசாலை பிரதி கல்விப்பணிப்பாளர் அஷ்-ஷெய்க் எம்.ஏ.எம். மஷாயிம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் ஹமீத் அல்-ஹுஸைனியா அதிபர் எம்.ரீ.எம். ரிஸ்கி வரவேற்புரை நிகழ்த்தவிருப்பதோடு மௌலவி எம்.எஸ்.எம்.பாயிஸ்(இஸ்ஹானி), ஓய்வு பெற்ற முன்னாள் தென்மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஜே.எம். மொஹமட் மற்றும் ஓய்வுபெற்ற முன்னாள் தேர்தல் அதிகாரி எம்.ஆர்.எம். நிஸ்தார் ஆகியோர் கருத்துரையாற்றுவர். யோனகபுர ஹம்ஸாவின் கவிவாழ்த்தும் இடம்பெற உள்ளது.

நூல் ஆய்வுரையை மௌலானா மௌலவி ஜெ. அப்துல் மஜீத் பாகவீ (பிரதம கதீப், நாகோர் மஸ்ஜித் - மலேசியா) நிகழ்த்தவிருப்பதுடன் சிறப்புரையை திக்குவெல்லை கமால் நிகழ்த்தவுள்ளார்.

## வெப்பநிலை அதிகரிப்பால் பொதுமக்கள் அசௌகரியம்

தோப்பூர்

திருகோணமலை, தோப்பூர் பிரதேசத்தில் அண்மைக்காலமாக நாளாந்தம் அதிகரிக்கும் வெப்பநிலை காரணமாக பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

சராசரியாக 35 பாகை செல்சியஸுக்கும் அதிகளவில் வெப்பநிலை பதிவாவதனால் அதிகரித்த வெப்பநிலை காரணமாக அதிக வியர்வையும் ஏற்படுகின்றது. இதனால் பல்வேறு நோய்களுக்கும் ஆளாவதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.மேலும், குறித்த காலநிலை மாற்றத்தால் நாளாந்த வேலைகளைக்கூட சரியானமுறையில் நிறைவேற்ற முடியாமல் வீட்டிலேயே இருக்கவேண்டிய நிலையில் உள்ளதாகவும் இதனால் பொருளாதார ரீதியாக தாம் பல்வேறு பாதிப்புகளை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கின்றனர்.

வெப்பநிலை அதிகரிப்பால் சிறுவர்கள் மற்றும் வயோதிபர்கள் வெளியில் நடமாடுவதை தவிர்த்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





அம்பாறை, தம்பிலுவில் முனையூர் அருள்மிகு ஸ்ரீபடபத்திரகாளியம்மன் ஆலய வருடாந்த அலங்கார திருச்சடங்கு சக்தி விழா செவ்வாய்க்கிழமை(22) திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமானது. தொடர்ந்து இடம்பெறும் பூஜை நிகழ்வைத் தொடர்ந்து 25ஆம் திகதி பாற்குட பவனியும் 30ஆம் திகதி தீ மிதிப்பும் இடம்பெறும். கிரியா கால நிகழ்வுகளை பிரதிஸ்டா பிரதமகுரு தேசமான்ய அருட்கலைத்திலகம் காளிபூஜா துரந்தரர் விஸ்வபிரம்மஸ்ரீ செ.சற்குணராஜா தலைமையிலான குருமார்கள் நடத்துவர்.

**படங்கள்:** ஆலையடிவேம்பு செய்தியாளர்

## புனித வின்சன்ட் டி போல் முன்பள்ளி பாடசாலையின் விளையாட்டு விழா







கல்லடி செய்தியாளர்

மட்டக்களப்பு இருதயபுரம் புனித வின்சன்ட் டி போல் முன்பள்ளி பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இருதயநாதர் ஆலய பங்குத்தந்தையும் குரு முதல்வருமான அருட்பணி ஜி.அலெக்ஸ் றொபட்டின் தலைமையில் இருதயநாதர் ஆலய முன்றலில் சனிக்கிழமை(19) மற்றும் ஞாயிற்றுக்கிழமை(20) ஆகிய இரு தினங்களாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அதிதிகளாக சகாயபுரம் பங்குத்தந்தை அருட்பணி பிறைனர் செலர், மட்டக்களப்பு ஆயரான நிதிப் பொறுப்பாளர் அருட்பணி ஜே.எஸ்.மொறாயஸ், மட்டக்களப்பு வலய முன்பிள்ளைப் பருவ பராமரிப்பும் அபிவிருத்திக்கும் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் முத்துராஜா புவிராஜா, மண்முனை வடக்குப் பிரதேச செயலக முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் திருச்செல்வம் மேகராஜா, அருட்சகோதரி எஸ்.வேஜினியா ஜெயாணி, நற்கருணைப் பணியாளர்களான எஸ்.அன்ரனி, கே.பத்மநாதன், முதன்மை உளவளத்துணையாளரும் ஆசிரியருமான க.ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் ஆரம்ப நிகழ்வாக பிள்ளைகளினால் மாலை அணிவிக்கப்பட்டு மலர்க்கொத்துகளும் வழங்கி அதிதிகள் வரவேற்கப்பட்டனர். மங்கள விளக்கேற்றல், இறை வணக்கம் ஆகிய சம்பிரதாய நிகழ்வுகளும் இடம்பெற்றதோடு பிள்ளைகளினால் ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டதுடன், அவர்களின் ஆற்றல்கள், திறமைகளை வெளிக்கொணரும் வகையில் பல்வேறுபட்ட மகிழ்ச்சிகரமான விளையாட்டுகளும் இடம்பெற்றன. விளையாட்டு விழாவில் கலந்துகொண்ட அனைத்துப் பிள்ளைகளுக்கும் கேடயங்கள், சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன.

## விளையாட்டு உபகரணம் வழங்கல்

மாளிகைக்காடு செய்தியாளர்



மனாரியன் 88 அமைப்பின் வேண்டுகோளுக்கிணங்க மருதமுனை எலைட் விளையாட்டுக் கழகத்துடனான சிநேகபூர்வ கலந்துரையாடல் திங்கட்கிழமை இடம்பெற்றது.

பர்வின் ட்ரடிங் நிறுவனம் மற்றும் லதான் அக்ரோ இன்டர்நேசனல் நிறுவனப் பணிப்பாளர் கலில் முஸ்தபாவுடனான குறித்த கலந்துரையாடல் மருதமுனை பிரதான வீதியில் அமைந்துள்ள முஸ்தபா கம்பளைஸ் நிறுவன காரியாலயத்தில் இடம்பெற்றது.

இதன்போது எலைட் விளையாட்டுக் கழக கட்டமைப்பு, முன்னேற்றம் மற்றும் எதிர்கால அபிவிருத்திகள் குறித்த விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. மேலும் இதன்போது எலைட் விளையாட்டுக் கழக வளர்ச்சிக்காக விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டன.

## அல்-முனீறா மகளிர் பாடசாலை திறன் வகுப்பறை திறந்து வைப்பு



மட்டக்களப்பு செய்தியாளர்

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் உள்ளிட்ட பல பகுதிகளிலும் மூவின மக்கள் மத்தியிலும் சமூக சேவைகளை மேற்கொண்டுவரும் வன்னி ஹோப் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் அம்பாறை, திருக்கோவில் கல்வி வலயத்துக்குட்பட்ட தம்பிலுவில் சரஸ்வதி வித்தியாலயம் மற்றும் அக்கரைப்பற்று கல்வி வலயத்துக்குட்பட்ட அட்டாளைச்சேனை அல்-முனீறா மகளிர் உயர்தர பாடசாலை ஆகிய இரு பாடசாலைகளிலும் திறன் வகுப்பறை திறந்து வைக்கும் நிகழ்வு புதன்கிழமை(23) இடம்பெற்றது.

இதன்போது வன்னி ஹோப் நிறுவனத்தின் பணிப்பாளர்களான றஞ்சன் சிவஞானசுந்தரம்(அவுஸ்திரேலியா), வைத்தியர் மாலதி வரன்(அவுஸ்திரேலியா), எம்.ரி.எம்.முஹமட் பாரீஸ்(இலங்கை) மற்றும் இணைப்பாளர்களான சீ.ரேகா, ஆர்.கணேசமூர்த்தி, வ.சக்திவேல் மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விச் சமூகத்தினர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.



தேசிய காங்கிரஸின் தலைவரும் திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா கிண்ணியா, மூதூர் மற்றும் குச்சவெளி ஆகிய பிரதேச செயலகங்களுக்கான ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

**படம்:** மீரா நகர், சாய்ந்தமருது செய்தியாளர்கள்

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com





அம்கோர் நிறுவனத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கிடையிலான 'ஆட்கடத்தல்' எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற சித்திரப் போட்டியில் பங்குபற்றி மூதூர் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் ஜே.சும்றி வெற்றிபெற்றமைக்காக பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக்கினால் ஆறுதல் பரிசுத்தொகையாக காசோலை வழங்கப்பட்டது.

தோப்பூர்







காத்தான்குடி நகர சபையின் கீழ் இயங்கிவரும் முன்மாதிரி பாலர் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான வாய்ச் சுகாதாரம் மற்றும் பற்சுகாதாரம் தொடர்பிலான விழிப்புணர்வும் பரிசோதனையும் வியாழக்கிழமை(24) பாலர் பாடசாலையில் நடைபெற்றன. நகரசபைச் செயலாளர் திருமதி ரிப்கா ஷபீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பற் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர் யாழினி சிறிபரதன், சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம்.றஹ்மத்துல்லாஹ் ஆகியோர் கலந்துகொண்டு விழிப்புணர்வுத் தகவல்களை வழங்கியதுடன் மாணவர்களுக்கு பரிசோதனைகளையும் மேற்கொண்டனர்.

**படங்கள்:** காத்தான்குடி செய்தியாளர்

## 18 வழக்குகளில் 15 வழக்குகளை சமரசம் செய்துவைத்த காதி நீதிமன்றம்

### நிர்வாகத்தினருக்கு பொதுமக்கள் நன்றி தெரிவிப்பு

பொலிவேரியன் செய்தியாளர்

விவாகரத்துக்காக விண்ணப்பிக்கப்பட்ட 18 வழக்குகளில் 15 வழக்குகளை சமரசம் செய்து வைத்து சாதனை படைத்துள்ளது சாய்ந்தமருது காதி நீதிமன்றம்.

சாய்ந்தமருது காதி நீதிமன்றத்தின் காதி நீதிபதியாக கடந்த 04 மாதங்களுக்கு முன் அதாவது, குறுகிய காலத்தில் புதிதாக நியமனம் பெற்ற அஹமட் லெப்பை ஆதம்பாவா காதி நீதிபதியின் அயராத முயற்சியும் அதில் பணியாற்றும் ஜூரிமார்கள் மற்றும் நிர்வாகத்தின் முழுமையான ஒத்துழைப்புமே இச்சாதனையை நிலைநாட்டக் காரணமாக அமைந்துள்ளன.

கடந்த காலங்களில் இந்த விவாகரத்து வழக்குகள் பிரியும் தறுவாயிலிலேயே காணப்பட்டன. அதில் காதி நீதிபதி மற்றும் நிர்வாகத்தினர் சமயோசிதமான முறையில் முயற்சியைக் கையாண்டதன் பயனாக அவர்களைச் சேர்த்து வைத்து ஒரே குடும்பமாக, சந்தோஷமாக வாழ்வதற்கான வழிமுறைகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்.

அதில் ஒரு வழக்கு கடந்த 08 வருடங்களாக விவாகரத்து கிடைக்க வேண்டும் என்ற நோக்கிலேயே பேசப்பட்டு வந்தது. அந்த விவாகரத்து வழக்கில் திருப்புமுனையை ஏற்படுத்தி, பிரிந்திருந்தவர்களைச் சேர்த்து வைத்தமையானது சாய்ந்தமருது பிரதேசத்தில் பேசப்படும் ஒரு விவாகரத்து வழக்காகக் காணப்படுகிறது.

இன்றும் சாய்ந்தமருது காதி நீதிமன்றத்தில் தொடரப்படும் விவாகரத்து வழக்குகளை அவர்களைப் பிரிந்து செல்ல விடாது, அரும்பாடுபட்டாவது அவர்களைச் சமரசம் செய்து, சேர்த்து வைப்பதற்கான கடுமையான பிரயத்தனங்களை சாய்ந்தமருது காதி நீதிமன்றம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. இந்த சிறப்பான பணியைச் செய்து வருகின்ற சாய்ந்தமருது காதி நீதிபதி உட்பட அதில் பணியாற்றும் ஜூரிமார்கள் மற்றும் நிர்வாகத்தினருக்கு பொதுமக்கள் தமது நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளனர்.

## பொலிஸ் தடுப்புக்காவலில் இருந்த இளைஞன் தூக்கிட்டுத் தற்கொலை

அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை ஜமாலியா பகுதியில் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரொருவர் பொலிஸ் தடுப்புக் காவலில் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

இச்சம்பவம் புதன்கிழமை(23) மாலை 4.50 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்த இளைஞன் திருகோணமலை - ஜமாலியா, தக்வா நகரைச் சேர்ந்த சுபைர் முஹம்மது ஜூனைட் (26 வயது) எனவும் தெரிய வருகின்றது.

ஜமாலியா - கடற்கரைப் பகுதியில் 21ஆம் திகதி நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் பணத்தை திருடியதாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இம்முறைப்பாட்டையடுத்து குறித்த சந்தேக நபரை 22ஆம் திகதி மாலை தலைமையகப் பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று தடுப்புக் காவலில் வைத்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த இளைஞர் சம்பவதினத்தன்று மாலை தலைமையக பொலிஸ் நிலையத் தடுப்புக் காவலில் இருக்கின்ற மலசலகூடத்துக்குள் தான் அணிந்திருந்த ஆடையைக் கிழித்து தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

ஆனாலும் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் தொடர்பில் எதுவித முறைப்பாடுகளும் பொலிஸ் புத்தகத்தில் எழுதப்படாத நிலையில் சம்பவதினத்தன்று மாலை வரை தடுப்புக் காவலில் வைத்திருந்த நிலையில், அவர் உயிரிழந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. அதேவேளை, உயிரிழந்த குறித்த சந்தேக நபர் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நபரை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த குறித்த இளைஞர் உயிரிழந்துள்ளார் என கேள்விப்பட்டதையடுத்து சிலர் தாக்கியுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இத்தாக்குதலினால் ஜமாலியா- லவ்லேன் பகுதியில் வசித்து வரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அலி சப்ரி முஹம்மட் ரிஸ்வான் (40வயது) மற்றும் அலி சப்ரி கடாபி (44வயது) ஆகியோர் தாக்குதலுக்குள்ளான நிலையில், திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

குறித்த மரணம் தொடர்பில் திருகோணமலை தலைமையகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இருந்தபோதிலும் கைதுசெய்யப்பட்ட குறித்த இளைஞரை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தாமல் தடுப்புக்காவலில் வைத்திருந்தமை தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு மரணத்துக்கான நீதியை பெற்றுத் தருமாறு உயிரிழந்தவரின் பெற்றோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

## பாராட்டி கௌரவிப்பு




மீரா நகர் செய்தியாளர்

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக இரசாயனவியல் துறையில் சிறப்பு சித்தி பட்டம் பெற்ற அக்கரைப்பற்றைச் சேர்ந்த இம்னாசா சஹீட்டைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு சனிக்கிழமை(19) நடைபெற்றது.

அக்கரைப்பற்று அமான் நிறுவனத்தின் அனுசரணையில் ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம்.ஹாசீம் தலைமையில் அக்கரைப்பற்று மென்கோ கார்டனில் நடைபெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்-ஷெய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு இம்மாணவியை பாராட்டி கௌரவித்தார்.

மேலும் அமான் நிறுவனத்தின் நிர்வாகிகள், கல்வியியலாளர்கள், புத்திஜீவிகள், மாணவியின் குடும்பத்தினர் மற்றும் அனுசரணையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இவர், அக்கரைப்பற்று அஸ்-ஸிறாஜ் மகா வித்தியாலயத்தின் (தேசிய பாடசாலை) பழைய மாணவியாவார்.

# மோட்டார் சைக்கிள் – சொகுசு பஸ் மோதி விபத்து; ஒருவர் உயிரிழப்பு: ஒருவர் வைத்தியசாலையில்

கல்குடா செய்தியாளர்

மட்டக்களப்பு - கொழும்பு வீதியில் ஓட்டமாவடி, புனானையில் வியாழக்கிழமை(24) அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஆசிரியர் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றுமொருவர் காயமடைந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

ரிதிதென்ன பிரதேசத்தில் இருந்து ஓட்டமாவடி நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் அக்கரைப்பற்றில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் சொகுசு பஸ்ஸும் புனானை பிரதேசத்தில் வைத்து நேருக்கு நேர் மோதியதில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

ரிதிதென்ன இக்ரஹ் வித்தியாலயத்தின் ஆங்கிலப்பாட ஆசிரியரான ஸர்பராஸ் ஹுஸைன் முஹம்மது அஸாம் (வயது 25) என்பவரே உயிரிழந்தவராவார். மற்றைய இளைஞரான புஹாரி நுஸைக் அஹமட் என்பவர் காயமடைந்த நிலையில் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

உயிரிழந்த ஸர்பராஸ் ஹுஸைன் முஹம்மது அஸாம் என்பவர் அண்மையில் வழங்கப்பட்ட ஆங்கில டிப்ளோமா ஆசிரியர் நியமனம் பெற்று ரிதிதென்ன இக்ரஹ் வித்தியாலயத்தில் கடமையாற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பஸ்ஸின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# அம்பாறையில் தொழில் முனைவோர் செயலமர்வு





அம்பாறை

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அனுசரணையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் தொழில்துறையை அபிவிருத்தி செய்யும் திறன்மிகு தொழில் முனைவோர் எனும் வேலைத்திட்டமொன்றை தேசிய உற்பத்தித்திறன் செயலகம் முன்னெடுத்து வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்ட செயலக உற்பத்தித்திறன் மேம்பாட்டுப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கான செயலமர்வு அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீஸன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் புதன்கிழமை(23) இடம்பெற்றது.

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் ஐ.எச்.எம்.தசநாயக்கவின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம வளவாளராக மாவட்ட செயலக உற்பத்தித்திறன் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் புவனேந்திரன் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் சிறிய, நடுத்தர தொழில் முனைவோர் பிரிவின் வடகிழக்கு இணைப்பாளர் அச்சுதன் மற்றும் மாவட்ட செயலக உற்பத்தித்திறன் அபிவிருத்தி உத்தியோகத் தர்களான எஸ்.ரவீந்திரன், எம்.எம்.எம்.அர்சாத் உட்பட பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் உற்பத்தித்திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# வைத்திய அதிகாரிகள் வேலைநிறுத்தம்; வைத்திய சேவையில் இயல்புநிலை



காத்தான்குடி மேலதிக செய்தியாளர்

நாடளாவிய ரீதியில் வைத்தியசாலை அதிகாரிகள் நேற்று வியாழக்கிழமை(24) வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளபோதிலும், கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒரே ஒரு போதனா வைத்தியசாலையான மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைத்திய நடவடிக்கைகள் வழமை போன்று இடம்பெற்று வருகின்றன.

வெளி நோயாளர் பிரிவு கிளினிக்குகள் ஏனைய வைத்திய சேவைகள் அனைத்தும் வழமை போன்று இடம்பெற்று வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

மருந்து வழங்கல் பிரிவு, எக்ஸ்ரே பிரிவு, கதிரியக்கப் பிரிவு என்பன செயற்படாமையினால் நோயாளர்கள் திரும்பிச் சென்றதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இதைத் தவிர, வைத்தியசாலையின் அனைத்து நடவடிக்கைகளும் வழமை போன்று இடம்பெற்று வருவதாகவும் வைத்திய சேவையில் பாதிப்புகள் ஏற்படவில்லை எனவும் வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



முள்ளில் விழுந்த சேலையைப்போல 13ஆவது திருத்தம் போய் உள்ளதாம். தமிழ் கட்சிகள தந்திரமாக இத கையாளட்டாம் எண்டு வீணக்கட்சி அமைச்சர் டக்லஷ்மாமா சொல்லிப்போட்டாரு எலுவா...? முள்ளிவாய்க்காலில தமிழ் மக்கள விழ வைச்சத்தில இவருக்கும் பங்கு இருந்து...இப்ப முள்ளப்பற்றி கத சொல்லுறாரு... அடேயம்பி நீ மத்தியில கூட்டு மாகாணத்தில் கத்தரிக்கா எண்டலுவா 1990, தொடக்கம் இப்ப வரையும் அமைச்சராக இருந்து என்னத்த கிழிச்சா.... அதையும் ஒள்ளுப்பம் சொல்லன் பாப்பம்...?

# இளம் பிக்குகள் மூவர் பாலியல் துஷ்பிரயோகம்
# கைதான மதகுருவின் வழக்கு ஒத்திவைப்பு

அம்பாறை மாவட்ட செய்தியாளர்

சட்டமா அதிபரின் கவனத்துக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் தொடர்பில் உரிய ஆலோசனை கிடைக்கும் வரை இளம் பிக்குகள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டு நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்கப்பட்ட பிரதம பௌத்த மதகுரு தொடர்பான வழக்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் 13ஆம் திகதிவரை மறுவிசாரணைக்காக ஒத்திவைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கல்முனை தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விகாரை ஒன்றில் வைத்து 03 இளம் பிக்குகள் பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பிலான வழக்கு புதன்கிழமை (23) கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்நிலையிலேயே குறித்த வழக்கை ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

மேலும், குறித்த பாலியல் துஷ்பிரயோக வழக்கில் பிரதான சந்தேக நபராகக் குறிப்பிடப்படும் கல்முனை சுபத்ரா ராமய விகாராதிபதி சார்பில் முன்னாள் அமைச்சரும் சட்டத்தரணியுமான ஸ்ரீயானி விஜேவிக்கிரம தலைமையிலான சட்டத்தரணிகள் குழு ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்டம் சடயந்தலாவை பகுதி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 03 இளம் பிக்குகள் கல்முனை பகுதியில் அமைந்துள்ள விஹாரை ஒன்றில் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில், 2022 செப்டெம்பர் 13ஆம் திகதி கல்முனை சுபத்ரா ராமய விகாராதிபதியாக ரண்முத்துக்கல சங்கரத்ன தேரர் என்றழைக்கப்படும் பிரதான பௌத்த மதகுரு அம்பாறை மாவட்ட சிறுவர் பெண்கள் விசேட பிரிவினரால் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டு கல்முனை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனடிப்படையில், கல்முனை நீதிமன்ற நீதிவான் கைதான சந்தேக நபரான பௌத்த மதகுரு தொடர்புபட்ட 03 வழக்குகளில் தலா 03 பேர் வீதம் 09 பேர் கொண்ட 05 இலட்சம் ரூபா பெறுமதியான சீரப்பிணையில் செல்லவும் கடும் நிபந்தனைகளுடனும் பிணையில் செல்ல உத்தரவிட்டார்.

# கிண்ணியாவில் சிவில் அமைப்புகள் ஒன்றுகூடல்

சீனக்குடா செய்தியாளர்

''இலங்கை இனப்பிரச்சினை தீர்வும் கிழக்கு மாகாண முஸ்லிம்களும்'' எனும் தொனிப்பொருளில், அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்ட முஸ்லிம் சிவில் அமைப்புகளின் ஒன்றுகூடல் சனிக்கிழமை(26) கிண்ணியாவில் இடம்பெறவுள்ளது.

இலங்கையின் இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பிலும் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தினை அமுல்படுத்துவது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது.

கிண்ணியா மஜ்லிஸ் சூரா சபை ஏற்பாட்டில் நடைபெறவுள்ள ஒன்றுகூடலில் முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட கிழக்கு மாகாண முஸ்லிம்களின் அபிலாஷைகள், தேவைகள், எதிர்பார்ப்புகள் என்பன இந்தத் தீர்வுத் திட்டத்தில் உள்வாங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் தொடர்பில் அரசாங்கம் அக்கறை செலுத்த வேண்டும் என்கின்ற கோரிக்கையின் அடிப்படையிலும் இந்த ஒன்று கூடல் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக கிண்ணியா சூரா சபையின் தலைவர் ஏ.ஆர்.எம்.பரீட் தெரிவித்தார்.

# பிக்குகளின் அடாவடியை நிறுத்தக்கோரி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு







வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்

மட்டக்களப்பு, மயிலத்தமடு பகுதியில் ஊடகவியலாளர்கள், சர்வமதத் தலைவர்கள், குடிசார் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் பேரினவாதிகளால் தடுத்து வைத்தமைக்கு கண்டனம் தெரிவித்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினால் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று புதன்கிழமை(23) மேற்கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியின் அமெரிக்கமிஷன் தேவாலயத்துக்கு முன் வீதியில் ஒன்று கூடியவர்கள் வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள்.

''பிக்குகளின் அடாவடியை நிறுத்து, சர்வதேச சமூக செயற்பாட்டாளர்களை பாதுகாப்பதற்கு அழுத்தம் வழங்கு, ஊடகத்துறையை அடக்காதே'' போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் குறித்த விடயத்தில் ஜனாதிபதி கவனமெடுக்க வேண்டும் என நீதி கோரிய மகஜரையும் ஊடகங்கள் வாயிலாக சமர்ப்பித்தனர்.

அதேவேளை, மட்டக்களப்பு எல்லைக் கிராமமான மயிலத்தமடு மாதவனை பிரதேசத்தில் வறட்சிக் காலத்தில் நீரின்றி கால்நடைகள் எதிர்நோக்கும் விடயம் தொடர்பாகவும் சட்டவிரோத காணி அபகரிப்பு தொடர்பாகவும் நேரில் கண்டறியும் பொருட்டு செவ்வாய்க்கிழமை(22) சென்றிருந்த சர்வமதக் குழுவினர், ஊடகவியலாளர்கள் அங்கிருந்த பிக்குவின் தலைமை கொண்ட குழுவினரால் வழிமறித்து பலமணி நேரம் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பெரியநீலாவணை மயானத்தில் அஞ்சலி மண்டபம் நிர்மாணிப்பு

பாண்டிருப்பு செய்தியாளர்

கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பெரியநீலாவணை கிராமத்தில் அமைந்துள்ள இந்து மயானத்தில் இறந்தவர்களின் உடலை வைத்து இறுதி மரியாதை செலுத்தும் வகையில் அஞ்சலி மண்டபம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.



இதனை திறந்துவைக்கும் நிகழ்வு புதன்கிழமை(23) இடம்பெற்றது. இதன்போது திருமதி நவரெட்ணம் விஜயலட்சு கலந்துகொண்டு திறந்து வைத்தார். இந்நிகழ்வில் பெரிய நீலாவணை ஆலய நிர்வாகங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் பொது அமைப்புகள், அபிவிருத்திச் சங்கங்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பெரியநீலாவணையைச் சேர்ந்த அமரத்துவமடைந்த சமூக ஆர்வலர் செல்வரெட்ணம் நவரெட்ணம் ஞாபகார்த்தமாக அவரின் புதல்வர் நவரெட்ணம் ருக்மாங்கதன் குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்பில் பெரிய நீலாவணை நெக்ஸ்ட் ஸ்ரப் அமைப்பினரின் அனுசரணையில் குறித்த அஞ்சலி மண்டபம் நிர்மாணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அம்பியூலன்ஸ் வண்டி கையளிப்பு



மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று மேற்கு மீராவோடை பிரதேச வைத்தியசாலைக்கான அம்பியூலன்ஸ் மக்கள் பயன்பாட்டுக்காக வைத்தியசாலைக்கு மீள ஒப்படைக்கும் நிகழ்வு புதன்கிழமை (23) வைத்தியசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கே. சுகுணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வைத்தியசாலையின் பணிக் குழுவிடம் அம்பியூலன்ஸ் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது மீராவோடை பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சுகுணன் வைத்தியசாலைப் பணிகளை பிரதேச மக்களுக்கு வினைத்திறனாக பயனளிக்கும் முறையில் முன்னெடுப்பதற்கான ஆலோசனைகளையும் வழங்கினார்.

குறித்த அம்பியூலன்ஸ் பழுதடைந்திருந்த நிலையில், திருத்த வேலைகளுக்காக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் மீளப் பெறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வைத்தியசாலைகளின் கழிவுகளை மீள்சுழற்சிக்குட்படுத்த நடவடிக்கை
## கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

நிந்தவூர் செய்தியாளர்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிலுள்ள அரசாங்க மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் இருந்து வெளியாகும் கழிவுகளை தரநிர்ணயம் செய்து மீள்சுழற்சிக்குட்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

இது சம்பந்தமான வழிகாட்டல் மற்றும் சுகாதார உதவிகளை பொதுச் சுகாதாரப் பிரிவினரின் ஊடாக எடுக்கப்படவுள்ளது. வளமுகாமைத்துவ செயற்றிறனின் கீழ் பெறப்பட்ட உபகரணங்கள் இதற்கென விசேடமாகப் பயன்படுத்தப் படவுள்ளதுடன், இக் கழிவுகளை அகற்றும் செயன்முறைகளை மேற்பார்வை செய்வதற்கான கள விஜயமொன்றும் மேற்கொள்ளப்படவுள்ளது.



எதிர்காலத்தில் சுகாதார பராமரிப்பு நிலையங்களில் இக்கழிவகற்றும் பொறிமுறை அற்ற வைத்தியசாலைகளை கொத்தணியாக்கி இத்திட்டத்தை முகாமை செய்யவுள்ளதுடன், தனியார் வைத்தியசாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகளை முகாமை செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் வெற்றிகரமான இத் திட்டத்தை ஏனைய பிரதேசங்களிலும் எதிர்காலத்தில் அமுல்படுத்த கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

# ஆளும் அரசோடு தமிழ் எம்.பிக்கள் இணைந்திருந்தும் பிரயோசனமில்லை
## மட்டு. மனித உரிமைகள் ஏற்பாட்டாளர் கதிர் பாரதிதாசன்

புளியந்தீவு செய்தியாளர்

ஆளும் அரசோடு இணைந்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளையும் சலுகைகளையும் பெற்றிருக்கிறார்கள். இதனால் எந்தப் பிரயோசனமும் எமது இனத்துக்கு ஏற்பட்டதில்லை. இனிமேல் ஏற்படுமா என்று நம்பவும் முடியாதென மட்டக்களப்பு மனித உரிமைகள் ஏற்பாட்டாளர் கதிர் பாரதிதாசன் தெரிவித்தார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில், ஆளும் அரசோடு எம்மவர்கள் இணைந்திருப்பதால் எமக்கான உரிமையோ சலுகையோ கிடைக்கவில்லை. ஆனால் நாங்கள் பாதிக்கப்படுவதுமட்டும் குறையவில்லை. சமீபத்தில் எல்கடுவ தோட்டத்தில் தோட்டத் தொழிலாளியின் வீடொன்று அதே தோட்டத்து உயர் நிர்வாகியால் தகர்த்து நொறுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஸ்தலத்துக்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்டவருக்கு நட்டஈடு பெற்றுக் கொடுத்திருந்தார். இது பாராட்டப்படவேண்டிய விடயமாகும். இருந்தும், குற்றமிழைத்தவர் கைது செய்யப்படவில்லை. நீதிமன்றுக்கு கொண்டு செல்லப்படவுமில்லை. இது தொடர்பாக அமைச்சர் ஜீவன் பாராளுமன்றில் தனது இயலாமையை தெரிவித்துள்ளார். அவர் அமைச்சராகவிருந்தும் என்ன பிரயோசனம்? அதேபோன்று, மட்டக்களப்பு,மயிலத்தமடுவுக்கு கால்நடைப் பண்ணையாளர்களை சந்திக்கச் சென்ற சர்வமதப் பிரதிநிதிகளை வழிமறித்து சிங்கள மக்களாலும் பௌத்த பிக்குகளாலும் தாக்கப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள். இதுவொரு பாரிய குற்றமாகும்.

இதே மாவட்டத்தில், இரு இராஜாங்க அமைச்சர்கள் பதவியில் இருக்கிறார்கள். அவர்கள் பதவியில் இருந்தும் தமிழர்களுக்கு என்ன பிரயோசனம்? தமிழர்களின்மீது அடாவடித்தனம் கட்டவிழ்த்து விடப்படும்போது இவர்கள் அரசில் அமைச்சராக இருப்பதில் எமது தமிழ் மக்களுக்கு ஏதாவது சலுகை அல்லது நீதி, நியாயம் கிடைக்கிறதாவென்று பார்த்தால் ஒன்றுமே இல்லை. ஆதலால் அவர்கள் தொடர்ந்து பதவியில் இருக்க வேண்டுமா என்று எமது மக்கள் கேட்கிறார்கள் -என்றார்.

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk thamilaneditor@gmail.com

# சவால் நிறைந்த காலகட்டங்களில் வாடிக்கையாளர்களுக்கு தமது நிறுவனம் வெளிப்படுத்திய அர்ப்பணிப்பை எயார்டெல் லங்கா மீண்டும் உறுதிப்படுத்துகின்றது

இலங்கையிலுள்ள வாடிக்கையாளர்கள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இருந்தபோதிலும், நாட்டிலுள்ள இளைஞர்களிடையே மிகவும் விருப்பமான தொலைத்தொடர்பு நிறுவனமாக விளங்குகின்ற எயார்டெல் லங்கா கடினமான காலகட்டங்களில் தனது வாடிக்கையாளர்களுக்கு ஆதரவாக செயற்படும் என்ற அதன் தலையாய நிலைப்பாட்டை மீண்டும் உறுதிபடத் தெரிவித்துள்ளது.

ஒரு தசாப்தத்திற்கு முன்னர் இலங்கையில் நாம் முதன் முதலில் செயற்பாடுகளை ஆரம்பித்த காலத்திலிருந்து எயார்டெல் ஒரே இலக்கை நோக்கியே பயணித்தது. உலகத் தரம் வாய்ந்த நெட்வோர்க் அனுபவத்தை வழங்கவும் அதிகபட்ச பெறுமதி மற்றும் சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்க வேண்டும் என்பதுமே எமது நோக்கமாகக் காணப்பட்டது. குறிப்பாக, கடந்த மூன்று ஆண்டுகளில் இந்த வாக்குறுதியை நாம் நிறைவேற்றியுள்ளோம். சிறந்த முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு பெக்கேஜ்களை வழங்கி, வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான சேவையை வழங்க நாம் நடவடிக்கை எடுத்து அதனை செயலிலும் காட்டினோம். அத்துடன், புத்தாக்க உற்பத்திகளை வழங்கவும் நடவடிக்கை எடுத்தோம்.

இலங்கையின் பொருளாதாரத்தில் மிகவும் கடினமான வரலாற்றுச் சவால் நிறைந்த இக்காலப்பகுதியில் எமது வாடிக்கையாளர்களுக்கு உதவக்கூடிய எமது அர்ப்பணிப்பிலும் அவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் நாம் உறுதியாக நின்றோம். அவர்கள் எதிர்கொள்ளும் சுமையைத் தளர்த்தவும் எமது உலகத் தரம் வாய்ந்த வலையமைப்பை நம்பியிருக்கும் எமது வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் கல்வி, தொழில், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் தொடர்ந்து இணைந்திருப்பதற்கு விலையானது ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதை உறுதி செய்வதே எமது நோக்கம் என எயார்டெல் லங்காவின் பிரதம நிறைவேற்று அதிகாரி அஷீஸ் சந்திரா தெரிவித்தார்.

கடந்த ஓராண்டில் இலங்கையில் 1.1 மில்லியனுக்கும் அதிகமானோர் எயார்டெல் வழங்கிய ப்றீடம் பெக்கேஜ் இற்கு ஈர்க்கப்பட்டு அவர்கள் முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு பெக்கேஜ் இற்கு மாறியதனூடாக கடந்தாண்டில் எயார்டெல் நிறுவனம் இலங்கையின் தொலைத்தொடர்புத் துறையில் வலுவான வருமான வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எயார்டெல் 888 அண்லிமிட்டெட் ப்றீடம் பிளஸ் பெக்கேஜ் ஊடாக எயார்டெல் இலக்கங்களுக்கு வரையறை யற்ற அழைப்புகள், பேஸ்புக், மெசஞ்சர், வாட்ஸ் அப், TikTok, Instagram, Viber, IMO, Telegram மற்றும் யூடியூப் ஆகியவற்றிற்கான வரம்பற்ற அணுகலையும் தாராளமாக டேட்டாக்களையும் வழங்குவதுடன் இது 30 நாட்களுக்கு செல்லுபடி காலகட்டத்தையும் கொண்டிருந்தது. எமது இந்த பெக்கேஜ் விரிவான மற்றும் சௌகரிய விலையில் தீர்வைத் தேடிய வாடிக்கையாளர்கள் மத்தியில் சிறந்த வரவேற்பைப் பெற்றது.

எயார்டெல் அண்மையில் தனது 888 பெக்கேஜ்ஜில் இந்த செயலியின் வரம்பற்ற பயன்பாட்டையும் சேர்த்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் 888 ஐ மேலும் தவிர்க்க முடியாததாகவும் மதிப்புமிக்கதாகவும் மாற்றியுள்ளது. அறிமுகப்படுத்தப்பட்ட சில மாதங்களிலேயே ஏராளமான வாடிக்கையாளர்கள் இந்த பெக்கேஜ்ஜிற்கு மாறியுள்ளனர். மேலும் ஒவ்வொரு நாளும் அதிகமான வாடிக்கையாளர்கள் இதனை செயற்படுத்தி வருகின்றனர். அதிலும்

airtel
THE 5G READY NETWORK

50%க்கும் அதிகமான இளைஞர்களே இதனை செயற்படுத்தியுள்ளனர். இலங்கையின் இளைஞர்கள் மத்தியில் மக்களின் வர்த்தக நாமமாக எயார்டெல் விளங்குகின்றமை இதன் மூலம் புலனாகின்றது. எமது வாடிக்கையாளர்களின் தேவைகளைத் தொடர்ந்து கண்காணித்து மதிப்பீடு செய்வதிலும் அவர்களது பயன்பாட்டு விருப்பங்களின் அடிப்படையில் நாம் வழங்கும் சலுகைகளை மேம்படுத்துவதிலும் நாம் எப்போதும் கவனமாக செயற்படுகின்றோம். எயார்டெல் 888 பெக்கேஜ் போன்ற தயாரிப்புகள் எப்போதும் மதிப்பு நிறைந்ததாகவே உள்ளது. எமது வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கேற்ப வடிவமைக்கப்படுவதையும் நாம் உறுதி செய்வோம் என அஷிஸ் சந்திரா மேலும் குறிப்பிட்டார்.

ப்றீடம் அண்லிமிட்டெட் பெக்கேஜ் ஊடாக பிற் கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு எந்தவொரு வலையமைப்பிற்கும் வரையறையற்ற அழைப்புகளை வழங்கிய இலங்கையின் முதலாவது தொலைத்தொடர்பு நிறுவனம் என்ற பெருமையைப் பெற்ற எயார்டெல் முதலில் அதனை முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கே அறிமுகப்படுத்தியிருந்தது. வாடிக்கையாளர்களுக்கு அதிகபட்ச பெறுமதியை வழங்குகின்றதும் இலங்கை மொபைல் துறையில் புரட்சியை ஏற்படுத்தியுள்யுள்ளதுமான நிறுவனமானது, அதன் முக்கிய நோக்கமாக எயார்டெல் வரம்பற்ற 1,098 பிற்கொடுப்பனவு திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இந்த பெக்கேஜின் விலை 1,098 ரூபாவாகும். எந்த வலையமைப்பிற்கும் வரையறையற்ற அழைப்புகளை வழங்குகிறது. அத்துடன் ,40 ஜிபி வழங்கியதுடன் 4ஜி தரத்தையும் கொண்டுள்ளது.

இதனால் எச்.டி தர வீடியோ ஸ்ட்ரீமிங் மற்றும் மாதாந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய சமூக ஊடக பாவனை மற்றும் எஸ்.எம்.எஸ். வசதிகளையும் வழங்கி அவர்களது மாதாந்த தேவைகளை சந்திக்கின்றது.

அதிநவீன 5ஜி தயாராகும் உட்கட்டமைப்பு மூலம் இயங்கும் அதன் வலையமைப்பில் குறிப்பிடத்தக்க மேம்படுத்தல்களை செயற்படுத்துவது முதல் எயார்டெல் இலங்கை தொலைத்தொடர்பு சந்தையில் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையின் இளைஞர்களை வலுவூட்டுவதை நோக்கமாகக் கொண்ட நிறுவனம் சமூக உந்துதல் ஏற்படுத்தும் தயாரிப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

இலங்கை தொலைத்தொடர்பு வாடிக்கையாளர்களை மேம்படுத்தும் எயார்டெல் லங்காவின் முயற்சியானது அதனை ஒரு சக்தி வாய்ந்த தொலைத்தொடர்பு நிகழ்கால போக்குக்கேற்ப மாறியுள்ளது. அதன்பின்னர் அனைத்து தொழில்துறை சார்ந்தவர்கள் எயார்டெல்லை பின்தொடர்கின்றனர். எயார்டெல்லின் மிகவும் பிரபலமான பிற்கொடுப்பனவு டேட்டா டேட்டா ரோல் ஓவர் விரும்பும் அண்லிமிட்டெட் அழைப்புகளின் அறிமுகமும் இதில் அடங்கும். மேலும் தாராளமாக 30 ஜிபி வரையிலான இலவச டேட்டாவை வழங்குகிறது.

டேட்டா ரோல் ஓவர் அம்சத்தை வழங்கும் இலங்கையில் உள்ள ஒரே தொலைத்தொடர்பு நிறுவனமாக எயார்டெல் லங்கா உள்ளது. அதாவது, பயன்படுத்தப்படாத டேட்டாவை அடுத்த மாதத்திற்கு முன்னெடுத்துச் செல்லவும், 200 ஜிபி வரை அதனை சேர்க்கும் வகையிலும் வடிவமைத்துள்ளது. இந்த அம்சங்கள் வாடிக்கையாளர்களுக்கு தடையற்ற எச்டி தரத்திலான சமூக ஊடகங்கள் வீட்டிலிருந்து வேலை செய்தல் மற்றும் டேட்டாவை சேமித்து பதிவிறக்கம் செய்தல் போன்ற பல அம்சங்களை அதன் வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றது.

நாடு முழுவதுமுள்ள 25,000 சில்லறை விற்பனை நிலையங்களில் சிம் மாற்றுதல், பில் கொடுப்பனவு, மீள் இணைப்பு பெறுதல் உள்ளிட்ட ஏனைய வசதிகளை வழங்குவதன் மூலம் எயார்டெல் தமது வாடிக்கையாளர் சேவையை நாடு முழுவதும் மிகவும் விரிவுபடுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் அதன் வர்த்தக நடவடிக்கைகளை எயர்டெல் லங்கா 2009 ஆம் ஆண்டு ஆரம்பித்தது. அத்துடன், மிக வேகமாக ஒரு மில்லியன் வாடிக்கையாளர்களை தமது வலையமைப்பிற்குள் கொண்டு வந்த அதிவேக செயற்பாட்டாளராகக் காணப்படுகின்றது. இலங்கையில் முதலீட்டுச் சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள எயார்டெல் நாடு முழுவதும் உலகத் தரம் வாய்ந்த மொபைல் பிராட்பேண்ட் அனுபவங்களை வழங்குவதற்காக அதிநவீன உள்கட்டமைப்பு மற்றும் 5ஜி-தயாரான வலையமைப்பை மேம்படுத்தி மேம்படுத்தப்பட்ட 4ஜி அனுபவத்தை வழங்குவதில் குறிப்பிடத்தக்க முதலீடுகளையும் மேற்கொண்டுள்ளது.

# ஹோமாகமை கிளைக்கான புதிய தங்கக் கடன் மத்திய நிலையத்தை அமைத்த HNB FINANCE PLC

இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமான HNB FINANCE இன் புதிய தங்கக் கடன் மத்திய நிலையம் HNB FINANCE இன் ஹோமாகமை கிளை வளாகத்தில் இல. 62/A ஹைலெவல் வீதி ஹோமாகமையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாக HNB FINANCE இன் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சமிந்த பிரபாத் மற்றும் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரி மதுரங்க ஹீன்கெந்த ஆகியோர் கலந்துகொண்டதுடன் நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமையாளர்கள் உட்பட பெருமளவிலான மக்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர்.



ஹோமாகமை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளின் தங்கக் கடன் சேவைகளுக்கான தற்போதைய தேவைக்குத் தீர்வாக நிறுவனம் இந்தப் புதிய HNB FINANCE தங்கக் கடன் மத்திய நிலையத்தை அமைத்துள்ளது. Gold Loan, Gold Plan மற்றும் VIP Gold Loan சேவைகள் வாடிக்கையாளர்களின் தேவைகளை துல்லியமாகக் கண்டறிந்து நிதி நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட சிறந்த தங்கக் கடன் தீர்வுகள் என்று சந்தேகத்திற்கிடமின்றிக் கூறலாம். HNB FINANCE தங்கக் கடன் சேவையானது மூன்று நிமிடங்களில் மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் ஒரு பவுன் தங்கத்திற்கான அதிகபட்ச முற்பணத் தொகையைப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்குகிறது. இந்தப் புதிய தங்கக் கடன் சேவை அலகு தவணை முறையில் பணம் செலுத்தும் திறனுடன் நம்பகமான கொடுக்கல் வாங்கலை எதிர்பார்க்கும் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த தீர்வாக இருக்கும்.

"ஹோமாகமை மற்றும் அதனைச் சுற்றியுள்ள நகர்ப்புற மற்றும் கிராமியப் பொருளாதாரத்தில் வசிக்கும் மக்களுக்கு அவர்களின் தேவைகளை உணர்ந்து அவர்களுக்கு சரியான தனிப்பட்ட நிதித் தேவைகளை வழங்குவதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளதுடன் ஏற்கனவே இருக்கும் மற்றும் புதிய வாடிக்கையாளர்களை HNB FINANCE இன் நிதிச் சேவைகளுடன் இணைத்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அழைக்கிறோம்." என HNB FINANCE இன் தங்கக் கடன் பிரிவின் பிரதானி லக்ஷ்மன் ரணசிங்க தெரிவித்தார்.

HNB FINANCE தங்கக் கடன் சேவையின் கீழ் செயற்படும் Gold Plan சேவையானது தங்கக் கடன் துறையில் ஒரு புரட்சிகரமான சேவையாகும். மேலும் HNB FINANCE வாடிக்கையாளர் வாங்க விரும்பும் தங்க ஆபரணங்களுக்கு கடனை வழங்குகிறது மற்றும் வாடிக்கையாளர் இந்தக் கடன் தொகையை மாதாந்த தவணைகளில் செலுத்துவதற்கான வாய்ப்பை வழங்குகிறது. இந்த முதலீட்டுத் திட்டம் மிகவும் சிறந்த நிதித் திட்டமாகும். ஏனெனில், வாடிக்கையாளர்கள் தங்களுடைய தங்க இருப்பு களை அதிகரிக்கவும் தங்களுடைய எதிர்கால தங்க ஆபரண தேவைகளுக்காக தங்கத்தை வாங்கவும் பயன்படுத்தக்கூடிய மிகச் சிறந்த செயற்பாடாகும். மேலும் HNB FINANCE அறிமுகப்படுத்திய VIP Gold Loan, Gold Loan சேவை வணிக மற்றும் தனிப்பட்ட நிதித் தேவைகளுக்கு மிகவும் உகந்த நிதித் தீர்வு எனக் கூறலாம்.

"எங்கள் ஒவ்வொரு தங்கக் கடன் மத்திய நிலையங்கள் மூலமாகவும் அதிகபட்ச வாடிக்கை யாளர் திருப்தியைப் பேணுவதற்காக எங்கள் சேவைத் தரத்தை உயர் மட்டத்தில் பராமரிப்பதே நிறுவனத்தின் முதன்மை நோக்கமாகும்" -என லக்ஷ்மன் ரணசிங்க மேலும் தெரிவித்தார்.

# Everbolt Engineering நிறுவனத்துக்கு சிறந்த தொழில்முயற்சிக்கான உயர் திறன் விருது

மின் பொறியியலுடன் தொடர்புடைய உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்கும் முன்னணி நிறுவனமான எவர்போல்ட் தனியார் நிறுவனம், இலங்கை வணிகச் சபை ஏற்பாடு செய்த உயர் திறன் - 2023 விருது விழாவில் சிறிய அளவிலான பிரிவின் இரண்டாவது இடத்தை வென்றுள்ளது. மேற்படி விருது விழா அண்மையில் கொழும்பு ஷெங்ரீலா ஹோட்டலில் நடைபெற்றது. கைத்தொழில் தேவைகளுக்கான தன்னியக்க உற்பத்திகளை வழங்கும் சிறியதொரு நிறுவனமாக 2015 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட எவர்போல்ட் நிறுவனம் தற்போது முன்னணி பொறித்தொகுதி உற்பத்தியாளர்கள் மற்றும் கைத்தொழிற்சாலைகள் உள்ளிட்ட பல்வேறு தரப்புகளுக்கு பலதரப்பட்ட உற்பத்திகளையும் சேவைகளையும் வழங்குகிறது. Panel Accessories, Pneumatic



Accessories, Contactors & Miniature Circuit Breakers (MCB), Industrial Plugs & Sockets, Variable Speed Drivers, Sensors, Image Processing Cameras, Controllers, Stepper Motors & Drives மற்றும் Signal Lights ஆகியவை எவர்போல்ட் நிறுவனத்தின் உற்பத்திகளில் அதிக கேள்வியைக் கொண்ட உற்பத்திகளாகும். எவர்போல்ட் நிறுவனம் வழங்கும் சேவைகளில் பொறித்தொகுதிகள் மற்றும் கைத்தொழிற்சாலைகள் தானியங்கிளாக்கல், கைத்தொழில் பெனல் பதாகைகள், செயற்பாட்டு மேற்பார்வை மற்றும் நிருவாகக் கட்டமைப்புகள், மின்சக்தியை சேமிப்பதற்கான தீர்வுகள், மின்சக்தி மேற்பார்வை கட்டமைப்புகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றை பிரதானமாகக் குறிப்பிடலாம்.

2018 ஆம் ஆண்டில் தமது சகோதர நிறுவனங்களான Everbolt Engineering Services மற்றும் JIP Technology ஐ தொடங்கி சேவைத்துறைக்குள் பிரவேசித்தல், 2020 ஆம் ஆண்டில் Everbolt International நிறுவனத்தை தொடங்கி சர்வதேச மட்டத்துக்கு பிரவேசித்தல் மற்றும் 2022 ஆம் ஆண்டில் ISO 9001:2015 தரச் சான்றிதழை பெற்றமை எவர்போல்ட் நிறுவனத்தின் தனித்துவமான மைல்கல்லாகும். "ஒரு தொழில்முயற்சி வெற்றியளிக்க வேண்டுமெனில், அதன் உற்பத்திகள் மற்றும் சேவைகளின் தரம் மற்றும் சிறந்த வாடிக்கையாளர் உறவு போன்ற விடயங்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. நாம் எப்பொழுதும் வலுவான வாடிக்கையாளர் உறவைக் கட்டியெழுப்புவதற்கும் வாடிக்கையாளர்களுக்கு உயர் தரத்திலான உற்பத்திகளையும் சேவைகளையும் வழங்குவதற்கும் முன்னுரிமை அளித்து செயற்படுகின்றோம். எவர்போல்ட் நிறுவனத்துக்கு இந்த விருது கிடைத்தமைக்கு வாடிக்கையாளர்கள் எம்மீது வைத்த நம்பிக்கையும் நிறுவனத்தின் வெற்றிக்காக உழைக்கும் ஊழியர்களுமே காரணம் என்பதை உறுதியாகக் கூற முடியும்." - என எவர்போல்ட் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சமில பிரபாத் குருகே தெரிவித்துள்ளார்.

# நைன்வெல்ஸ், மகளிர், சிறுவர்கள் மற்றும் குடும்பங்கள் மீது கொண்டுள்ள அர்ப்பணிப்பை காசல் வீதி நைன்வெல்ஸ் ஆய்வுகூடம் மற்றும் மருந்தகத்தின் மூலமாக விரிவுபடுத்துகிறது

இலங்கையின் தனியார் சுகாதாரத் துறையில் மகளிர் மற்றும் சிறுவர் பராமரிப்பில் முன்னணியில் திகழும் நைன்வெல்ஸ் மருத்துவமனை, காசல் வீதியில் அதன் ஆய்வுக்கூடம் மற்றும் மருந்தகமான "Ninewells Labs & Meds" ஐப் பிரமாண்டமாக திறந்து வைப்பதை அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறது. இந்தப் புதிய மையமானது 164, காசல் வீதி என்ற முகவரியில் அமைந்துள்ளதுடன் நைன்வெல்ஸ் மருத்துவமனை 'வாழ்நாள் கவனிப்பு' என்ற தனது குறிக்கோளின் வெளிப்பாடாக ஒட்டுமொத்த குடும்பத்திற்கும் விரிவான சுகாதாரத் தீர்வுகளை வழங்குவதற்கான அதன் அர்ப்பணிப்பை சிறப்பாகத் தொடர்கிறது. 2023 ஜூலை 1 அன்று உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்ட காசல் வீதி நைன்வெல்ஸ் ஆய்வுகூடம் மற்றும் மருந்தகமானது உங்கள் சௌகரியத்திற்கேற்ப ISO சான்று அங்கீகாரம் பெற்ற நோயறிதல் சோதனை மற்றும் மருந்தக சேவைகளை வழங்குகிறது.

இந்தப் புத்தாக்கமான அணுகுமுறை யானது அனுபவம் வாய்ந்த தொழில்நுட்ப வல்லுநர்களால் நடத்தப்படும் துல்லியமான நோய் கண்டறியும் சேவைகளை வழங்க நைன்வெல்ஸ் மருத்துவமனக்கு இடமளிக்கிறது. அதிநவீன மற்றும் மிக உயர்ந்த தரமான நோய் கண்டறியும் சோதனைச் சேவைகள், அத்துடன் ஆரோக்கியம், சத்திர சிகிச்சை மற்றும் நுகர்வுப் பொருட்கள், தாய் - சேய் பராமரிப்புப் பொருட்கள் மற்றும் அற்புதமான தனிப்பட்ட பராமரிப்பு தயாரிப்பு வரிசை ஆகியவற்றுக்கான அணுகல் மூலம் வாடிக்கையாளர்கள் தங்களின் அனைத்து சுகாதாரத் தேவைகளையும் ஒரே கூரையின் கீழ் எளிதாகக் கண்டறிந்து பெற்றுக்கொள்ள முடியும். இங்குள்ள பிரத்தியேகமான மருந்தகம் அனைத்து மருந்துச்சீட்டுகளுக்கும் ஏற்ப மருந்துகளை வழங்கும் வசதியைக் கொண்டுள்ளதுடன் மகளிர் மற்றும் சிறுவர் மீது குறிப்பிட்ட கவனம் செலுத்தி சௌகரியம் மற்றும் இலகுதன்மையை உறுதி செய்கிறது.



காசல் வீதி ஆய்வுகூடம் மற்றும் மருந்தகம்

"காசல் வீதி, நைன்வெல்ஸ் ஆய்வுகூடம் மற்றும் மருந்தகத்தின் பிரமாண்டமான திறப்பு விழா எங்கள் பயணத்தில் ஓர் அற்புதமான சாதனை இலக்கைக் குறிக்கிறது" - என்று நைன்வெல்ஸ் மருத்துவமனையின் பணிப்பாளரான வைத்தியர் தியாஷா பெர்னாண்டோ கூறினார். "ஒட்டுமொத்த குடும்பத்திற்கும் சேவையளிக்கும் வகையில் துல்லியமான மற்றும் உயர்தர ஆய்வுகூட சோதனை அறிக்கைகளை வழங்க நாங்கள் அர்ப்பணிப்புடன் உள்ளோம். இந்த விரிவாக்கம் சமூகத்திற்கு தனிப்பயனாக் கப்பட்ட பராமரிப்பு மற்றும் விரிவான சுகாதார சேவைகளை வழங்குவதற் கான எங்கள் குறிக்கோளுடன் ஒத்துப்போவதுடன் அதேநேரத்தில், குடும்பங்களுக்கும் வலுவூட்டுகிறது." - என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

காசல் வீதி நைன்வெல்ஸ் ஆய்வுகூடம் மற்றும் மருந்தகமானது நைன்வெல்ஸ் மருத்துவமனையின் புதிய ஆய்வுகூட முயற்சியின் முதல் படியாகும். எதிர்காலத்தில் கொழும்பு முழுவதும் இதனை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. துல்லியமான, நம்பகமான மற்றும் விரைவான சோதனை முடிவுகள் மற்றும் ISO சான்று அங்கீகாரம் பெற்ற ஆய்வுகூட சோதனை கள் மூலம் நைன்வெல்ஸ் மருத்துவமனை அதிநவீன மருத்துவ சேவைகளை தனது சமூகங்களுக்கு நெருக்கமாகக் கொண்டு வருவதையும் ஒவ்வொரு நபரின் நல்வாழ்வையும் உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. 20 ஆண்டுகளுக்கும் மேலாக புகழ்பெற்ற சுகாதார சேவை வழங்குநராக நைன்வெல்ஸ் மருத்துவமனை சிறந்த தரமான சுகாதாரப் பராமரிப்பை வழங்குவதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்கிறது. காசல் வீதியில் புதிதாக தொடங்கப்பட்ட ஆய்வுகூடம் மற்றும் மருந்தகம், நிகரற்ற நிபுணத்துவம் மற்றும் அதிநவீன வசதிகளுடன் குடும்பங்களுக்கு சேவை செய்வதற்கான அதன் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது. நைன்வெல்ஸ் மருத்துவமனை, அனைத்து இலங்கையர்களின் சுகாதார அனுபவத்தை மேம்படுத்துவதற்கும் சுகாதாரப் பராமரிப்பில் அவர்கள் தேர்ந்தெடுக்கின்ற மற்றும் நம்பகமான கூட்டாளராக தலைப்படுவதற்கும் அர்ப்பணிப்புடன் உள்ளது.

# பிராட்பி வெற்றிக் கேடயத்தை பெருமைமிக்க அனுசரணையாளராக NDB மீண்டும் இணைத்துக்கொண்டது

நாட்டில் இளைஞர்களுக்கு வலுவூட்டல் மற்றும் விளையாட்டுகளை மேம்படுத்தும் முயற்சியில், NDB வங்கி தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக பிராட்பி போட்டியுடன் இணைவதோடு, ரோயல் கல்லூரியின் பிரதான நிகழ்வு அனுசரணையாளராகவும், 2023 ஆம் ஆண்டிற்கான திரித்துவக் கல்லூரி ரக்பி அணியின் உத்தியோகபூர்வ அனுசரணை யாளராகவும் இணைந்துகொண்டது.

77ஆவது பிராட்பி போட்டியின் முதலாவது போட்டியில் கண்டி திரித்துவக் கல்லூரி, ரோயல் கல்லூரிக்கு எதிராக பல்லேகல திரித்துவக் கல்லூரி ரக்பி மைதானத்தில் விளையாடியது, திரித்துவக் கல்லூரி 13-10 என்ற கணக்கில் இந்தப் போட்டியில் வெற்றி பெற்றது.இரண்டாவது போட்டியில் றோயல் கல்லூரி 27-17 என்ற புள்ளிக்கணக்கில் திரித்துவக் கல்லூரியை றோயல் கல்லூரி மைதானத்தில் தோற்கடித்தது. மொத்த புள்ளிகள் அடிப்படையில் றோயல் கல்லூரி திரித்துவக் கல்லூரியை 37- 30 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்டு கேடயத்தைத் தனதாக்கிக்கொண்டது.

கடந்த 5 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்ட றோயல் கல்லூரியின் தெவீன் பெரேராவிற்கு NDB வங்கியின் தலைவர் ஸ்ரீயான் குரே மற்றும் NDB சிரேஷ்ட உப தலைவர் சஞ்சய பெரேரா ஆகியோர் NDB Zee கணக்கை வழங்கினர். இந்தத் தெரிவு thepapare.com வர்ணனையாளர்களால் செய்யப்பட்டது.

18 மற்றும் 28 வயதுக்கிடைப்பட்ட இளைஞர்களுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட NDB Zee டிஜிட்டல் யூத் அக்கவுண்ட் பயனர்களுக்கு ஒரு தடையற்ற டிஜிட்டல் அனுபவத்தை வழங்குகிறது. இது உண்மையான டிஜிட்டல் தளத்தில் அவர்களின் அன்றாட வங்கிச் செயற்பாடுகளில் ஈடுபட உதவுகிறது. உங்கள் வாடிக்கையாளரை தெரிந்துகொள்ளுங்கள் ((vKYC)) என்ற வீடியோ முறையில் கணக்கைத் திறப்பது முதல் NEOS செயலி மூலம் மொபைல் பேங்கிங் வரை முந்தைய தலைமுறைகளை விட வசதி, சேவையின் வேகம் மற்றும் தனித்துவத்தை மதிக்கும் இந்தத் தொழில்நுட்ப ஆர்வளர்களான 'GenZ' வாடிக்கையாளரால் விரும்பப்படும் பரந்த அளவிலான வங்கிச் சேவைகளை NDB Zee எளிதாக்குகிறது.NDB Zee டிஜிட்டல் கணக்குதாரர்களுக்கு கல்வி மற்றும் தொழில் ஆலோசனை சேவைகள் மற்றும் கல்விக் கடன்கள் மற்றும் சம்பள முற்பணங்கள் ஆகியவற்றிற்கும் வசதிகள் உள்ளன.




பிராட்பி ஷீல்ட் என்பது பொதுவாக "தி பிராட்பி" என்று அழைக்கப்படுகிறது. இது இலங்கையின் பாடசாலைகளுக்கிடையேயான ரக்பி பருவத்தின் முக்கிய ஒரு போட்டியாகும். இந்தப் பாரம்பரிய போட்டி கொழும்பு ரோயல் கல்லூரி மற்றும் கண்டி திரித்துவக் கல்லூரி ஆகியவற்றுக்கிடையே ஆண்டுதோறும் விளையாடப்படுகிறது.

NDB வங்கி இலங்கையில் நான்காவது பெரிய பட்டியலிடப்பட்ட வணிக வங்கியாகும்.வங்கியானது சமீபத்தில் 2023 ஆம் ஆண்டின் சிறந்த வாடிக்கையாளர் வங்கியாகவும், சிறந்த பெரு நிறுவன வங்கியாகவும் Asiamoney ஆல் பெயரிடப்பட்டது.மேலும் இலங்கையின் LMD இன் வருடாந்த தரவரிசையின்படி தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக 2022 இல் இலங்கையில் அதிக விருது பெற்ற நிறுவனமாகத் திகழ்கிறது.Global Finance USA மற்றும் Euromony என்பவற்றின் வருடாந்த சிறந்த வங்கி விருது நிகழ்ச்சிகளில் 2022 ஆண்டின் இலங்கையின் சிறந்த வங்கியாக வங்கி தெரிவுசெய்யப்பட்டது. கூடுதலாக கிரேட் பிளேஸ் டு வோர்க் யு.எஸ்.ஏயினால் "இலங்கையில் 2022 இல் சிறந்த 50 பணியிடங்களில்" ஒன்றாக வங்கி பெயரிடப்பட்டது. NDB என்பது மூலதன சந்தை துணை நிறுவனங்களை உள்ளடக்கிய NDB குழுமத்தின் தாய் நிறுவனமாகும்.

# தேசிய ஒலிம்பிக் குழுவும் r வும் இணைந்து Next Champ இன் இரண்டாம் கட்டத்தை ஆரம்பிக்கின்றன

## 13 விளையாட்டு வீர - வீராங்கனைகள் சர்வதேச அரங்கில் இலங்கைக்கு வெற்றியைத் தேடித்தருவதற்கு தகுதியுடன் உள்ளனர்

Crysbro சுமார் அரை தசாப்தங்களுக்கு முன்னர் "Next Champ" பற்றிய சிந்தனையை உருவாக்கியது. ஆனால், அது 2019 இல் NOC SL இன் பிரவேசத்துடன் முழு அளவிலான கனிஷ்ட தடகள செயற்பாடாக உருவெடுத்தது. CRYSBRO Next Champ முன்முயற்சியானது உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் வழங்குவதாக உறுதியளித்திருந்தது. புதிய இளம் விளையாட்டு வீரர்களுக்கு இந்தத் திட்டம் வழியமைத்தமை குறிப்பிடத்தக்கது.





உண்மையில் முதல் கட்டத்தின் முடிவில் எதிர்பார்க்கப்பட்ட அளவு சாதகமான விளைவை அளித்தது என்பதை நிரூபித்தது. மேலும் விளக்கத்தின் போது நாம் விவரங்களைப் பற்றி ஆழமாகப் பேசுவோம்.

இப்போது முந்தைய பதிப்பின் வெற்றி மற்றும் உயர்-சாத்தியத்தைத் தொடர்ந்து NOC Sri Lanka - CRYSBRO Next Champ திட்டத்தின் இரண்டாம் கட்டம் கிராமப்புறங்களில் வசிக்கும் இலங்கையின் இளம் அர்ப்பணிப்பு மற்றும் சுறுசுறுப்பான திறமைசாலிகள் மீது மீண்டும் ஒரு தகுதியான ஒளியைப் பிரகாசிக்கச் செய்துள்ளது. நாட்டின் இம்முறை இலங்கையின் கிராமப்புற சமூகங்கள் முழுவதிலும் உள்ள நம்பிக்கைக்குரிய விளையாட்டு வீரர்களைக் கொண்ட 13 பேர் அடங்கிய பட்டியல் கீழே தரப்பட்டுள்ளன.

ஆரம்பத்திலிருந்தே ஒரு பலம் வாய்ந்த மற்றும் எதிர்கால நோக்குடைய திட்டமானது NOC SRI LANKA - CRYSBRO NEXT CHAMP என்பது இலங்கையின் தேசிய ஒலிம்பிக் குழு மற்றும் நாட்டின் கிராமப்புறங்களில் செயற்படும் 100% இலங்கை சார்ந்த விவசாய அடிப்படையிலான குழும நிறுவனங்களான Crysbro இடையேயான வெற்றிகரமான ஒத்துழைப்பின் விளைவாகும்.

ஓகஸ்ட் 17, 2023 அன்று Sri Lanka Olympic House Auditorium இல் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதில் இரு நிறுவனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய நபர்கள் மற்றும் உள்ளூர் ஊடக உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இரண்டாம் கட்டம் குறித்து விளக்கமளித்த NOC இலங்கையின் தலைவர் சுரேஷ் சுப்பிரமணியம் "எங்கள் முதல் கட்டத்தின் மகத்தான வெற்றியைப் பார்த்தபோது, இலங்கையில் ஏராளமான திறமையும், நெகிழ்ச்சியும் கொண்ட இளைஞர்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதை நாங்கள் அறிவோம். அவர்களின் தடகள ஆர்வங்களில் சிறந்து விளங்கும் வகையில், அவர்களுக்குத் தகுதியான ஆதரவைப் பெற்றார்.

NOC SRI LANKA - CRYSBRO Next Champ திட்டத்தின் இரண்டாம் கட்டத்துடன் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் 13 திறமையான விளையாட்டு வீரர்களை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம் என்பதை அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறோம். இது நாட்டிலுள்ள மிகவும் தகுதியான மற்றும் திறமையான இளைஞர் திறன்களை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. Crysbro என்ற இந்த முயற்சியில் எங்கள் பங்காளிகளுடன் மீண்டும் இணைந்ததற்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். மேலும் ஒவ்வொரு புதிய கட்டத்திலும் இந்தப் பயனுள்ள உறவை நீட்டிக்க எதிர்பார்க்கின்றோம்."

முதல் கட்டத்தின் வெற்றி குறித்து கருத்துத் தெரிவித்த Crysbro வின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் அமோர்ஸ் செல்லர், "நமது நாட்டின் அடுத்த தலைமுறையினருக்கும் NOC Sri Lanka - CRYSBRO Next Champ முன்முயற்சியின் மூலம் மகத்தான பெருமை உணர்வு மிகவும் வலுவானது மற்றும் இலங்கையின் கிராமப்புறங்களில் மறைந்திருந்த இளம் விளையாட்டு வீரர்களின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்து அந்த முயற்சி தேசிய பொக்கிஷமாக வளர்ந்துள்ளது. இலங்கையின் தேசிய ஒலிம்பிக் கமிட்டிக்கு நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். மேலும் நமது நாட்டிற்கு பெருமை, வெற்றி மற்றும் சர்வதேச அங்கீகாரத்தைக் கொண்டு வருவதில் மீண்டும் ஒன்றிணைந்து ஒருங்கிணைந்த பங்கை வகிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எமது புதிய விளையாட்டு வீரர்களுக்கு எங்கள் நல்வாழ்த்துகள் மற்றும் அவர்கள் சர்வதேச அரங்கில் ஆதிக்கம் செலுத்துவார்கள் என்று நம்புகிறோம்." - எனத் தெரிவித்தார்.

NOC Sri Lanka - CRYSBRO Next Champ நிகழ்ச்சித் திட்டமானது இளம் மற்றும் ஆர்வமுள்ள விளையாட்டு வீரர் கள் மற்றும் வீராங்கனைகளின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு ஆதரவளித்து அவர்களுக்கு உணவுப் பொருட்கள், உடைகள், விளையாட்டு உபகரணங்கள், பயிற்சி மற்றும் மாதாந்த ஊதியம் ஆகியவற்றை வழங்கி அவர்களை வெற்றிகரமான விளையாட்டு வாழ்க் கையை நோக்கி உந்துவிப்பதுடன் தேசத்திற்கும் பெருமை சேர்க்கிறது.

NOC Sri Lanka வின் முதல் கட்டம் CRYSBRO Next Champ முன்முயற்சியானது 2022 ஆம் ஆண்டு பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் வெண்கலப் பதக்கத்தைப் பெற்ற நெத்மி அஷின்சா போன்ற உயர்-திறமையான விளையாட்டு வீராங்கனைகளைக் கண்டுபிடித்தது. பொதுநலவாய விளையாட்டு 2022 இல் மல்யுத்த போட்டியில் இலங்கைக்கான முதல் பதக்கத்தை வென்றார். மேலும், ஆசிய தடகள சாம்பியன்ஷிப் 2023 இல் 800 மீற்றர் பெண்கள் Sprinting போட்டியில் இருந்து தருஷி கருணாரத்ன தங்கப் பதக்கத்தை நாட்டிற்கு பெற்றுக் கொடுத்தார். இத்திட்டம் தவிர, பல Crysbroபுலமைப்பரிசில்களைப் பெற்றவர்கள் முக்கிய திட்டத்திற்கு வெளியே ஒரு திட்டத்தில் வெளிநாடுகளில் தங்கள் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கும் ஒத்துழைப்புகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### Crysbro தொடர்பாக

50 ஆண்டுகளுக்கும் மேலான செழுமையான வரலாற்றைக் கொண்டு கோழி இறைச்சியை உற்பத்தி செய்வதில் தரம் மற்றும் நிலையான தரத்தில் Crysbro முன்னணியில் உள்ளது. இலங்கையின் முன்னணி கோழி உற்பத்தியாளர்களில் ஒருவராக விளங்கும் நிறுவனம் அதன் ஒட்டுமொத்த வியாபார வளர்ச்சியின் முக்கிய தூணாக நிலைத்தன்மையை நிலை நிறுத்துவதற்கான நீண்டகால அர்ப்பணிப் பையும் கொண்டுள்ளது. Crysbro இன் இறுதி-நுகர்வோர் தயாரிப்புகள் மனித நுகர்வுக்கான புரதத்தின் மிகவும் மலிவு ஆதாரங்களில் ஒன்றாக அறியப்பட்ட நிலையில், நிறுவனம் இலங்கையின் கிராமப்புற சமூகங்களில் அடிக்கடி வசித்த இளம் மற்றும் ஆர்வமுள்ள விளையாட்டு வீரர்களுக்கு அதிகாரம் அளிக்க முயன்றது.

2018 ஆம் ஆண்டில், கிரிஸ்ப்ரோ, CRYSBRO Next Champ திட்டத்தை அறிமுகப்படுத்தியது, இது தேசிய மற்றும் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற ஆர்வமுள்ள இளம் வீர வீராங்கனைகளுக்கு சிறந்த வழியை ஏற்படுத்திக் கொடுக்கிறது. இந்தத் திட்டம் மிகவும் விரிவான 150 - பலம் வாய்ந்த பட்டியலில் கவனம் செலுத்தியது. இது விளையாட்டில் அவர்களின் இலக்குகளை அடைவதற்கு நிதி ரீதியாகவும் மற்ற வகையிலும் உதவியளிக்கிறது.

2019 ஆம் ஆண்டில் Crysbro இலங்கை யின் தேசிய ஒலிம்பிக் குழுவுடன் கைகோர்த்து "NOC SRI LANKA - CRYSBRO NEXT Champமுயற்சியை அறிமுகப் படுத்தியது. இது "அடுத்த ஒலிம்பிக் நம்பிக்கையை மேம்படுத்துதல்" என்ற கருப்பொருளின் கீழ் தொடங்கப் பட்டது. இது பல்வேறு தனிப்பட்ட விளையாட்டுகளில் 20 இளம் விளை யாட்டு வீரர்களுக்கு நிதியுதவி அளித்தது. NOC ஸ்ரீலங்கா திறமையான விளையாட்டு வீரர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுடன் அவர்களின் பயிற்சியாளர்கள் மற்றும் அவர்களின் தேசிய கூட்டமைப்புகளுடன் ஒருங்கிணைப்பதற்கு பொறுப்பாக இருந்தது. அதே நேரத்தில், இலங்கையில் முதன்முறையாக, "அடுத்த ஒலிம்பிக் ஹோப்" என்ற ஒன்லைன் போர்டல் தொடங்கப்பட்டது. இது பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் விளை யாட்டு வீரர்கள் பள்ளிகள் மற்றும் விளையாட்டுக் குழுக்களுக்கு நன்கொடைகளை வழங்குவதற்காகவும் தொடங்கப்பட்டது.

# சகல வளங்களையும் தரும் வரலக்ஷ்மி விரதம்



என்.ஹரன்

சகலவிதமான செல்வயோகங்கள், சௌபாக்கியங்கள், புத்திரப்பேறு, கன்னிப்பெண்களுக்கு மனம் ஒத்த கணவன் போன்ற சகல ஐஸ்வரியங்களையும் வேண்டி ஆவணி மாத பௌர்ணமிக்கு முந்திய வெள்ளிக்கிழமைகளில் விரதமிருப்பதே வரலக்ஷ்மி விரதமாகும்.

'பொருளில்லாதோருக்கு இவ் உலகில்லை அருளில்லாதோர்க்கு அவ்வுலகில்லை' என்பதற்கமைவாக இன்று இந்தக் கலியுகத்தில் மானிடர்களை சீர்தூக்கிப்பார்க்கும் செல்வத்துக்கு அதிபதியான மகாலக்ஷ்மிக்குரிய விரதமான வரலக்ஷ்மி விரதம் சகல வீடுகள் மற்றும் ஆலயங்களிலும் சிறப்பாக நடைபெறுகின்றது.

வரலக்ஷ்மி நோன்பை முன்னிட்டு அனைத்து இந்து ஆலயங்களிலும் அம்மனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள், விஷேட பூசை நிகழ்வுகள் இடம்பெறுவதுடன் சுமங்கலிப் பெண்கள் விரதமிருந்து மஞ்சள் நிறத்தாலான காப்பை பிரசாதமாகப் பெற்றுக்கொண்டு அணிந்து கொள்வதும் வழக்கமாகும்.

வரலக்ஷ்மி விரதத்துக்கு புராணக் கதைகள் உள்ளன. அன்னை பார்வதியின் சாபத்துக்கு ஆளான தேவர் உலகின் சித்ரநேமி என்ற கணதேவதை, அப்சரஸ் பெண்கள் கடைப்பிடித்த வரலக்ஷ்மி விரதத்தைக் கண்டு அனுஷ்டித்து சாப விமோசனம் பெற்றார்.

பூவுலகில் சௌராஷ்டிர நாட்டின் ராணி சுசந்திரா, செல்வ வளத்தின் மமதையால் மகாலக்ஷ்மியை அவமதித்தாள். அதனால், அனைத்து செல்வங்களையும் இழந்து வருந்தினாள். சுசந்திராவின் மகள் சாருமதி, தெய்வ அனுகூலத்தால் வரலக்ஷ்மி விரதம் பற்றி அறிந்து, அதைக் கடைப்பிடித்தாள். அதனால் மகிழ்ந்த மகாலக்ஷ்மித் தாய், அவளுக்கு சகல நலன்களையும் அருளினாள். சுசந்திராவும் தன் மகளைப் பார்த்து வரலக்ஷ்மி விரதம் கடைப்பிடித்து, இழந்த செல்வத்தை மீண்டும் பெற்று வளமோடு வாழ்ந்தாள்.

இப்படி சகல வளங்களையும் தரும் இந்த வரலக்ஷ்மி விரத பூஜையை ஆவணி மாத பௌர்ணமிக்கு முன்வரும் வெள்ளிக்கிழமை செய்ய வேண்டும். முக்கியமாகச் செய்ய வேண்டியவர்கள் பெண் சுமங்கலிகள், தாலிப் பாக்கியத்துக்காகவும் சுபீட்சம், சௌபாக்கியம் போன்றவற்றுக்காகவும் இந்த விரதத்தை மேற்கொள்ள வேண்டும்.

கேட்கும் வரங்களைத் தரும் லக்ஷ்மி தேவியை பூஜித்தல் திருமணமான பெண்கள், தங்கள் திருமணத்தை அடுத்துவரும் வரலக்ஷ்மி பூஜையிலிருந்து இதை ஒவ்வொரு வருடமும் செய்யவேண்டும். வரலக்ஷ்மி விரதத்தின் போது வீட்டுக்கு விலக்காக இருந்தால் அடுத்துவரும் வெள்ளிக்கிழமை இந்தப் பூஜையைச் செய்யலாம். இதைச் செய்யும்போது சிறு பெண்களும் உடனிருந்து சரடைக் கட்டிக் கொள்ளலாம். மறுநாள் அம்மனுக்கு ஆரத்தி எடுத்த பின்னர் கலசத்தை அரிசி வைத்திருக்கும் பானையில் வைக்கவேண்டும்.

எல்லோராலும் மிக விரிவாகச் செய்ய இயலாவிட்டாலும் ஈடுபாட்டோடு தெரிந்த பாடல்களைப் பாடி, மகாலக்ஷ்மி அஷ்டோத்திரம் சொல்லி, பூக்களால் அர்ச்சனை செய்து, நிவேதனம் செய்து, நோன்பு சரடை கையில் கட்டி நிவேதனத்தை எல்லோருக்கும் கொடுத்து, வயதான சுமங்கலிப் பெண்களை வணங்கி தானங்கள் செய்து இந்த விரத பூஜையை நிறைவு செய்யலாம்.

இப்புனிதமான நன்நாளில் மகாலக்ஷ்மி தேவியை விரதமிருந்து பூசித்து அவளின் அருட்கடாட்சத்தைப் பெற்று செல்வச் செழிப்புடன் வாழ்வோமாக!

## பயணிகள் போக்குவரத்து பஸ்கள் இறக்குமதி

# ஒழுங்குபடுத்தல் தொடர்பான அறிக்கையை இரண்டு மாதத்துக்குள் சமர்ப்பிக்க வேண்டும்

## குழுவின் தலைவர் நாலக பண்டார கோட்டேகொட பணிப்புரை





பயணிகள் போக்குவரத்து பஸ்கள் இறக்குமதி மற்றும் வாகனங்களின் புகை வெளியீடு தொடர்பான கண்காணிப்பு, பரிசீலனை மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பான விடயங்கள் உள்ளடங்கிய அறிக்கையொன்றை இரண்டு மாதங்களுக்குள் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு வலுசக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் நாலக பண்டார கோட்டேகொட சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பணிப்புரை விடுத்தார்.

வலுசக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு பாராளுமன்ற உறுப்பினர் நாலக பண்டார கோட்டேகொட தலைமையில் 22 ஆம் திகதி பாராளுமன்றத்தில் கூடியது. அதன்போதே மேற்படி விடயம் குறித்து அவர் பணிப்புரை விடுத்தார். துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர் பிரதிநிதிகளும் இதன்போது கலந்துகொண்டனர்.

இந்நாட்டில் பயணிகள் போக்குவரத்து பஸ்களை கொண்டுவருவது தொடர்பில் குறைந்தபட்ச தரநிலையைத் தயாரிப்பது சம்பந்தமான முன்மொழிவு போக்குவரத்து அமைச்சினால் முன்வைக்கப்பட்டு அது தொடர்பில் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இதற்கமைய எதிர்காலத்தில் இந்நாட்டுக்கு பயணிகள் போக்குவரத்து பஸ்களை இறக்குமதி செய்யும் போது குழு தீர்மானித்த பிரமாணங்களுக்கமைய இறக்குமதி செய்யப்பட வேண்டும் என இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

இலங்கையில் இயங்கும் 90% வாகனங்களின் புகை வெளியீடு தரக்குறைவானது எனவும் வருடாந்த வெளியீட்டுக்கு முன்வைக்கப்படும் வாகனங்களின் 20% புகை வெளியீடு தீங்கு விளைவிக்கும் வாயுக்களைக் கொண்டது என குழுவில் புலப்பட்டது. இலங்கையில் இயங்கும் 90% வாகனங்கள் சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் வாயுக்களை வெளியிடுவதாகவும் தெரியவந்தது.

பயணிகள் போக்குவரத்து பஸ்கள் இறக்குமதி மற்றும் வாகனங்களின் புகை வெளியீடு தொடர்பான கண்காணிப்பு, பரிசீலனை மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பான விடயங்கள் உள்ளடக்கிய அறிக்கையொன்றை இரண்டு மாதங்களுக்குள் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறும் குழுவின் தலைவர் நாலக பண்டார கோட்டேகொட சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பணிப்புரை வழங்கினார்.

# விமானப்படைத் தளபதியை சந்தித்தார் இலங்கைக்கான மாலைதீவு உயர்ஸ்தானிகர்



இலங்கைக்கான மாலைதீவு உயர்ஸ்தானிகர் அலி ஃபைஸ் நேற்றுமுன்தினம் (23) இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவை விமானப்படைத் தலைமையகத்தில் சந்தித்தார் .

இதன்போது இருதரப்பினருக்குமான கலந்துரையாடலின் பின்பு இந்தச் சந்திப்பை நினைவுகூரும் வகையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

# திருட்டுப்போன ஆபரணங்கள் ஆலய நிர்வாகத்திடம் ஒப்படைப்பு



உடப்பு நிருபர்

உடப்பு ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் ஆலயத்தில் கடந்த ஜூலை 14 ஆம் திகதி அம்மனின் மாங்கல்யம் உட்பட பல ஆபரணங்கள் கொள்ளையிடப்பட்டன.பின்னர் விஷேட பாதுகாப்புப் படையினரும் உடப்பு பொலிஸாரும் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையையடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டு நகைகள் மீட்கப்பட்டதுடன் புத்தளம் நீதிமன்றத்திலும் அவர் ஆஜர்ப்படுத்தப்பட்டார். இந்நிலையில்,சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவர் நீர்கொழும்பு சிறைச்சாலையில் சிறையில் வைக்கப்பட்டுள்ளார். இதேவேளை, நேற்றுமுன்தினம் புதன்கிழமை (23) களவாடப்பட்ட ஆபரணங்கள் புத்தளம் நீதிமன்றத்தினால் உடப்பு இந்து ஆலய பரிபாலன சபையினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதன்போது,தலைவர் இரா.கலைச்செல்வன், செயலாளர், பொருளாளர், ஆலய பூசகர் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# மருந்துப் பொருட்கள் அன்பளிப்பு



எம்.எஸ்.எம்.முன்தஸிர்

தமிழ் கனேடியன் வோல்க்-2022 (Tamil Canadian Walk ) அமைப்பு ஒரு தொகுதி மருந்துப் பொருட்களை கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியது.

இது தொடர்பில் வைத்தியசாலையில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வில் அமைப்பின் இணைத் தலைவர் டாக்டர் மயில்வாகனம் மயிலாசன் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சாகரி கிரிவன்தெனியவிடம் மருந்துப்பொருட்களைக் கையளித்தார்.

இந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் நன்மை கருதி மருந்துப் பொருட்களை அன்பளிப்புச் செய்தமைக்காக வைத்தியசாலைப் பணிப்பாளர் தமிழ் கனேடிய அமைப்புக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துள்ளார்.

# யாழ். பல்கலையில் கண்காட்சி





யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை மற்றும் கலை வட்டம் என்பன இணைந்து ஏற்பாடு செய்த "சொர்க்கத்தின் சுமை மலையகக் கதைகளின் காட்சி" எனும் தொனிப்பொருளிலான கண்காட்சி நேற்றுமுன்தினம் (23)ஆரம்பமானது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறை காட்சிக்கூடத்தில் நேற்றுமுன்தினம் மாலை ஆரம்பமான கண்காட்சியை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை பார்வையிட முடியும்.

ஆரம்ப நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா, கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் தா.சனாதனன், யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் ஆகியோர் பங்கேற்றதுடன் விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஆர்வலர்கள், பிரபல கர்நாடக இசைப் பாடகர் ரி.எம். கிருஷ்ணா, பிரபல தமிழக எழுத்தாளர் பெருமாள் முருகன், வரலாற்றாசிரியரும் ஆய்வாளருமான பேராசிரியர் ஆ.இரா. வெங்கடாசலபதி மற்றும் காலச்சுவடு வெளியீட்டக உரிமையாளர் கண்ணன் சுந்தரம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

தென்னிந்தியாவிலிருந்து மலையகத்துக்கு தோட்டத் தொழிலாளர்கள் அழைத்து வரப்பட்டு இருநூறு ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு குறித்த கண்காட்சி ஏற்பாட்டாளர்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பதுளையில் சுற்றிவளைப்பு ஹெரோயின் வைத்திருந்தவர் கைது

பதுளை நகரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஹெரோயினுடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் பதுளை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபர் பதுளை நகரில் ஹெரோயின் உள்ளிட்ட பல்வேறு போதைப் பொருட்களை விற்பனை செய்து வருவதாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# காலமானார்



நல்லூரைப் பிறப்பிடமாகவும் யமுனாவீதி கல்வியாங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கவேலு ஐங்கரன் நேற்று (24) காலமானார்.

அன்னார் காலம் சென்ற சிங்கவேலு தேவசேனா தம்பதியின் அன்பு மகனும் புஸ்பவதியின் அன்புக் கணவரும் சிவசாந்தன், (Dotline Colour Lap) ஊழியரும், சுயாதீன ஊடகவியலாளர்), பிரசாந்தன் (சந்தோஷ் ஜுவல்லரி ஊழியர்) சௌமியா ஆகியோரின் அன்புத் தந்தையும் சஜீபனின் அன்பு மாமனாரும், சாயிஷாவின் அன்புப் பேரனும் காலம் சென்றவரான அமரர் ரகுநாதன், வித்தியாதரன், சண்முகதாஸ், விஜயகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரிகைகள் இன்று (25) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (24.08.2023)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 201.4213 | 214.0219 |
| கனேடியன் டொலர் | 226.7411 | 240.8398 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41.3565 | 44.5625 |
| யூரோ | 331.6056 | 350.0370 |
| ஜப்பான் யென் | 2.1241 | 2.2376 |
| சிங்கப்பூர் டொலர் | 224.0447 | 237.1465 |
| ஸ்ரேலிங் பவுன் | 388.3071 | 408.9209 |
| சுவிஸ் பிராங் | 338.2148 | 360.1219 |
| ஐ.அ. டொலர் | 304.0216 | 318.2388 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 826.2999 |
| குவைட் | குவைட் தினார் | 1,015.0108 |
| ஓமான் | ஓமான் றியால் | 809.1401 |
| கட்டார் | கட்டார் றியால் | 85.4802 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 83.0342 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 84.8122 |

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# பாடசாலைகள் வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் செப். 2இல் ஆரம்பம்

இலங்கை பாடசாலைகள் வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடர் - 2023 அடுத்த மாதம் 2ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 4ஆம் திகதி திங்கட்கிழமை வரை தொடர்ந்து மூன்று நாட்கள் பொலன்னறுவை தேசிய விளையாட்டுத் தொகுதியில் நடைபெறவுள்ளது.

கல்வியமைச்சின் அனுமதியுடன் இலங்கை பாடசாலைகள் வலைப்பந்தாட்ட சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ள குறித்த தொடர் 30 ஆவது தடவையாக நெஸ்லே லங்கா நிறுவனத்தின் மைலோவின் அனுசரணையுடன் நடத்தப்படும். இப்போட்டித் தொடரில் நாடு தழுவிய ரீதியில் 360 பாடசாலை வலைப் பந்தாட்ட அணிகள் பங்கேற் கவுள்ளன.

கடந்த முறை நடைபெற்ற போட்டித் தொடரைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையான அணிகள் இம்முறை பங்கேற்பதுடன், யாழ்ப்பாணம் மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களிலிருந்தும் அதிகளவிலான அணிகள் இம்முறை பங்கேற்பது விசேட அம்சமாகும்.

# இலங்கை இளையோர் அணியில் இடம்பிடித்த சாருஜன் சண்முகநாதன்



எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முதல் தம்புள்ள ரங்கிரி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ள மேற்கிந்திய தீவுகள் 19 வயதின் கீழ் அணிக்கு எதிராக நடைபெறவுள்ள தொடருக்கான 20 பேர்கொண்ட இலங்கை குழாம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட நிலையில், அதில் ஒரேயொரு தமிழ்பேசும் வீரராக சாருஜன் சண்முகநாதன் இடம்பெற்றுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ள 20 பேர்கொண்ட குழாத்தின் தலைவராக றோயல் கல்லூரியைச் சேர்ந்த சினெத் ஜயவர்தன நியமிக்கப்பட்டுள்ளதுடன், உப தலைவராக ரிச்மண்ட் கல்லூரியைச் சேர்ந்த மல்ஷ தருபதி நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் குழாத்தில் முக்கிய இணைப்பாக கொழும்பு சென். பெனடிக் கல்லூரியைச் சேர்ந்த தமிழ்பேசும் வீரர் சாருஜன் சண்முகநாதன் முதன்முறையாக 19 வயதின் கீழ் தேசிய மட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், இறுதியாக ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற முத்தரப்பு தொடரில் விளையாடிய 9 வீரர்கள் இந்தத் தொடருக்கான குழாத்தில் இணைக்கப்பட்டுள்ளனர்.

சுற்றுலா மேற்கிந்திய தீவுகள் மற்றும் இலங்கை 19 வயதின் கீழ் அணிகளுக்கிடையிலான தொடர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முதல் செப்டெம்பர் 15 ஆம் திகதி வரை நடைபெறுகிறது. போட்டிகள் அனைத்தும் தம்புள்ள ரங்கிரி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை 19 வயதின் கீழ் குழாம்

சினெத் ஜயவர்தன (தலைவர்), மல்ஷ தருபதி, விஷ்வ ராஜபக்ஷ, தினுர கலுபான, வியாஸ் தெவ்மிக, கருக சன்கெத், விஷ்வ லஹிரு, கவீஷ பியூமல், பெதும் மலிந்த, புலின பெரேரா, ரவிசான் நெத்சார, ருசாந்த கமகே, ருவிசான் பெரேரா, சாருஜன் சண்முகநாதன், விசென் ஹலம்பகே, ஹிரான் ஜயசுந்தர, தினிரு அபேவிக்ரம, ஜனித் பெர்னாண்டோ, சுபுன் வதுகே, தரன விமலதர்ம.

ஐ.சி.சி. உலகக்கிண்ணம் - 2023

# பயிற்சி ஆட்டத்தில் பங்களாதேஷ், ஆப்கானை எதிர்கொள்ளும் இலங்கை




இந்தியாவில் நடைபெறவுள்ள 2023 ஐ.சி.சி. உலகக்கிண்ணத் தொடரின் பயிற்சிப் போட்டிகளுக்கான அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளன. அதன்படி இலங்கை அணிக்கு பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுடன் போட்டிகள் காணப்படுகின்றன.

செப்டெம்பர் 29 முதல் ஒக்டோபர் 3 வரை குவஹாத்தி, ஹைதராபாத் மற்றும் திருவனந்தபுரத்தில் பயிற்சிப் போட்டிகள் நடைபெறும். பயிற்சி ஆட்டங்களின் தொடக்க நாளில் குவாஹாட்டியில் பங்களாதேஷ் - இலங்கையும், தென்னாபிரிக்கா திருவனந்தபுரத்தில் ஆப்கானிஸ்தானையும், நியூசிலாந்து ஹைதராபாத்தில் பாகிஸ்தானையும் எதிர்கொள்கிறது.

அனைத்து ஆட்டங்களும் இலங்கை நேரப்படி பிற்பகல் 2:00 மணிக்கு ஆரம்பமாகும். போட்டிகளின் போது அணிகள் தங்கள் 15 வீரர்கள் கொண்ட அணியில் உள்ள அனைத்து உறுப்பினர்களையும் களமிறக்க அனுமதிக்கப்படும்.

# எஸ்.ஆர். குமார் வெற்றிக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டி கலைமகள் தேசிய பாடசாலை அணி சம்பியன்



பேருவளை நிருபர்

பயாகலை இந்துக் கல்லூரி முன்னாள் அதிபரும் பேருவளை ஸேம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலய தற்போதைய அதிபருமான எஸ்.ஆர். குமாரின் சேவைகளை கௌரவிக்கும் வகையில் எஸ்.ஆர். குமார் வெற்றிக் கிண்ணத்திற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டி அண்மையில் பயாகலை இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

பிரதேசத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளின் கிரிக்கெட் அணிகள் இச்சுற்றுப் போட்டியில் பங்குபற்றியதோடு இறுதிப் போட்டி பயாகலை இந்துக் கல்லூரி அணிக்கும் கலைமகள் தேசிய பாடசாலை அணிக்குமிடையே நடைபெற்றது.

இப்போட்டியில் கலைமகள் தேசிய பாடசாலை அணி வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவாகியது. பரிசளிப்பு விழாவில் அதிபர் எஸ்.ஆர். குமார் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். இப்போட்டியை பயாகலை இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஏற்பாடு செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# அயர்லாந்துடனான ரி 20 தொடரைக் கைப்பற்றியது இந்தியா




அயர்லாந்து அணியுடனான 3 ஆட்டங்கள் கொண்ட ரி 20 சர்வதேச தொடரின் மூன்றாவது ஆட்டம் மழையால் முழுமையாகப் பாதிக்கப்பட இந்திய அணி தொடரை 2-0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

ஜஸ்பிரிட் பும்ரா தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி அயர்லாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட 20 ஓவர் தொடரில் பங்கேற்றது. இதில் மழையால் பாதியில் நிறுத்தப்பட்ட முதல் ஆட்டத்தில் டக்வொர்த் லீவிஸ் விதிப்படி 2 ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்தியா, 2 ஆவது ஆட்டத்தில் 33 ஓட்ட வித்தியாசத்தில் அயர்லாந்தை தோற்கடித்தது.

இந்நிலையில், 3 ஆவது மற்றும் கடைசி 20 ஓவர் போட்டி டப்ளினில் நேற்று முன்தினம் நடைபெற இருந்தது. இந்த நிலையில், போட்டி நடைபெறும் பகுதியில் தொடர் மழை பெய்தது. சில மணி நேரமாகியும் மழை தொடர்ந்ததால் இந்தப் போட்டி ரத்துச் செய்யப்பட்டது. இதனால் 2-0 என இந்திய அணி தொடரைக் கைப்பற்றியது. தொடர் ஆட்டநாயகனாக ஜஸ்பிரிட் பும்ரா தெரிவானார்.

# டயலொக் பாடசாலை ரக்பி நொக்கவுட் போட்டிகள் இன்றுடன் ஆரம்பம்




ஏ. அகீல் சிஹாப்

டயலொக் பாடசாலைகள் ரக்பி நொக்கவுட் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன. இன்றைய முதல் போட்டியில் டி.எஸ்.சேனநாயக்க கல்லூரியும் சாஹிரா கல்லூரியும் மோதவுள்ளன. இப்போட்டி கொழும்பு ஹெவ்லொக் பார்க்கில் நடைபெறும். இன்று வெள்ளிக்கிழமை (25) இவ்வணிகள் நேருக்கு நேர் மோதவுள்ளதுடன் கடைசி நான்கு இடங்களுள் ஒரு இடத்தைப் பிடிக்கும் முனைப்பில் இவ்வணிகள் மோதும் என எதிர்பார்க்கலாம்.

நாளை (26) புனித அந்தோனியார் கல்லூரி மற்றும் புனித ஜோசப் கல்லூரி அணிகளுக்கிடையிலான போட்டி ஹெவ்லொக் மைதானத்தில் மாலை 4.15 மணிக்கு ஆரம்பமாகும். ஞாயிற்றுக்கிழமை (27) ஹெவ்லொக் மைதானத்தில் நடைபெறும் கடைசி காலிறுதிப் போட்டியில், டிரினிட்டி கல்லூரிக்கு எதிராக புதிய லீக் சம்பியன்களான புனித பீட்டர்ஸ் கல்லூரி போட்டியிடவுள்ளது.

அரையிறுதிப் போட்டிகள் செப்டெம்பர் 2ஆம் மற்றும் 3ஆம் திகதிகளிலும், மாபெரும் இறுதிப் போட்டி செப்டெம்பர் 10ஆம் திகதியன்று கொழும்பு றோயல் கல்லூரி விளையாட்டு மைதானத்திலும் நடைபெறும். போட்டிகளுக்கான பிரதான அனுசரணையை டயலொக் ஆசியாட்டா நிறுவனம் வழங்குகிறது. இப்போட்டிகளின் அரையிறுதிப் போட்டிக்கு நடப்புச் சம்பியனான இசிப்பத்தான கல்லூரி நேரடியாகத் தகுதி பெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளது.

# ஐ.பி.எல்லில் ஆண்டுக்கு ரூ.129 கோடிக்கும் அதிக வருமானம் ஈட்டும் நடிகை ஜிந்தா




பஞ்சாப் கிங்ஸ் அணியின் உரிமையாளர்களில் ஒருவரான நடிகை பிரீத்தி ஜிந்தா ஐ.பி.எல். தொடர் மூலமாக மட்டும் ஆண்டுக்கு ரூ.129 கோடிக்கும் அதிக வருமானம் ஈட்டுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

2008ஆம் ஆண்டு பஞ்சாப் அணியை நடிகை பிரீத்தி ஜிந்தாவும் அவரது காதலருமான வாடியா குரூப் நிறுவனருமான நெஸ் வாடியாவும் இணைந்து வாங்கினர். இதையடுத்து கடந்த 2022ஆம் ஆண்டு பிரீத்தி ஜிந்தா மற்றும் நெஸ் வாடியா இருவரும் தலா 23 சதவிகித பங்குகளை தங்களிடம் வைத்துக் கொண்டு மீதமுள்ள கே.பி.எச். ட்ரீம் கிரிக்கெட் நிறுவனத்தின் மோகித் பர்மனிடம் 46 சதவிகித பங்குகள் விற்பனை செய்யப்பட்டன. அதேபோல் மீதமுள்ள 8 சதவிகித பங்குகள் கரண் பால் என்பவரிடம் விற்கப்பட்டன.

இதன் மூலம் பஞ்சாப் அணியின் உரிமையாளர்களாக மோகித் பர்மன், நடிகை பிரீத்தி ஜிந்தா, நெஸ் வாடியா மற்றும் கரண் பால் ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர். இந்த நிலையில், ஐ.பி.எல். தொடர் மூலமாக கடந்த ஆண்டு பஞ்சாப் அணி சுமார் ரூ.259 கோடி வருமானம் ஈட்டியதாக தகவல் வெளியாகியுள்ளது. அதில் பிரீத்தி ஜிந்தா மற்றும் நெஸ் வாடியா இருவரும் இணைந்து ஆண்டுக்கு ரூ.129 கோடிக்கும் அதிக வருமானம் ஈட்டி வருகின்றனர்.

இதுவரை ஒருமுறை கூட சம்பியன் பட்டம் வெல்லவில்லை என்றாலும், பஞ்சாப் அணி மூலம் உரிமையாளர்கள் ஆண்டுக்கு இவ்வளவு பெரிய வருமானம் ஈட்டி வருவது கூடுதல் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.




# யாழ். மத்திய கல்லூரிக்கு எதிரான போட்டியில் ஏறாவூர் அலிகார் மத்திய கல்லூரி வெற்றி



ரமணி

இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கம் நடத்தும் அகில இலங்கை ரீதியிலான 20 வயதுக்குட்பட்ட முதலாம் பிரிவு பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் பி குழுவில் இடம்பெறும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மற்றும் மட்டக்களப்பு, ஏறாவூர் அலிகார் மத்திய கல்லூரி அணிகளுக்கிடையிலான போட்டி மட்டக்களப்பு வெபர் விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் அலிகார் மத்திய கல்லூரி 6 - 4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கத்தின் 20 வயதுக்குட்ட முதலாம் பிரிவில் முதன் முறையாகத் தெரிவுசெய்யப்பட்டு போட்டிகளில் பங்குபற்றிய ஏறாவூர் அலிகார் மத்திய கல்லூரியின் ஐந்து வீரர்கள் கழக மட்டப்போட்டிகளில் விளையாடி வருகின்றனர். இப்போட்டிக்கு பிரதான மத்தியஸ்தராக ஜே.சி.நிமலனும், உதவி மத்தியஸ்தர்களாக டி.காந்தன், வீ.எம்.எம்.முஹ்சின் ஆகியோரும் கடமையாற்றினர்.

முதலாம் பிரிவு மட்டத்திலுள்ள அகில இலங்கை ரீதியாக மொத்தமாக 20 பாடசாலைகள் அணிகள் இச்சுற்றுத் தொடரில் பங்கேற்பதுடன் வடக்கிலிருந்து 4 அணிகளும் கிழக்கிலிருந்து 2 அணிகளும் விளையாடுவது பெரும் சாதனையாகப் பார்க்கப்படுகின்றது.

வடக்கும் கிழக்கும் பங்கேற்ற இளம் சிங்கங்களின் உதைபந்தாட்ட சமரைப் பார்ப்பதற்காக கூடுதலான ரசிகர்களும், பாடசாலை மாணவர்களும் மைதானத்திற்கு வருகை தந்து தமது ஆதரவையும் வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அகில இலங்கை ரீதியாக மொத்தமாக விளையாடும் 20 பாடசாலை அணிகளில் 13 பாடசாலைகள் தமிழ், முஸ்லிம் பாடசாலைகள் என்பது விசேட அம்சமாகும்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7